தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

ஏப்ரல் 2005



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எரிமலை

# உள்ளே...



4

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர்
திரு சு.ப.தமிழ்ச்செல்வன்
அவர்களுடனான நேர்காணல்



9

[தமிழ்] சிறுவர்களும் [பரப்புரைப்] போரும்

## கட்டுரைகள்


நாதன் 09

கார்த்திஜா ஓம்பிரகாஸ் 18

தி.தவபாலன் 30

நித்தியன் 47

தா.விவேகானந்தன் 48

மீரா 52


## உரையாடல்


மீரா 14


## அணையாததீபம்


2ம் லெப்.பூபாலினி 38


## சிறுகதை


ஆதிலட்சுமி - சிவகுமார் 26

மலைமகள் 34

போராளி காந்தா 40

முல்லை யேசுதாசன் 44




## கவிதை


புதுவை இரத்தினதுரை 12

மாலிகா 25

போராளி காந்தா 29

பே.சுகந்தன் 31

வாசுதேவன் 32

ந.கிருஷ்ணசிங்கம் 43

செல்வா 51

வை.சரவணன் 53


## தொகுப்பு


நிகழ்வும் பதிவும் 54

நினைவுக்குறிப்பு 56

மீள்பார்வை 57

பதிவுகள் 58




48

தலைகுனிந்து
நிற்கும்
தலைமுறை



20

புலிகளின் குரல் வானொலி
பிரதம செய்தியாளர் திரு.தவபாலன்
அவர்களுடனான நேர்காணல்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





மனித வரலாற்றில் என்றுமே நிகழ்ந்திராத, எவருமே சாதித்திராத, மகத்தான மனித அர்ப்பணிப்புக்களைக் கொண்டதாக எமது விடுதலைப் போராட்டம் புகழீட்டி நிற்கிறது. இந்த அற்புதமான தியாக வரலாற்றில் அன்னை பூபதி ஒரு உன்னதமான, தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளார்.

சத்தியத்திற்காகச் சாகத் துணிந்துவிட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தை படைக்க முடியும். இதற்கு அன்னை பூபதியின் தியாகம் ஒரு சிறப்பான எடுத்துக்காட்டு. சத்தியத்திற்காக, தர்மத்திற்காக அவர் சாவை அரவணைத்துக் கொண்டார். இந்த ஒப்பற்ற ஈகையால் ஒரு சாதாரண தாயான அவர், அசாதாரண சாதனையைப் புரிந்து தேசியத்தாய் என்ற அந்தஸ்திற்கு உயர்ந்தார்.

அறப்போரிலும் சரி, ஆயுதப்போரிலும் சரி எமது விடுதலைப் போர் உலக சாதனைகளைப் படைத்து வருகின்றது, மனித சிகரத்தை எட்டியிருக்கிறது.

அகிம்சையின் அறத்தையும், ஆன்மீக தர்மத்தையும் போதித்துவந்த பாரதநாடு ஆக்கிரமிப்புப் பூதமாக அன்றொருநாள் எம்மண்மீது கால் மிதித்தது. அப்பொழுது எமது போராளி ஒருவன் பாரத்தின் ஆன்மீக மரபில் அறப்போரைத் தொடுத்தான். காந்தி அடிகளின் சாத்வீக தத்துவத்தை பாரத நாட்டிற்குப் புகட்டிக்காட்ட விரும்பினான். ஆன்மீக உறுதிப்பாட்டில் அவனது உயிர்த்தியாகம் காந்தியின் அறக்கோட்பாட்டிற்கு ஒரு மகோன்னதமான செயற்பாட்டு வடிவம் கொடுத்தது.

பாரதத்தின் மடிந்து போன ஆன்மீகம் தமிழீழத்தில் புதுப்பொலிவுடன் புரட்சி வடிவத்தில் மறுபிறப்பு எடுத்தது.

திலீபனின் தியாகம் இந்திய மாயையைக் கலைத்தது. தமிழீழ தேசிய உணர்வைத் தட்டி எழுப்பியது. இந்த தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அன்னையின் அறப்போர் அமைந்தது.

அந்த வயோதிபத் தாய் நீதியின் நெருப்பில் தன்னை எரித்துக் கொண்டாள். அந்தத் தீ என்றும் அணையாத சுதந்திர தீபமாக எரிந்து கொண்டு இருக்கிறது.

## அன்னை பூபதியின் நினைவுநாள்

ஏப்ரல் 19

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்

1992ஆம் ஆண்டு அன்னை பூபதி நினைவுநாளை முன்னிட்டுத் தேசியத் தலைவர் அவர்கள் விடுத்த செய்தியிலிருந்து...



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

இருபத்திநான்காம் ஆண்டு

ஏப்ரல்

2005

திருவள்ளுவர் ஆண்டு 2036



ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrenees,

75020 Paris.

Tel: 01 - 43 58 11 42

Fax: 01 - 43 58 11 91

e.mail:erimalai@gmail.com


# தலைவாசல்

## கந்தலாகும் இலங்கை இறைமை

சிங்கள அரசியல்வாதிகள் தமக்கு வசதியான போதெல்லாம் தமது நாட்டின் இறைமை பற்றிப் பேசுவார்கள். தமிழர்கள் கோரும் நியாயமான உரிமைகளை வழங்குவதால் நாட்டின் இறைமைக்கு பாதிப்பு ஏற்படும் என்று அவர்கள் வாதிடுவார்கள். தமிழர்களின் உரிமைகளை மறுப்பதற்குச் சிறந்த தட்டிக் கழிப்பு உபாயமாக இறைமைக் கோட்பாட்டை அவர்கள் காலம் காலமாக பயன்படுத்துகிறார்கள். ஆனால் ஈழத் தமிழர்களின் இராணுவ பலம் மேலோங்கும் போது அவர்கள் நாட்டை அடமானம் வைப்பதற்குத் தயங்கமாட்டார்கள். இதற்கு பல உதாரணங்கள் சென்ற நூற்றாண்டின் பிற் பகுதியிலும் இப்போதும் காணப்படுகின்றன. விடுதலைப்புலிகளை நிராயுத பாணிகளாக்கித் தமிழர்களை அடிமை கொள்வதற்காக 1987ல் அவர்கள் இந்திய அரசோடு இணைந்து இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம் செய்தார்கள். இதன் காரணமாகத் திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் இந்தியர்கள் வசமாகிவிட்டது. இப்போது இலங்கையின் எரிபொருள் வர்த்தகம் படிப்படியாக இந்திய நிறுவனங்கள் வசமாகிவிட்டது. அத்தோடு மன்னார் குடாக்கடலில் எண்ணெய் தோண்டும் பணியையும் இந்திய அரசுடமை நிறுவனங்களுக்கு கையளிக்க வேண்டிய கட்டாய நிலையில் இலங்கை இருக்கிறது. இந்த இக்கட்டான நிலையிலும் புலிகள் கோரும் இடைக்கால தன்னாட்சி உரிமை களை வழங்குவதால் தமது இறைமை பறிபோய்விடும் என்ற புலம்பல் கேட்ட வண்ணம் உள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்கட்டமைப்புப் பணியாற்றுவதற்கு ஒரு பொதுக் கூட்டமைப்பு உருவாக்குவதிலும் அரசு தயக் கம் காட்டுகிறது. புலிகளைச் சமபங்காளியாகச் பொதுக் கூட்டமைப்பில் சேர்த் துக் கொண்டால் அது நாட்டின் இறைமைக்குச் சேதம் விளைவிக்கும் என்ற கார ணம் காட்டப்படுகிறது.

இலங்கைத் தீவின் அருந்திரவியமான இறைமை ஏற்கனவே சட்ட பூர்வமாகப் பங்கீடு செய்யப்பட்டுள்ளதை பேரினவாதிகள் மறந்து விட்டார்கள். 2002ல் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரனும் சிறீலங்கா பிரதமர் ரணிலும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம். 'சிறு தீவில் இரு நாடுகளை இருப்ப தையும் அவற்றிற்கு இடையில் துல்லியமான எல்லைகளும் தரைப்பரப் புக்களும் அமைவதையும் எடுத்துகாட்டுகின்றன. இப்போது இரு அதிகார மையங்களும் இரு தலைமைகளும் இருப்பது வெளிப்படை. இதைச் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது. சிறீலங்காவுக்கான உலக வங்கி இயக்குநர் பீற்றர் கரோல் மார்ச் மாதம்(2005) இதை சிங்கள ஆட்சியாளர்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் வலியுறுத்தியுள்ளார். 'ஒரு உத்தியோக அந்தஸ்தற்ற தனியரசு எல்ரிரிஈ யின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் காணப்படுவதால் சுனாமி உதவி நிதி ரூபா ஆறு பில்லியனை அவர்களுக்கு வழங்குகிறோம்' என்கிறார் பீற்றர் கரோல்ட். உலக வங்கி இயக்குநரை கடுமையாக விமர்சிக்கும் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் அதே காலப்பகுதியில் இந்தியா சென்று என்ன சொன்னார் தெரியுமா? 'இலங்கையில் எந்த வகையான இறுதித் தீர்வை இந்தியா எதிர்பார்க்கிறது என்பதை அந்த நாடு கூறவேண்டிய நேரம் வந்துவிட்டது' எங்கே போய்விட்டது இறைமை. ஆண்டான் அடிமை என்ற நிலைக்கு அல்லவா இலங்கை சென்றுவிட்டது. இந்தியப்படை வந்தபோது கடும் எதிர்ப்புக் காட்டிய ஜே.வீ.பியினர் இப்போது கதிர்காமரிலும் பார்க்க மோசமான இந்தியதாசர்களாக மாறிவிட்டார்கள். இறைமையைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள். இந்தியாவையும் புலிகளையும் மீண்டும் மோதவிட்டு வேடிக்கை பார்க்கத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். 1987லும் சரி இன்றும் சரி இறைமைக்காகப் போரிடுபவர்கள் ஈழத்தமிழர்கள் மாத்திரமே.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# "விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகள் பற்றி 12 நாடுகளுக்கு விளக்கம்" - தமிழ்ச்செல்வன்

சமாதான முயற்சிகள் மற்றும் ஆழிப்பேரலை அனர்த்த பொதுக் கட்டமைப்பு தொடர்பான விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகள் பற்றி 12ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தாங்கள் விளக்கமளித்துள்ளதாக அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் புலிகளின் குரல் வானொலிக்கு வழங்கியுள்ள செவ்வியில் தெரிவித்துள்ளார்.



## புலிகளின் குரல் வானொலிக்கு அவர் வழங்கிய செவ்வி:

**கேள்வி: இந்த சமாதான காலத்தில் நீங்கள் பல தடவைகள் ஐரோப்பிவிற்கும், ஆபிரிக்க நாடுகளுக்கும் சென்று வந்திருக்கிறீர்கள். இந்தப் பயணமூலம் எமது தேசிய இனப்பிரச்சினையை நீங்கள் எவ்வளவு தூரம் இந்த நாடுகள் புரிய வைப்பதற்கான முயற்சிகளை எடுத்திருக்கிறீர்கள்?**

பதில்: நாங்கள் முக்கியமாக இந்தத் தடவை 12 ற்கும் மேற்பட்ட நாடுகளிற்கு சென்றிருக்கின்றோம். அங்குள்ள வெளிவிவகார அமைச்சர்களையும், வெளிவிவகார அமைச்சைச் சார்ந்த அதிகாரிகளையும், அங்கேயுள்ள பொருளாதார அபிவிருத்தித்திக்கான அமைச்சர்கள், அதிகாரிகள் போன்றோரையும் சந்தித்திருக்கின்றோம். அத்துடன் விசேடமாக இந்தத் தடவை தென்னாபிரிக்காவிற்கும் சென்றிருந்தோம். அங்கே தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ்(ஏ.எம்.சி) பிரதிநிதிகளைச் சந்தித்திருக்கின்றோம். அந்த நாட்டினுடைய உப ஜனாதிபதியை, தேசிய காங்கிரசினுடைய மிக முக்கியமான தலைவர்களை, அங்குள்ள தமிழ் மக்களை நாங்கள் சந்தித்தது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது.
கூடுதலா நாங்கள் இந்தப் பயணத்தின் போது இரண்டு விடயங்களை முக்கியமாக எடுத்துக் கொண்டிருந்தோம்.

ஒன்று: தற்பொழுது இந்தச் சமாதான சூழ்நிலை ஒரு நெருக்கடியான கட்டத்தை அடைந்து. இந்தச் சமாதானச் சூழலை சீர்குலைக்கும் நோக்கோடு இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு எங்களுடைய தலைமைத்துவத்தின் நிலைப்பாடுகளை தெளிவாக்குவது.

இரண்டாவது: இருபது வருட யுத்த காலத்திலே நாங்கள் மனிதப் பேரழிவுகளைச் சந்தித்து ஓர் பெரிய மனிதாபிமான நெருக்கடியைச் சந்தித்து நின்ற சூழலில் சுனாமி இயற்கைப் பேரழிவு ஏற்பட்டு எங்களுடைய மக்கள் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இறந்தும் எமது தமிழீழத்தினுடைய முழுக் கரையோரப் பிரதேசங்களும் அழிந்த நிலையில் நாங்கள் சர்வதேச சமூகத்திடம் ஓர் மனிதாபிமான உதவியைக் கோரி நிற்கின்றோம். இந்த மனிதாபிமான உதவிகளைச் சர்வதேச சமூகம் செய்ய முனைந்தும் ஆயத்தமாக இருக்கின்ற வேளையில் சிங்கள அரசாங்கம் தடைகளைப் போட்டு இதை ஒரு நெருக்கடி நிலைக்கு உட்படுத்துகின்றது என்பதையும், தெளிவாக்கும் நோக்கோடுதான் எங்களது பயணத்தைத்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தொடங்கியிருந்தோம். எங்களுடைய தேசியத் தலைவரின் பணிப்பிற்கிணங்கத்தான் இந்தப் பயணம் தொடங்கப்பட்டது. இந்த இரு விடயங்களையும் நாங்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றோம். மற்றும் எங்களுடைய மக்களின் நியாயமான அபிலாசைகள் பற்றி கடந்த மூன்று வருடகால சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட நெருக்கடிகள், இலங்கை அரசாங்கத்தினுடைய நேர்மையீனங்கள் பற்றி நாங்கள் வலியுறுத்தி விளக்கியிருக்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் அவர்களோடு உரையாடுகின்ற பொழுது, பல விடயங்களை அவர்கள் ஒருபக்க கருத்துக்களாகவே அவர்கள் அறிந்து கொண்டிருப்பது எங்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது. எங்களுடைய தரப்பிலிருந்து உண்மை நிலைப்பாடுகளை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்புக்கள் இல்லாததால் இலங்கை அரசாங்கம் உண்மைக்குப் புறம்பான தவறான கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் அங்கே எடுத்துச் சொல்லியிருப்பது எங்களால் உணர முடிந்தது. ஆகவே இந்தப் பணத்தில் எங்கள் நிலைப்பாடுகளை, எங்களுடைய மக்களின் நிலைப்பாடுகளை, எங்களுடைய தலைமையின் நிலைப்பாடுகளை நேரடியாக இந்த நாடுகளினுடைய அரசின் உயர்மட்டத்திற்கு எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது என நான் நினைக்கின்றேன். அந்தவகையில் இந்தப் பயணம் ஓரளவு எங்களது நோக்கத்திற்கு உகந்ததாகவும், வெற்றிகரமாகவும் அமைந்தது என்றே நான் கருதுகின்றேன்.

**கேள்வி: ஸ்ரீலங்கா அரசாங்கம், இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்களும், சமாதானத்தை வென்றெடுப்பதற்கான எந்தவிதமான விருப்பத்தையும் முழுமையாகக் கொண்டிருக்கவில்லை என்ற விடயத்தை இந்த வெளிநாட்டுச் சக்திகள், வெளிநாட்டு அரசாங்கங்கள் சரியாகப் புரிந்து கொண்டிருக்கின்றனவா?**

பதில்: ஆமாம். ஏனெனில் அவர்களுக்கு பல சந்தேகங்கள் இருந்தது. அதாவது சமாதான முன்னெடுப்புக்கள் தொடங்குவதற்கான தாமதங்கள், தடைகளைப் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் மீதுதான் அவர்கள் குற்றம் சுமத்துகின்ற பரப்புரையை உலகளாவிய ரீதியில் கட்டவிழ்த்து விட்டிருந்தார்கள். ஆகவே நாங்கள் வந்து ஆதார பூர்வமாக நடந்த நிகழ்வுகளை, சம்பவங்களை எங்களுடைய நிலைப்பாடுகளைத் தெளிவாக்குகின்ற போதுதான் அவர்களால் புரிந்து கொள்ளக் கூடியதாக, அந்த அரசின் பக்கம்தான் பிரச்சினை இருக்கின்றது என்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். அவர்கள் பல சந்தேகங்கள், கேள்விகளைத் தொடுத்தார்கள். நாங்கள் அதற்கு சரியான நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியபோது அவர்கள் அவற்றைப் புரிந்து கொண்டதாகவே எங்களால் உணர முடிந்தது.

அடுத்ததாக இந்த சுனாமி அனர்த்தத்திலே கூட, ஒரு மனிதப் பேரழிவு, மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டிருக்கும் சூழலில் சர்வதேச சமூகம் உதவ முன்வந்திருக்கின்ற சூழலில், அந்த உதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் இழுபட்டுக்கொண்டு போவதில் உள்ள சிக்கல்களையும் நாங்கள் விளக்கினோம். ஏனெனில் ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கத்தோடு இணைந்து மனிதாபிமான நெருக்கடிக்கு நாங்கள் தீர்வு காணுவதற்கு ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்குதவற்கு நாங்கள்தான் முதலில் விரும்பியிருக்கிறோம். அதற்கான ஆலோசனைகளையும் நாங்கள் கொடுத்தோம். இலங்கை அரசாங்கம் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டது போல அறிக்கைகளை விடுவதிற்தான் தன்னுடைய நேரத்தை செலவழிக்கிறதே தவிர, ஆக்க பூர்வமாக இப்படி ஒரு கட்டமைப்பை நிறுவி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் சென்றடைவதற்கான ஏற்பாடுகளை செய்வதில் அவர்கள் எந்த ஆர்வமும் எடுக்கவில்லை. இதை நாங்கள் அவர்களுக்கு வலியுறுத்தினோம். ஏற்கனவே இரு தரப்பும் ஆலோசனைகளைப் பரிமாறிக் கொண்டாலும், இரு தரப்பு ஓர் இணக்கப்பாட்டிற்கு வராத சூழலில், நோர்வே அனுசரணையாளர்கள் என்ற வகையில் அவர்கள் ஒரு வேண்டுகோளை விடுத்தார்கள். தாங்கள் நடுநிலையாக இரு தரப்பிற்கும் ஒரு ஆலோசனைகளைத் தருகிறோம், அதை நீங்கள் ஏற்றுக் கொள்ள முடியுமா என்று. அதை எங்களுக்கு அவர்கள் தந்தவுடனேயே எங்களுடைய தலைவர் அதை ஏற்றுக் கொண்டு நாங்கள் எங்களுடைய இணக்கப்பாட்டை அறிவித்திருக்கின்றோம்.

ஆகவே இப்படியான போக்குகள் எப்படி தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள், எப்படி தமிழர்களை நெருக்கடிக்குள்ளாக்க வேண்டும் அவலத்திற்கு உட்படுத்த வேண்டும், பேரழிவின் அவலத்தின் விழிம்பில் நிற்கின்றபொழுது கூட தமிழர்கள் எப்படி தள்ளிவிடலாம், அழிக்கலாம் போன்ற சிந்தனைகளுடன்தான் இலங்கை அரசாங்கம் செயற்படுகின்றது

சுவிற்சர்லாந்தின் வெளிவிவகாரத் தூதுவர் தலைமையிலான உயர்நிலைக் குழுவுடனான சந்திப்பின் போது திரு.தமிழ்ச்செல்வன் அவர்கள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இத்தாலியில் தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினர்

என்பதைத்தான் நாங்கள் அவர்களுக்கு வலியுறுத்தினோம். அவர்களும் அதை விளங்கிக் கொண்டார்கள். ஆகவே நான் நினைக்கின்றேன் இலங்கை அரசாங்கத்திற்குத் தான் அவர்கள் கடுமையான அழுத்தத்தைப் பிரயோகிப்பார்கள்.

எங்களுடைய பயணத்தின் போது பல நாடுகளிற்குச் சென்ற பொழுது அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் இதற்கு முரண்பட்டு நின்கின்றார்கள், தமிழீழ விடுதலைப் புலிகள்தான் இதற்குத் தடையாக நிற்கின்றார்கள் என்ற மாதிரியான ஒரு நிலைப்பாட்டை சில நாடுகள் எடுத்திருந்ததையும் உணர முடிந்தது. ஆனால் இந்தச் சந்திப்பின் மூலம் நாங்கள் இவற்றை இல்லாது செய்திருக்கின்றோம். உண்மை நிலைப்பாட்டை நாங்கள் எடுத்து விளக்கியதற்கூடாக அவர்கள் உணர்த்தியது போலவே என்னால் உணர முடிந்தது.

கேள்வி: இப்போது கடந்து கொண்டு போகின்ற எங்களுடைய தமிழ் மக்களின் எதிர்காலம், ஒவ்வொரு நாளும் துன்பம் நிறைந்ததாகவும், ஏராளமான பிரச்சனைகள், இன்று இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேறாத நிலைமையில் இருப்பதையும், இராணுவம் எமது அரசியற் போராளிகளை அடித்துத் துன்புறுத்துவதும், சுட்டுக்கொல்லப்படுவதும் போன்ற சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருப்பது குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

பதில்: உண்மையிலேயே இலங்கை அரசாங்கம் சமாதானத்தை விரும்பவில்லை என்றுதான் நான் நினைக்கின்றேன். நாகரிகமான முறையில் பேசி ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு இலங்கை அரசாங்கம் மனப்பூர்வமாகச் செயற்படவில்லை. எப்படியாவது விடுதலைப் புலிகளையும் மக்களையும் சீண்டி ஒரு யுத்தத்திற்கு இழுக்கின்ற போக்கைத்தான் சிறீலங்கா அரசாங்கம் அண்மைக் காலமாகத் தீவிரப்படுத்தியிருக்கின்றது.

ஏனெனில் ஒப்பந்தம் வருகின்ற பொழுது நாங்கள் ஒன்றைத் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருந்தோம். கடந்த கால அனுபவம் என்ற ரீதியில் எங்களிற்கு நீண்ட வரலாறு இருக்கின்றது. இந்த யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை, சமாதான முயற்சிகள் என்பவற்றின் பொழுது எப்படி இலங்கைப் படைகள், எப்படி இலங்கை அரசாங்கம் அந்தச் சூழ்நிலையைக் குழப்பினார்கள் என்பது எங்களுக்கு ஒரு பட்டறிவாக இருக்கிறது. அதை வைத்துக் கொண்டுதான் நாங்கள் இந்த ஒப்பந்தத்தில் முக்கியமாக சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியதாக குறிப்பிட்டது. இந்தக் கூலிப்படைகள், இலங்கைப் படைகள் வைத்திருக்கின்ற தமிழர் விரோதக் குழுக்களை, அவர்கள் தமிழ் மண்ணிலே, எங்களுடைய பிரதேசங்களில், எங்களுடைய தாயத்தில் செயற்பட்டால் நிச்சயமாக நிலமைகள் மோசமடையும். அது இலங்கை இராணுவம்தான் எங்கள் மீது மறைமுகமாகத் தொடுக்கின்ற போர். அது நிறுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தின வகையில்தான் இந்த ஒப்பந்தத்தில் வருகின்ற 1.8 என்கின்ற சரத்தில் தெளிவாகச் சொல்லப்படுகின்றது.



அயர்லாந்தில் தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினர்

அதாவது வடக்குக் கிழக்கில் இராணுவத்தோடு சேர்ந்து இயங்குகின்ற ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு அவை எமது தாயத்திலிருந்து வெளியேற்றப்படவேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. முதலில் இருந்த அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தை ஓரளவு ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தங்கள் இருந்த வகையில் அவர்கள் அதைச் செய்தார்கள். பின்பு வந்த அரசாங்கம் இதைத் தீவிரப்படுத்தியிருக்கிறது.
நீங்கள் எமது தென்தமிழீழத்தில் பார்த்தீர்கள் என்றால், முன்பு இராசிக் குழு, மோகன் குழு போன்ற குழுக்களை ஆயுதப்படைகள் வைத்துக் கொண்டுதான் படுகொலைகள் எமது மக்கள் மத்தியில் பெரிய நெருக்கடிகளையும் அவலங்களையும் கொடுத்துக் கொண்டிருந்தது. அதுபோல இப்போது எங்களால் வெளியேற்றப்பட்ட கருணா என்பவனோடு சேர்ந்து ஒரு ஆயுதக் குழுவை உருவாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளின் கட்டமைப்புக்களைச் சிதைப்பதற்கு அந்தப் பெயரில் ஸ்ரீலங்காப் படைகள்தான் இப்படியான படுகொலைகளைச் செய்து



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் விடுதலைப் புலிகளையும் மக்களையும் சீண்டி இதன் மூலம் இவர்கள் சமாதானத்திற்கு விரோதமானவர்கள், சமாதான விரோதிகள் என்று உலகளாவிய ரீதியில் எங்களை வெளிப்படுத்துவதற்கு இப்படியான படுகொலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.



பின்லாந்தில் தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினர்

இதைச் சர்வதேச சமூகம் புரிந்து வருகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்து பொறுமை காக்க முடியாது. எமது மக்களையும் எமது தேசத்தையும் பாதுகாக்கும் தார்மீகப் பொறுப்பு எங்களிற்கு இருக்கிறது. அந்தவகையில் எமது தேசியத் தலைவர் நிலைப்பாடுகளைத் தெளிவாக்கியிருக்கிறார். நிச்சயமாக விரைவிலேயே இதற்கு தீர்க்கமான பதில்கள் அளிக்கப்படும் என நான் நினைக்கிறேன். ஆகவே அந்தவகையில் இந்த நடவடிக்கைகள் எல்லாமே ஒட்டுமொத்தமாக இந்தச் சமாதானச் சூழலைச் சீர்குலைத்து மீண்டும் இலங்கைத் தீவில் நெருக்கடியை ஏற்படுத்தி, தமிழ் மக்கள் மீது ஒரு யுத்தத்தைத் தொடுக்கின்ற ஒரு போக்கைத்தான் இலங்கைப் படைகளும் இலங்கை அரசங்கமும் முன்னெடுத்து வருவதாக எனக்குத் தோன்றுகின்றது.

கேள்வி: தென்னாபிரிக்கப் பயணம் குறித்து சிறப்பாக நீங்கள் ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?

பதில்: உண்மையிலேயே தென்னாபிரிக்கப் பயணம் என்னால் மறக்க முடியாத மனப்பதிவாக இருக்கிறது. அங்கு போன பொழுதுதான் அந்த நாட்டிலே அதன் அரசு, மக்கள், தென்னாபிரிக்க விடுதலைக்காக போராடிய தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள், அவர்களின் உணர்வு பூர்வமான வெளிப்பாடுகள், அதிலும் முக்கியமாக அந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள், பல லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். மிக மகிழ்வாக, நிறைவாக வாழ்கிறார்கள். நான் பலஇடங்களில் பெருந்தொகையான மக்களைச் சந்தித்தேன். எதிர்பாராத விதமாகச் சில இடங்களில் போனபொழுது கலாச்சார நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தது. சிறுவர்களின் நாடகம் ஒன்று தமிழ்மொழியில் நடைபெற்றது. அதில் 700 - 800 மக்கள் கலந்து கொண்டிருந்தனர். அதில் என்னைப் பேசும்படி அழைத்தார்கள். அப்போது அந்த மக்களின் உணர்வுகளைப் பார்த்தேன். தமிழைக் காப்பதற்கும் தமிழ் மொழியைப் பேணிப் பாதுகாப்பதற்கும் அவர்கள் எடுக்கிற கடுமையான முயற்சியை அதில் என்னால் உணரக் கூடியதாக இருந்தது. அது மட்டுமல்ல எமது தலைவர் மீதும், எமது போராட்டம் மீது அவர்கள் வைத்திருக்கின்ற அளப்பெரிய பற்றுதல் என்னை உணர்ச்சி வசப்படுத்தியது.

எல்லோரும், அங்குள்ள எல்லோருமே எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரன் வாழ்க, தமிழீழம் மலர்க என்ற கோசத்தை எழுப்பினார்கள். அதைவிட தலைவருக்கு தங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும்படி சொன்னார்கள். இது என்னை உணர்ச்சி வசப்படுத்தியது. ஏனெனில் அங்கு வாழ்கின்ற அத்தனை தமிழ் மக்களும் எங்கள் தலைவர் மீதும் எமது போராட்டம் மீதும் உறுதியான நம்பிக்கையையும் பற்றுறுதியையும் கொண்டிருந்ததை அங்கே பார்க்க முடிந்தது.

தென்னாபிரிக்க பேராயர் டுட்டுவுடன் திரு சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# ஒடுக்கப்பட்ட இனங்களினது விடிவுக்காக அரும்பணியாற்றிய பாப்பரசர்: இரங்கல் செய்தியில் தமிழீழத் தேசியத் தலைவர்

பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் மறைவுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழீழத் தேசியத் தலைவர்
06 ஏப்பிரல் 2005 அன்று வெளியிட்ட இரங்கல் செய்தி:

மானுடத்தின் விடிவிற்காக அயராது உழைத்த ஒரு மகத்தான ஆன்மீகத்தலைவரை உலகம் இழந்துவிட்டது.

உலகசமாதானத்திற்கும், தேசங்கள் மத்தியிலான சக வாழ்விற்கும், சகல மதத்தவர்களதும் ஒத்திசைவான நல்லு றவுக்கும், புனித பாப்பரசர் ஆற்றிய பணி அற்புதமானது, அனைவராலும் போற்றப்படுவது.

உலகத்தின் உன்னதமான ஆன்மீகத்தலைவர் என்ற ரீதி யில், வறுமைப்பட்ட மக்களதும், ஒடுக்கப்பட்ட இனங்களி னதும் விடிவுக்காக அவர் அரும்பணியாற்றினார். அன்பு, காருண்ணியம், சகோதரத்துவப் பண்பு போன்ற சீலங்களை அவர் பரப்புரை செய்தார்.



சுதந்திரம், விடுதலை, சமத்துவம் போன்ற உயரிய மனித விழுமியங்களில் நம்பிக்கை கொண்ட அனைத்து மனிதப் பிறவிகளும் பாப்பரசரின் உன்னதமான வாழ்க்கையையும், அவரது உயரிய சிந்தனைகளையும் என்றும் தமது நெஞ்சில் நிறுத்தி அவரை கௌரவிப்பார்கள்.

தமிழ் மக்களின் சார்பாக எமது ஆழ்ந்த துயரையும் கவலையையும் தெரிவிக்கிறேன் என்றார் அவர்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# [தமிழ்] சிறுவர்களும் [பரப்புரைப்] போரும்

## - சில பதிவுக் குறிப்புக்கள் -

நாதன்

கடந்த பெப்ரவரியில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் சிறுவர்களும் ஆயுதப்போரும் (Children and Armed conflict) எனும் விடயம் தொடர்பான தனது அறிக்கையை பாதுகாப்புச் சபைக்கு அனுப்பி வைத்தார். ஐ.நாவின் உயர் அதிகாரபீடமான பாதுகாப்புச் சபையில் கடந்த சில வருடங்களாக ஆய்வுக்குட்பட்டுள்ள இவ்விடயம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய காலக் கடப்பாட்டைக் கொண்டுள்ள செயலாளர் நாயகம் திரு.கொபி அனான், போர் இடம்பெறும் நாடுகளில் அகப்பட்டு துன்புறும் சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக தனது யோசனைகளை தனது அறிக்கையில் முன்வைத்தார்.

சிறுவர்களைக் கொலைசெய்தல், சிறுவர்களின் பாடசாலைகள் - இல்லங்கள் மீதான குண்டுவீச்சுக்கள், சிறுவர்களுக்கான மனிதாபிமான உதவிகளைத் தடைசெய்தல், சிறுவர்கள் மீதான பாலியல் பலாத்காரம், சிறுவர்களை கடத்தல் மற்றும் சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்தல் போன்ற ஆறு விடயங்களை மன்னிக்க முடியாத குற்றங்களாக அடையாளப்படுத்தியிருந்தார். அத்துடன் அவர் சுமார் 40 விடுதலைஇயக்கங்கள் மற்றும் அரச எதிர்ப்பியக்கங்களையும், 13 அரச படைகளையும் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் முற்றாக கீழ்படியாத தரப்புக்களாக பதிவுசெய்திருந்தார்.

எதிர்காலத்தில் தனது யோசனைகளில் தெரிவிக்கப்பட்ட ஆறு குற்றச்செயல்களில் ஈடுபடும் தரப்பினரிற்கு எதிரான சர்வதேச நடவடிக்கைகள் தொடர்பான சில யோசனைகளையும் செயலாளர் நாயகம் தெரிவித்திருந்தார். மேற்கூறிய குற்றச்செயல்களில் ஈடுபடும் தரப்பினரில், குறித்த சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களுக்கு பயணத்தடை விதித்தல் உட்பட சில தண்டனை முறைகள் இனங்காணப்பட்டிருந்தன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் திரு.கொபி அனான்

இந்த அறிக்கையில் சிறீலங்கா தொடர்பான இரு சிறிய பந்திகளில் புலிகள் சிறுவர்களை போரில் ஈடுபடுத்துகின்றனர் என்கின்ற குற்றச் சாட்டு பதிவாகியிருந்தது. மேலும் இணைப்புப் பட்டியலிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயர் பதிவாக்கப்பட்டுள்ளது.

ஐ.நா செயலாளர் நாயகத்தின் இந்த அறிக்கை யானது அவரது சிறப்புப் பிரதிநிதியாகிய திரு. ஒலரா ஒட்டுணு அவர்களின் பணிமனையால் தயாரிக்கப்பட்டது. பாதுகாப்புச்சபை இந்த அறிக்கை தொடர்பான விவாதத்தினை நடாத் தியது. அப்போது, திரு. ஒலரா ஒட்டுணு அவர்கள் தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சுப.தமிழ் செல்வன் அவர்களால் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பப்பட்ட தகவலை பாதுகாப்புச் சபைக்கு தெரியப்படுத்தினார். தம்மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பற்றிய முழுமையான சந்திப்பிற்கு முன்வருமாறு புலிகள் விடுத்த அழைப்பு பாதுகாப்புச் சபைக்கு தெரிவிக்கப்பட்டது. முடிவில் பாதுகாப்புச் சபை சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான யோசனைகளை மேலதிக விவாதத்திற்காக ஒத்திவைத்தது.

ஆயுதப் போரில் சிறுவர்கள் ஈவிரக்கமற்ற முறையில் கொல்லப்படுவது, அனாதைகள் ஆக்கப் பட்டு வேரறுக்கப்படுவது, உணவு - இருப்பிட வாய்ப்புக்களின்றி துன்புறுவது மற்றும் சிறுவர்களை போரில் ஈடுபடுத்துவது தொடர்பான விவாதம் ஆபிரிக்காவில் தொண்ணூறுகளில் இடம்பெற்ற எண்ணற்ற உள்நாட்டு போர்களின் தாக்கத்தினால் வீரியம் பெற்றது. மேற்கு ஆபிரிக்க நாடுகளில் இடம்பெற்ற இனஅழிப்பு மற்றும் ஒடுக்குமுறை போர்களின் போது சிறுவர்கள் கணிசமான அளவில் ஆயுதம் தரித்து போரிடும் தரப்பினராக பங்குபற்றி கொடுமையான கொலைசெய் வோராக செயற்பட்டமை உலகின் மனச்சாட்சிகளை உலுப்பியது. தொலைக்காட்சிகள் இது தொடர்பாக ஒளிபரப்பிய காட்சிகள் கலகத்தை ஏற்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக சிறுவர்களை போரில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகளுக்கு எதிரான சர்வதேச விவாதம் ஆரம்பமாகியது.

இந்தக் விவாதங்கள் இடம்பெற்ற காலகட்டத்தில் உலகளாவியரீதியில் சிறுவர் உரிமைகள் சாசனம் (Convention on the Right to child 1989) பல்வேறு நாடுகளால் கையொப்பமிடப்பட்ட சாசனமாக இருந்தது. போர் இடம்பெறும் இடங்களில் ஆயுதப் போர்களிற்கான ஜெனீவா உடன் பாடுகள் அமுலில் இருந்தன. இந்த உடன்பாடுகள் சிறுவர்கள் மீதான வன்முறைகளை பொதுவாக எதிர்த்தன. எனினும், உலகசமூகம் போர்களின் போது எழுந்துள்ள புதிய சூழலினை கருத்தில் கொண்டு மேற்கூறப்பட்ட உடன்பாடுகளின் தீவிர அமுல்படுத்தலை ஆதரிக்கத் தொடங்கியது.

இந்தக் காலகட்டத்தில் அனைத்துலக சிறுவர் உரிமைகள் சாசனத்துடன் இணைந்ததான மாற்றீடான சாசனம் ( optional protocal) பிரேரிக்கப்பட்டது. வழமை போல் இந்த விவாதங்களின் போது உண்மையான சிறுவர் மீதான கரிசனை அரசியல், இராஜதந்திர வடிவம் எடுத்தது. சிறீலங்கா போன்ற மோசமான சிறுவர் வதை நாடுகள் இந்த மாற்றீடான உடன்பாடு தொடர்பான விவாதத்தில் இயல்பற்ற அக்கறை எடுத்தன. இதன் முடிவில் மே 2002ல் உருவான உடன்பாடு முன்பிருந்த அனைத்துலக சிறுவர் பாதுகாப்பு உடன்பாடுகள், சாசனங்கள் என்பனவற்றுடன் சேர்ந்ததாக புதியதொரு உலக சாசனமாக உருவானது. இந்தப் புதிய சாசனம் முன்னைய அனைத்து உடன்பாடுகளிலும் காணப்படும் சிறுவர்களை படையில் சேர்ப்பது தொடர்பான வயதெல்லையை 15லிருந்து 18ற்கு உயர்த்தும் அடிப்படையிலேயே எழுதப்பட்டது. இந்த வயதெல்லை தீர்மானிப்பில் அரசுகள் தமது மிக நுட்பமானதும், கபடத்தனமானது வழி நெறிமுறையை முன்னெடுத்தன. இந்த புதிய சாசனத்தின் கீழ் அரசுகள் 15 வயதெல்லையில் சிறுவர்களைப் படையில் சேர்க்கலாம் (கட்டாயமற்ற முறையில்) ஆனால் விடுதலை இயக்கங்கள் 18 வயது எனுமெல்லையை வைத்திருத்தல் வேண்டும்.

இந்த விடயத்தை சற்று ஆழமாக ஆராய்ந்த சர்வதேச சட்ட வல்லுனர்களும், திரு.சத்தி யேந்திரா போன்ற தமிழ் சட்டவியலாளர்களும் புதிய மாற்றீடான உடன்பாடானது சர்வதேச போர்ச்சட்டங்கள் நெறிப்படுத்தும் ஜெனீவா உடன்பாடுகளுடன் முரண்படும் விதத்தில் புதிய உடன்பாடுள்ளமையை வெளிப்படுத்தினர்கள். ஜெனீவா உடன்பாடு போரில் ஈடுபடும் இரு தரப்புக்கும் இடையே நிலவ வேண்டிய சமனான பொறுப்புணர்வையும், உரிமைகளையும் வெளிக் காட்டுகின்றது. இந்தப் புதிய மாற்றீடான உடன்பாடு அதனை நிராகரித்து போரில் ஈடுபடும் அரசுகளுக்கு 15 வயதெல்லையையும், எதிர்த்துப் போரிடும் அங்கீகாரம் பெறாத அரசுகளுக்கு 18 வயதெல்லையையும் கோடிட்டுக் காட்டுகின்றது. முடிவான ஆய்வில், இந்தப் புதிய வயதெல்லை போர்களின் போது சட்டபூர்வமற்றதாகின்றது. புலிகள் இந்த நீதியற்ற, இழுபறியான வயதெல் லைச் சிக்கலினை எதிர்கொள்கின்றனர்.

* * * *

1994ல் பதவிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையிலான கடும்போக்கான சிங்கள அரசு தமிழர் போரின் சர்வதேச நியாயத்தன்மையை இல்லாதொழிக்கும் வகையிலான விட்டுக் கொடுப்பற்ற வெளிவிவகார அணுகுமுறையை முன்னெடுத்தது. கதிர்காமர் என்ற தொழில் முறை சட்டத்தரணி இதற்காக கொழும்புக்கு இறக்குமதி செய்யப்பட்டார். தமது போர் நட வடிக்கைகளை சமாதானத்திற்கான போர் என்று ஒருபுறம் கூறிக்கொண்டு நீலன் திருச்செல்வம் போன்றவர்களின் உதவியுடன் ஒரு சமாதானப் பொதி வெறும் மேம்போக்கான பரப்புரை உத்தியடிப்படையிலான விவாதத்திற்கு விடப் பட்டது.

**அடிப்படையில் சிறுவர்களும் போரும் (The armed conflict and Children) என்கின்ற விடயம் தொடர்பான ஐநாவின் நிலைப்பாடு தமிழர்களுக்கும், விடுதலைப் போருக்கும் சார்பானது. சிறுவர்கள் மீதான குற்றமாக ஐநா முன்வைத்துள்ள விடயங்கள் சிங்கள அரசிற்கு எதிரானவை. ஆயினும், சிறுவர்களைப் படையில் சேர்த்தல் என்கின்ற விவகாரத்தை தமிழர்களின் விடுதலைப் போரிற்கு எதிரான விடயமாக சித்தரித்து அல்லது பாவனை பண்ணி சிங்கள அமைப்பு செயற்படுகின்றது.**

புலிகளின் ஓயாதஅலை3 நடவடிக்கையும், தீச்சுவாலை முறியடிப்புச் சமரும் இந்த அனைத்து கடும்போக்கான நடவடிக்கைக ளையும் முடிவுக்குக் கொண்டு வந்தது. நோர்வே தலையீட்டுடன் கூடிய சமாதான முயற்சிகள் அரங்கேறின. இந்த சமாதான முயற்சிகள் புலி களிற்கு நடைமுறையிலான சர்வதேச அங்கீ காரத்தையும், உறவுகளையும் ஏற்படுத்திக் கொடுத்தன. சமாதான முயற்சிகளை புலிகளை பொறிக்குள் இழுத்து - வீழ்த்தி - அழிக்கும் விவகாரமாக அணுகிய சிங்கள தரப்புக்கும், சில சர்வதேச சக்திகளுக்கும் புலிகளுக்கு எதிரான வலுவான சில பரப்புரை ஆயுதங்கள் தேவை யாயின. இதற்கு அகப்பட்டதே சிறுவர் விவகார மாகும்.

சுமார் 300000 தமிழ் சிறுவர்கள் இன்ன மும் தமது வீடுகளுக்கு திரும்பவில்லை, 50000 சிறுவர் பள்ளிகளுக்குச் செல்லவில்லை,


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

போசாக்கின்மை வீகிதத்தில் தமிழ் சிறுவர்கள் மிகப் பாதிக்கப்பட்டதரப்பினராகவுள்ளனர். ஆயினும் இந்த மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு எதுவித கரிசனைகளையும் வெளிக்காட்டாத சிங்கள அரசும், சில குறிப்பிட்ட சர்வதேச சக்திகளும் புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்த்து வைத்துள்ளதாக குற்றஞ் சாட்ட ஆரம்பித்தனர். இங்கு புலிகளின் படையில் சிறுவர்கள் என்பதை 18 வயதுக்குக் குறைந்தவர்கள் என அவர்கள் வியாக்கியானம் செய்கின்ற போதும் எந்த அறிக்கைகளிலும் அந்த வயதெல்லையை தெளிவாக வரையறுத்துத் தெரிவிப்பது கிடையாது. காரணம், வாசிப்பவர்கள் புலிகள் மேற்காபிரிக்கா போன்று 10 வயதுப்பிள்ளைகளை படையில் வைத்துள்ளனர் என்கின்ற காட்சிகள் மனதில் தோன்ற வேண்டும் என்கின்ற கபடத்தனமே.

தனது பிரதானமான சர்வதேச அறிக்கைகள் அனைத்திலும் இன்றைய சிறீலங்கா அரசு சிறுவர்களைப் படையில் சேர்த்தல் என்கின்ற குற்றஞ்சாட்டை கூறிவருகின்றது. மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) எனும் அமெரிக்க நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு பரப்புரையாளர் ஜோ பேக்கர் என்பவர் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அரச சார்பற்ற முகமாக வெளிப்பட்டு வருகின்றார். அத்துடன் இந்த நியாயமற்ற விடயம் தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தும் மிகப்பலவீனமான முயற்சியில் இந்த அம்மையார் இறங்கினார். கனடாவிலும், லண்டனிலும் இரு தமிழ் மக்களுக்கான போதனைக் கூட்டங்களை நடாத்தப் புறப்பட்டனர். எனினும், தமக்குத் துணையாக இந்த அம்மையார் அழைத்து வந்த தமிழர்களின் சுயவிலாசம் இந்த முயற்சிகளின் நேர்மையீன்மையை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

விடுதலை இயக்கங்களுக்குப் 18 வயதை எல்லை வயதாக வகுத்துக் கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் (UNICEF) வடக்குக்கிழக்கிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற அல்லது பிறவழிகளில் வரும் நம்பகமற்ற தகவல் கோப்புக்களை ஒன்று திரட்டி வழங்கும் அறிக்கையே இந்தப் பரப்புரையாளர்களின் பிரதான பரப்புரை ஆவணமாகும். எனினும், யூனிசெவ் நிறுவனத்தின் கொழும்பு பிரதிநிதியும், பேச்சாளர்களும் தமது இந்த நடவடிக்கைகளின் போது வெளிப்படுத்தும் அவசரமும், ஊடகங்களுக்குப் பாய்ந்தோடிச் சென்று செவ்வி கொடுக்கும் தன்மையும் பலதரப்புக்களினதும் விமர்சனத்திற்குள்ளாகியது. பிரபல மூத்த தமிழ் ஊடகவியலாளர் திரு.சிவநாயகம் அவர்கள், யூனிசெவ்வினால் தமிழ் சிறுவர்கள் பலியாக்கப்படுகின்றனர் என விபரித்தார். தமிழ் சிறுவர்களின் எதிர்கொள்ளும் பலவகை மனிதாபிமானச் சிக்கல்கள் பற்றிய போதியளவு விழிப்புணர்வை ஏற்படுத்தாது யூனிசெவ் கொழும்பு பணிமனை ஒற்றை திட்டத்துடன் இயங்குவது போல் செயற்படுவதை அவர் கடுமையாகவே விமர்சித்தார்.

* * * *

புலிகள் தற்போது முன்னெடுக்கும் சர்வதேச உறவுகளினை கட்டியெழுப்பி வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் போது எதிர் நோக்கும் பிரதான பிரச்சனைகளில் ஒன்றாக இந்த சிறுவர் விவகாரம் உருவாகியுள்ளது என்பதால் புலிகள் இதனை நுட்பமாகவே கையாளுகின்றனர்.

புலிகள் கொள்கை அடிப்படையில் சர்வதேச நெறிமுறைகளின் அடிப்படையில் சிறுவர்களைப் படையில் சேர்ப்பதில்லை என்பதை மிகதெளிவாகவே வலியுறுத்தியுள்ளனர். மறுபுறம், தமது படைகளில் இணையும் வயது குறைந்தவர்களை தமது படைக் கட்டுமானங்களில் இருந்து நீக்கினர்கள். படையில் சேர்வோரின் வயதுகளைக் கண்டுபிடிப்பதற்கான சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

பேச்சுவார்த்தைகளின் போது சிறீலங்கா தரப்பு இந்த விடயத்தை எழுப்பி போது ஐநா சிறுவர் நிதியத்துடன் இணைந்து போரில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவுவதற்கானதொரு பொது உடன்பாட்டிற்குப் புலிகள் உடன்பட்டனர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்த பணிக்கான நிறுவனமாக கையொப்பமிட்டது.

மறுபுறம், மட்டக்களப்புப் பகுதியில் 2003 பிற்பகுதி மற்றும் 2004 ஆண்டுகளில் இயக்க நெறிமுறைகளுக்கு முரணாக படைகளைக் கட்டுவதற்கான ஆட்சேர்ப்பில் ஈடுபட்ட கருணா என்பவர் விடுதலை இயக்கத்தை விட்டு நீக்கப்பட்டதன் பின்னர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வயது குறைந்தவர்களைப் புலிகள் பெற்றோர்களிடம் ஒப்படைத்தனர்.

திட்டமிட்டு சிங்கள அரசினாலும், பிற தரப்புக்களினாலும் முன்னெடுக்கப்படும் ஒற்றை நிகழ்ச்சித்திட்டத்தை எதிர்கொண்டு கையாளும் அதேவேளை சிறுவர்களின் பாதிப்புக்கள் தொடர்பாக விரிவான விவாதத்திற்கு ஐநா செயலாளர் நாயகத்தின் சிறுவர்களுக்கான சிறப்பு பணிமனையை அழைத்ததன் மூலம் நீண்ட ஆரோக்கியமான விவாதத்திற்கான தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர்.

இந்த முழு நடவடிக்கைகளானதும் சுவாரசியமான விடயம் சிறீலங்கா கிளப்பும் இந்தப் புரளி புலிகளுக்கு பல வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருகின்றது என்கின்ற பிந்திய சிந்தனையாகும். பாதுகாப்புச் சபை இந்த விவகாரத்தை எடுத்த போது போராட்ட வரலாற்றின் முதற் தடவையாக புலிகள் அனுப்பிய தகவல் பாதுகாப்புச் சபைக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டமை இந்தச் சிந்தனையை கிளப்பியது. கொழும்பு பத்தி எழுத்தாளர் கதிர்காமரைப் பாவித்துப் புலிகள் தமது இராஜதந்திர தொடு எல்லைகளை விரிவுபடுத்தி வருகின்றனர் என விபரித்தார்.

* * * *

அடிப்படையில் சிறுவர்களும் போரும் (The armed conflict and Children) என்கின்ற விடயம் தொடர்பான ஐநாவின் நிலைப்பாடு தமிழர்களுக்கும், விடுதலைப் போருக்கும் சார்பானது. சிறுவர்கள் மீதான குற்றமாக ஐநா முன்வைத்துள்ள விடயங்கள் சிங்கள அரசிற்கு எதிரானவை. ஆயினும், சிறுவர்களைப் படையில் சேர்த்தல் என்கின்ற விவகாரத்தை தமிழர்களின் விடுதலைப் போரிற்கு எதிரான விடயமாக சித்தரித்து அல்லது பாவனை பண்ணி சிங்கள அமைப்பு செயற்படுகின்றது.

ஆயினும் வல்லரசுகளும், சிற்றரசுகளும் 15 வயதில் தமது படைக்கான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளும் போது தமிழர்களும் ஒரு தேசிய இனத்துவ இறைமை அடிப்படையில் அதே உரிமைகளுடன் செயற்படுகின்றனர். மறுபுறம், ஜெனீவா போர்நியதிகள் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்புக்கும் அதே அந்தஸ்த்தை வழங்குகின்றது.



சிறீலங்கா சனாதிபதி சந்திரிக்கா



சிறீலங்கா வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# வேலிச் சண்டை விசாரணை அல்லது சமாதானக் கிழவனின் சாவு

புதுவை இரத்தினதுரை

பேச்சுவார்த்தை சுமந்து சுமந்து களைத்த
சமாதானக் கிழவனின் உயிர்போய்
இந்தோ விறைத்துக் கிடக்கிறான்.
இருந்த இறுதிமூச்சையும் வெளியிலெறிந்து
நேற்றுத்தான் விழிபிதுங்கி
மூச்சுத்திணறிச் சரிந்தான்.
எந்த உரிமைக்காரரும் அருகின்றி
எடுத்துப் பால்வார்க்க எவருமின்றி
வேண்டியவர்களுக்கு
வார்த்தையொன்றும் கூறாமல்
பொசுக்கெனப்போனது உயிர்.
உயிர்கொண்டுலவிய நாளில்
ஓடியோடி வந்த பலரைக் காணவில்லை
ஒதுங்கிக்கொண்டனர் எல்லோரும்.
தனித்துக் கிடக்கிறது சடலம்.
மூக்கில் நீர்வழிய
கண்களில் பீளைசாறி
ஈமொய்க்கக் கிடக்கிறது இளைத்த உடல்.
இழவுசொல்லிகளுக்காகக் காத்திருக்கிறது
உறுதிப்படுத்துவதற்காக உலகம்.

எவ்வண்ணம் இறப்பு நிகழ்ந்தது?
மூச்சுத்திணறியதா?
கொலையா?
தற்கொலையா?
இனிப் பிரேதபரிசோதனை நடத்துபவர்
மத்தியஸ்தமருத்துவர்.
பாவம் சமாதானக் கிழவன்
எத்தனை நம்பிக்கையுடன் இருந்தான்.
தன் பிள்ளைகளிருவருக்கும் ஒன்றாயமர்ந்து
பேசித் தீர்த்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தாயுறுதியிலுள்ள எல்லைகளை ஏற்கும்
நாளொன்று சாத்தியமாகுமென
புன்னகைவீசித் திரிந்தான்
பொக்கைவாய்க்கிழவன்.
தன் அந்திமத்துக்கு முன்னம்
மகளும்
மகனும்
பகைமறந்து ஒருவருக்கொருவர் உருகுவரெனும்
எதிர்பார்ப்பில் இடிவிழுந்துபோக
நின்றபடி சரிந்தான் நிகழ்ந்தது மரணம்.
ஏனோ தெரியாது
சமாதானக் கிழவனை
பிறந்த நாளிருந்தே மகளுக்குப் பிடிக்காது.
ஊராரின் பழிச்சொல்லுக்கு அஞ்சி
இடைக்கிடை வருவாள்
ஏதேனும் பேசுவாள்
சந்தர்ப்பம் பார்த்திருந்து
தகப்பன் துரோகமிழைப்பதாய்ச் சொல்லி
நிமிர்ந்து தம்பிமுகம் பாராது போய்விடுவாள்.
சாதுரியமாய் ஊரை வசப்படுத்துவதில்
மகள் மகாசூரி.
சண்டையை வலிந்திழுத்துவிட்டு
அடியாட்களை ஏவி
எல்லைகளை முன்னகர்த்துவாள்.
தனக்கே
காணிமுழும் சொந்தமெனும் நினைப்பில்
தம்பி வளவுக்கான தண்ணீர்ப்பங்கைக்கூட
தரமறுப்பாள்.

ஒவ்வொரு தடவையும்
ஊர்பழிப்பது தம்பியைத்தான்.
அக்காக்காரியின் ஆட்டமறியாமல்
அவளையே நம்பும் அயல்.
கிழவன் பாவம்.
உள்ளே அழுதபடி உறங்கிப்போவான்.
திரும்பவும் எழுவான்.
பிள்ளைகளை ஒன்றாக்க முயன்று
தோற்றுச் சுருள்வான்.
எத்தனைமுறை தோற்று
எத்தனைமுறை தோற்று
மீண்டும் மீண்டும் எத்தனித்தகிழவன்
இம்முறை செத்தேபோனான்.
சடலஒப்படைப்பு யாரிடம்
எடுத்துப்போகவும் வருமா உலங்கு வானூர்தி?
மரணச்செய்தி விளம்பரத்துக்காக
காத்திருக்கின்றன எல்லா மக்கள் தினசரிகளும்.
பாவம் கிழவன்
இனியாவது உறங்கட்டுமே எரியும் வரை.

நன்றி: வெளிச்சம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மர்சியல் பிறிவ்யு அவர்களுடனான உரையாடல்

உரையாடியவர் மீரா

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த மர்சியல் பிறிவ்யு அவர்களை நாங்கள் சந்தித்து உரையாடினோம். அவர் தமிழ் பெண் ஒருவரையே தன் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்டு வாழ்ந்து வருகிறார். அவர் மானுட நேயம்மிக்கவராக விளங்குகிறார். தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டவராகவும் தமிழ் மக்களினுடைய பிரச்சனைகளை அறிந்து வருபவராகவும் இருக்கிறார். சுனாமி ஆழிப் பேரலை அனர்த்தம் அவரது வாழ்வில் சில மாற்றங்களை ஏற்படுத்தியது.

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்த்து உதவினார். மீண்டும் சென்று உதவ வேண்டும் என்னும் பேரார்வம் கொண்டவராக இருக்கும் அவருடன் நாம் உரையாடினோம். அந்த உரையாடலின் சிறு பகுதியே இது.

09.04.2005 பாரிஸ்

**1. சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் பகுதிகளுக்குச் சென்று வந்ததாக அறிகிறேன். நீங்கள் அங்கு சென்று ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட எமது மக்களையும் அழிவுகளையும் பார்த்தீர்களா?**

ஆம், அவர்களை நேரில் சென்று பார்த்தேன்.

நாங்கள் கடந்த பத்தாம் திகதி பங்குனி மாதம் அங்கு சென்றிருந்தோம்.

ஆழிப்பேரலை ஏழ்மையான அந்த நாட்டை மிக மோசமாக தாக்கி அழித்துள்ளது. அதைப் பார்த்து நாங்கள் மிகவும் அதிர்ந்து போனோம், மிகுந்த துயரத்தில் ஆழ்ந்தோம் .

நாங்கள் அவர்களுக்கு எங்களாலான மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்காகவே அங்கு சென்றிருந்தோம்.

மருந்துப் பொருட்களையும், குழந்தைகளுக்கான பாடசாலை உபகரணங்களையும் அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றையும் எம்முடன் எடுத்துச் சென்றிருந்தோம்.

கடலில் கரண்டியால் நீரை அள்ளி எடுப்பது போலவே எங்கள் உதவிகள் அவர்களுக்குக் கிடைத்தன.

நிறைய உதவிகள், ஒத்தாசைகள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றன.

பெற்றோரை இழந்து தவிக்கும் சிறுவர் இல்லங்களுக்குச் சென்றோம். சிறுவர்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

களைப் பராமரிப்பதிலேயே நாங்கள் அக்கறை காட்டினோம். குறிப்பாக முல்லைத்தீவிலும், கண்டியிலும் உள்ள சிறுவர் இல்லங்களில் எங்கள் நாட்களைக் கழித்தோம்.

### 2. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ்ப்பகுதிகளுக்கு உதவிகள் ஒழுங்காகச் சென்றடைகின்றனவா?

பாதிப்புக்குள்ளான மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவிகளைச் செய்துகொண்டிருந்ததைப் கண்டோம். சர்வதேச செஞ்சிலுவை சங்கமும் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கூடாரங்களை வழங்கிக்கொண்டிருந்தது. அகதி முகாம்களிலும், பாடசாலைக் கட்டிடங்களிலும் மக்கள் அகதிகளாக தங்கியிருந்தார்கள். வேறு அரச,அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உதவிகள் பெரிதாக அங்கு வந்து சேர்ந்ததாக அறியமுடியவில்லை. நீடித்த இந்த போராட்டத்திற்குப் பிறகு சிங்கள அரசாங்கத்துக்கிடையிலும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கிடையிலும் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது. போராட்டத்தினாலும், ஆழிப்பேரலையாலும் தமிழ் மக்கள் மன ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் அவர்களோடு பேசினோம், அவர்களின் துன்பம் நிறைந்த வாழ்க்கைக் கதைகளைக் கேட்டோம். அவர்களின் மனங்களை ஆற்றுப்படுத்த முயன்றோம். ஒரு உதவிகளும் அங்கு இல்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் அங்கு இவர்களுக்கு உதவி செய்யவில்லை. அநியாயங்கள் நடக்கின்றன. இன்னும் முழுமையாக மிதி வெடிகள் அகற்றப்படவில்லை. சர்வதேச





தமிழ் மக்கள் கடினமான நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதை உணரக்கூடியதாக இருக்கிறது.

நீண்ட காலமாக நீடித்த போராட்டத்தாலும், இன்று ஆழிப் பேரலையாலும் மக்கள் பன்மடங்கு துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். நான் அவற்றை உணர்கிறேன். இப்படியான கொடுமைகளை வர்ணிக்க என்னிடம் வார்த்தைகளே இல்லை. அந்த மக்களை மிருகங்களைப் போலல்லவா பார்க்கிறார்கள். மனிதாபிமானம் என்ற சொல்லை அங்கு உச்சரித்துக் கூட கேட்டதில்லை.

தமிழ் மக்களுடைய வரவேற்கும் பண்பு மிகவும் எம்மைக் கவர்ந்தது. புலிகள் போராட்ட உணர்வைக்கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் அவ்வாறுதான் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எம்மால் உணர முடிகிறது.

அவர்கள் உண்மையான சமாதானத்தை இன்னும் காணவில்லை. நாங்கள் எமது வேலைத் திட்டங்களையும் தாண்டி நிறைய வேலைகளைச் செய்தோம். மீண்டும் அங்கு சென்று அந்த மக்களுக்கு உதவுவதற்காகவே ஆர்வப்படுகிறேன்.

ரீதியாக சிறீலங்கா அரசுக்கு வழங்கிய பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்கிறார்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை. இந்த நிலையில் தொடர்ந்தும் பணத்தைக் கொடுக்க மக்கள் பயப்பிடுகிறார்கள். மனித உரிமை என்பது கேள்விக் குறியாக உள்ளது.

### 3. தற்போது மக்களின் நிலைமைகள் எவ்வாறு இருக்கின்றன?

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சிங்கள அரசுக்கும், தமிழர் தரப்பிற்கிடையிலுமான செயற்பாடுகளை அவதானித்து வருகின்றனர். இந்த சமாதான காலத்தில் நான்கு விடுதலைப் புலிகள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்ற செய்தியை அறிந்தேன். ஆனால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு இவற்றையெல்லாம் கண்டு கொள்கிறதா என்பது பற்றியும், கவனத்தில் கொள்கிறதா என்பது பற்றியும் எங்களுக்குத் தெரியவில்லை.

ஐக்கிய நாடுகளின் பணி அங்கு எவ்வாறாக இருக்கிறது என்பது குறித்தும் எங்களுக்குத் தெரியவில்லை.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பிரான்சில் இருந்து வெளிவரும் **"சர்வதேசக் கடிதம்" எனும் பத்திரிகையிலிருந்து ....**

ஆழிப்பேரலை புதிய பாதைகளைப் புலிகளுக்குத் திறந்துவிட்டிருக்கிறது என Marie-France Calle என்று அழைக்கப்படும் பத்திரிகையாளர் கூறுகிறார். இலங்கைத் தீவில் கடல்கோளால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்த்த பின் அவர் எழுதிய நீண்ட கட்டுரையின் ஒரு பகுதியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

தமிழாக்கம்: மீரா



தமிழீழக் காவல்துறை

கிளிநொச்சி நகரம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது.

'பொறுத்தல்' என்கின்ற சொல் , தமிழீழ விடுதலைப் புலிகளின் அகராதியில் ஒருபொழுதும் இருந்ததில்லை.

புலிகள் இலங்கையின் வடக்கு, கிழக்கின் பெரும் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் மக்கள் மத்தியில் ஒழுங்குமுறைகள் பேணப்படுவதில் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டு வருகிறார்கள்.

ஒழுங்குமுறைகள் பாரதூரமாக மீறுப்படுமிடத்து புலிகள் அவர்களை நீதியின் முன் நிறுத்தி விசாரணை செய்வார்கள்.

தலைவர் பிரபாகரன் அவரது நாட்டு மக்களால் தந்தை என்ற ஸ்தானத்தில் வைத்து நோக்கப்படுகிறார்.

ஆழிப்பேரலை விடுதலைப் புலிகளின் அரசியல் நோக்கத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. மாறாக, மனதை உருக்கும் இந்த சம்பவம் சர்வதேச ரீதியாக சட்டரீதியான பல பாதைகளை அவர்களுக்கு திறந்துவிட்டிருக்கிறது.

சர்வதேச சமுதாயம் எதைக் காண்கிறது என்றால், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கிடையிலும், சிங்கள அரசாங்கத்திற்கிடையிலும் 2002 ஆம் ஆண்டு மாசி மாதம் கைச்சாத்திடப்பட்ட, இன்று அபாய நிலையிலுள்ள போர் நிறுத்த ஒப்பந்தம் எந்நேரமும் உடைந்து விடலாம் என்பதையே.

நோர்வே சமாதானக்குழுவினர், ஆழி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள் ஒழுங்கான முறையில் அவர்களைச் சென்றடையவேண்டும் என்பதில் அக்கறை காட்டி வருகின்றனர்.

சமாதானத்திற்கான ஒப்பந்தம் இறக்கும் தறுவாயில் இருக்கும் அதே வேளையில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சர்வதேச உதவிகளும் சென்றடையவில்லை.

'கடந்த மார்கழி மாதமே எங்களுடைய பொறுமையின் எல்லையை தொட்டுவிட்டோம், ஆனால் ஆழிப்பேரலை அடுத்த கட்ட நடவடிக்கைகளை நிறுத்தி வைத்திருக்கிறது' என்று புலிகளின் பேச்சாளர் தயா மாஸ்ரர் கூறுகிறார்.

'எமக்கும், சிங்கள அரசாங்கத்திற்கும் இடையே உதவிகளை பகிர்வதற்கான ஒப்பந்தம் சரி வந்தால் அது நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு குறியீடாக இருக்கும் என்பதே சர்வதேச சமுதாயத்தின் பார்வை' என்றார் .

'சிங்கள அரசு, பாதிக்கப்பட்ட தமிழ் பிரதேசங்களுக்கு உதவிகளை வழங்கக்கூடாது என்பதில் கடும்பிடியாக இருக்கிறது. சிங்கள அரசுக்கு சர்வதேச சமுதாயம் இந்த விடயத்தில் கண்டனங்களை தெரிவிப்பதோடு அழுத்தங்களையும் பிரயோகிக்க வேண்டும்.

கடல்கோளால் தமிழர் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. தொடர்ச்சியான போராட்டத்தால் நொந்துபோன எமது மக்களுக்கு ஆழிப்பேரலை இன்னும் ஒரு பேரழிவை ஏற்படுத்தியது' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சியில் இருக்கும் சில உணவகங்கள் அல்லது முழுதாகக்கூட தமிழீழ விடுதலைப் புலிகளினுடைவை.

அங்கே விடுதலைப் புலிகளினுடைய வானொலி ஒலிபரப்புக்களை மக்கள் செவிமடுத்தபடி இருப்பார்கள்.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கிளிநொச்சியில் இருக்கும் மருத்துவ நிலையமும் புலிகளினுடையது. அதற்கருகிலுள்ள கட்டிடமொன்றில் தயா மாஸ்ரர் எங்களை தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை அன்புடன் செய்து தந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை வெளிப்படுத்தும் ஒளிநாடாக்களை பார்த்தோம். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலிகள் உதவிகளை வழங்குவதைக் படத்தில் காணக்கூடியதாக இருந்தது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உறுப்பினர்களின் ஒருவரான சுடர் சொல்கிறார் ‘புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களை இன்னும் இணைத்து வேலை செய்யவிரும்புகிறோம்’ என்று.

அதனால் அவர்களுடைய பொய் பிரச்சார முயற்சி தோல்வியுற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் நியாயத்திலும், நன்மை விரும்பும் குணத்திலும் மேம்பட்டவர்களாக இருக்கின்றனர்.

* * * *

திரு.எஸ்.விக்னேஸ்வரன் அவர்களோடு மெய்சிலிர்க்கச் செய்யும் ஒரு சந்திப்பு நிகழ்ந்தது.

இவர் ஒரு கணித ஆசிரியர், ஆறு குழந்தைகளுக்குத் தந்தையார். தன் வாழ்க்கையை புலிகளின் போராட்ட வரலாறுகளை சிறபங்களால் செதுக்கி பதிவதன் மூலம் அர்த்தப்படுத்துகிறார். சிற்பங்கள் நிறைந்த அருங்காட்சியகம் ஒன்றை கட்டி எழுப்புகின்றார். நினைவார்த்தமாக எழுப்பப்படும் அந்த சிற்பங்கள் போராடும் மண்ணில் உணர்வுபூர்வமாக செதுக்கப்பட்டுள்ளன .

அவர் இடைவிடாமல் தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரக்காவியத்திலிருந்து ஒவ்வொரு பீடம் சார்ந்தும் சுவரணிகளை செதுக்கிக் கொண்டிருப்பார். அமைதி நிறைந்தவராகக் காணப்படும் எஸ்.விக்னேஸ்வரன் அவர்கள் உபசரிப்பிலும் சிறந்தவர்.

இதோ ! அவர் தற்கொடை செய்துவிட்ட பெண் விடுதலைப் போராளியின் செதுக்கப்பட்ட சிற்பம் ஒன்றை பெருமையுடன் எங்களுக்கு காட்டுகிறார்.

‘அவள் யாழ்ப்பாணத்தில் சிங்கள படையின் டாங்கியை வெடிக்கவைத்து தற்கொடையாகியவள் ! இது எங்கள் பெண்களுக்கு இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்கொள்ளக்கூடிய மனோபலத்தை வழங்கியுள்ளது.’ என அவர் தெரிவித்தார்.



முதற்கரும்புலி கப்டன் மில்லரை மனங்கொள்ளும் மரச்சிற்பம்



சிற்பி திரு.எஸ்.விக்னேஸ்வரன்

கிளிநொச்சி நகரம் போரினால் முற்றாக அழிந்துபோயுள்ளது. அந்த நகரம் கொடுங்கோலாட்சிக்குள் அகப்பட்ட ரஷ்யாவின் சில நகரங்களை ஞாபகமூட்டியது.

மார்கழி மாதம் சிங்கள அரச ஊடகங்கள் தலைவர் பிரபாகரனை அலை தூக்கிக் கொண்டு சென்றது என்ற வதந்தியை நம்பவைக்க முயற்சித்தார்கள். ஆனால் தலைவர் பிரபாகரன் நோர்வே நாட்டு சமாதானக் குழுவினரைச் சந்திக்கும் நிகழ்வின் புகைப்படமொன்று பத்திரிகைகளில் வெளிவந்தது.



மகளிர் படைப்பிரிவின் முதற்தளபதி மேஜர் சோதியாவை மனங்கொள்ளும் மரச்சிற்பம்

www.tamileelamarchive.com

# ஈழத்தாயின் மடியில் இருந்த என் உணர்வுகள்

அனுபவப்பகிர்வு



எனது தாய் தந்தையர்கள் சிறீலங்கா அரச பயங்கரவாதத்துக்கு அஞ்சி அகதிகளாகி ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரி வாழத்தொடங்கினர். நாட்டைப் பற்றியும் உறவுகளைப்பற்றியும் சதா மனம் கலங்கியபடி அவர்கள் அழுத இரவுகள் எத்தனை. இந்த சோக உணர்வை பரிதவிப்பை அவர்களால் எவ்வாறு சகித்துக்கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும். தொடர்ச்சியாக நடந்துகொண்டிருந்த போரால்

நாட்டுக்கு செல்லமுடியாத நிலையில் கனவும் நினைவுமான வாழ்வே எம்மைச் சூழ்ந்திருந்தது.

எனது தாய்மண்ணை எப்போ காண்பேன் என்று மனம் துடித்தது. நான் கனவிலும் நினைக்கவில்லை எனது தாய் மண்ணை காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டும் என்று. அந்த நாளை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன்.

விமான மூலம் தாயகம் நோக்கி எனது சகோதரியுடனும், எனது சக மாணவர்களுடனும், எமது தமிழ் ஆசிரியையோடும் கொழும்பு விமான நிலையத்தைச் சென்றடைந்தோம். நான் எல்லாவற்றையும் விமான நிலையத்தில் அவதானமாக உற்றுநோக்கினேன்.

நான் எதிர்பாத்தவாறு ஏதாவது இருக்கின்றதா என்று தேடினேன். ஆனால் எனது மனதில் ஒரு திருப்தி இல்லாத உணர்வு ஏற்பட்டது. இதுதானா நீ பதினேழு வருடங்களாகப் பார்க்கத் துடித்த உன் தாய்நாடு எனும் ஒரு கேள்வி என்னுள் எழும்பியது. இதன் காரணத்தை என்னால் முதலில் கண்டுகொள்ள முடியவில்லை.

விமான நிலையத்திலிருந்து எம்மை ஒரு பேருந்தில் அழைத்துச் சென்றார்கள். நாங்கள் பயத்துடன் சிறீலங்காவின் எல்லையைக் கடந்து சென்றோம். சிங்கள இராணுவத்தினர் எமது உடைமைகள் அனைத்தையும் இரண்டு மணி நேரமாக சல்லடைப்போட்டு பரிசோதித்தனர். காதில் ஒலித்தவை எல்லாமே விளக்கமில்லாதவாறு சிங்கள மொழியில் இருந்தன.

இதுதானா எங்கள் நாடு? தொடர்ந்து மூன்று மணி நேரப் பேருந்துப் பயணம் இடம்பெற்றது. அடுத்து இன்னும் ஒரு எல்லையைக் கடந்தோம். எல்லை என்று



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சொன்னவுடனேயே என்னுள் எரிச்சல் வந்தது. மீண்டும் எமது பொருட்கள் பல மணிநேரம் பரிசோதிக்கப்படுமா? ஆனால் இம்முறை நாங்கள் வாகனத்துடன் எல்லைக்கு வரும் பொழுதே அங்கு எம்மை "வணக்கம்" என்ற ஒரு சொல்லுடன், புன்னகை புரிந்து வரவேற்றனர். எனது மனதில் மாற்றம் ஏற்பட்டது. நான் மகிழ்ச்சி அடைந்தேன். எம்மை வரவேற்றவர்கள் எம்முடன் பேசிக்கொண்டார்கள்.

எனக்குள் ஏற்பட்ட இந்த உணர்வை எப்படி நான் வர்ணிப்பேன்? எமக்குத் தெரியாத ஒரு நாட்டில் அதாவது அதன் மொழியும் புரியாத ஒரு நாட்டில், திடீரென ஒரு தமிழனைக் கண்டுகொண்டதும் அவர் தமிழ் மொழியில் பேசிய பொழுதும் எனக்குள் எழும் அந்த உணர்வை என்னால் சொல்ல முடியவில்லை. அப்பொழுதுதான் எனது நாட்டில் இரண்டு எல்லைகள் உள்ளன என்பதை அறிந்தேன். இதுதான் தமிழீழமா? இதுதான் எமது தாய்நாடா? அப்பொழுதுதான் நான் பெருமைப்பட்டேன்.

நாங்கள் எமது பயணத்தை மிகுந்த மகிழ்ச்சியுடன் தொடர்ந்தோம். விடுதலைப்பாடல்கள் ஒலித்துக்கொண்டிருக்க காற்று இதமாக எமது முகங்களைத் தழுவிச் சென்றது. நான் சிந்தனையில் ஓவியங்களை வரைந்தவாறு பச்சைப்பசேல் என்று செழித்திருந்த வயல்களூடாக பயணித்துக்கொண்டிருந்தேன். குடிசைகளில் வாழும் எமது மக்கள், கூடைகளையும், குடங்களையும் சுமந்து சென்றுகொண்டிருந்தனர். நிமிர்ந்த வாழ்வின் நடை கொண்ட வீரப்பெண்களைக் காண்கிறேன்.

இதமான காற்று மீண்டும் மென்மையாக தடவிச்செல்கிறது, எல்லோரையும் வரவேற்பது போல் காற்றில் அங்கும் இங்கும் அசைந்து ஆடும் உயரமான பனை மரங்கள் மழை வெள்ளத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவர்கள், போரின் தாக்கத்தினால் உடைந்த கட்டிடங்கள் மதில்கள் இல்லாத காணிகள் ஆகியவை எங்கள் கண்களை கலங்கவைத்தன.

இரண்டு நாட்கள் மகிழ்ச்சியுடன் கழிந்தன. மூன்றாம் நாள் நாம் பேருந்தில் காந்தரூபன் அறிவுச்சோலைக்குப் போய்கொண்டிருக்கும் வேளையில், வானொலியில் முதன் முதலாக சுனாமி அலையைப் பற்றிக் கேள்விப் பட்டோம். அதாவது நிலக்கீழ் கடல் அதிர்ச்சியினால் ஆழிப்பேரலைகள் கரையோரமக்களை அடித்துச் சென்ற செய்தியைக் கேட்டோம். இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியாகியிருப்பதாகவும் அறிந்தோம். உடனே நாம் எமது பயணத்தை நிறுத்தி நாங்கள் தங்கியிருந்த இல்லத்திற்கு திரும்பினோம். அங்கு நாம் எம்மிடம் இருந்த உடைகளையும் பணத்தையும் எடுத்துக் கொண்டு சுனாமியால் அகதிகளாகிப் பாடசாலைகளில் தங்கியிருந்தவர்களிடம் விரைந்து சென்றோம். அங்கே ஒரே அவலக்கோலம். இறந்த உடலங்களைச் சுற்றி கதறி அழும் மக்களைக் கண்டோம். பிள்ளைகளை இழந்த பெற்றோரையும், பெற்றோரை இழந்த பிள்ளைகளையும், தம் உறவினர்கள் இன்னும் உயிரோடு இருக்கின்றார்களா என்னும் கேள்விக் குறியுடன் இருக்கும் மக்களையும் பார்த்து பதறினோம். அப்பொழுது எனக்கு எனது குடும்பத்தின் நினைவு தான் வந்தது. மூன்று சிறுவர்கள் தமது பெற்றோரைக் காணாமல் இறந்தவர்களுடைய பெயர்கள் எழுதப்பட்ட வரிசையில் தமது பெற்றோரின் பெயர்களும் உள்ளனவா என்று தேடிக்கொண்டியிருந்தனர். இவர்களுடைய எதிர்காலம் இனி என்னவாகும் என்ற கேள்வி என்னுள் பலமாய் எழுந்தது.

பல வாகனங்களில் குடும்பம் குடும்பமாக இறந்த உடலங்கள் எடுத்துவரப்பட்டு வரிசையாக புதைகுழியில் ஒன்றாகவே அடக்கம் செய்யப்பட்டன. இந்தக் காட்சி என் மனதில் என்றுமே அழியாத ஓவியமாக படிந்துவிட்டது. நாமும் எமது மனதைக்கட்டுப்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலும், ஆதரவும் கொடுக்க முயற்சித்தோம். அவர்களும் எம்மைக் கட்டிப்பிடித்து அழுதார்கள். ஒவ்வொரு பாடசாலை அறைகளிலும் ஐந்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் நெருக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பட்ட அவலங்களை வார்த்தைகளால் கூறமுடியாது.

அரசாங்கத்திலிருந்து எந்தவிதமான உதவிகளும் வரவில்லை என்பதை கண்ணூடாக கண்டோம். எமது தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழக குழுவினருமே எமது மக்களுக்கு உதவிபுரிந்தனர். பெண் போராளிகள் ஆண்களுக்குச் சமனாக இறந்த உடல்களைத் தூக்குவதிலும் அவற்றை புதைப்பதிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அக் காட்சி என்னுள் வியப்பையும், பெருமையையும் ஏற்படுத்தியது. அத்துடன் கையுறைகள் கூட இல்லாமல் 'நமது உறவுகள்' என்று நினைத்து செயல்பட்டதை நினைக்கும் பொழுது மெய் சிலிர்த்தது. பெண்கள் என்றால் அடுப்பங்கரையில் காலம் கழித்த கதைகள் என் காதில் ஒலித்துக்கொண்டிருந்தன. அவர்கள் வீட்டு வாசல் படியைக்கூட தாண்டாதவர்களாக சிறைபட்டிருந்த கால நினைவுகள் புரண்டன. தமது உற்றவர்கள் இறந்தாலும் சுடலைசெல்லாதவர்கள் இன்று பிணங்களை தொட்டுத் தூக்கி அடக்கம் செய்துகொண்டிருந்தனர். போராட்டக்களத்தில் வீர சாகசங்கள் செய்யும் அளவுக்கு ஆண்களுக்கு நிகரான மனபலத்துடன் வளர்த்துவிட்ட எம் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களை நினைக்கும் போது நானும் ஒரு தமிழ்ப்பெண்ணாக பிறந்ததையிட்டு பெருமைப் பட்டுக்கொண்டேன்.

நாம் எம்மால் முடிந்தளவு எம் மக்களுடனேயே நின்று அவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்தோம். ஏனென்றால் எமது மக்களுக்கு எம்மை விட்டால் யார் இருக்கின்றார்கள்? நாம் அவர்களுடைய கண்ணீரையும், அவர்களுடைய தவிப்பையும், அவர்களுடைய இழப்பையும் மனதால் சுமந்து கொண்டு ஜேர்மனிக்கு வந்தோம்.

'வுப்பர்' ((Wupper) மண்டபத்தில் தெற்காசியாவில் ஏற்பட்ட கடல்கோள் அனர்த்ததுதால் இழந்த உறவுகளின் நினைவு அஞ்சலி நிகழ்வில் நேரடியாக கலந்து கொண்டோம். அந்தப் பொழுதினிலே அந்த அரங்கினிலே எங்கள் தாயக அவலப் பொழுதினை புலத்திலிருந்த தமிழ்மக்களோடு பகிர்ந்து கொண்டோம். பின்னர் நாங்கள் பல ஊடகங்களுக்கு எமது அனுபவங்களை விபரித்து அம்மக்களுக்கு உதவி கோரி நின்றோம். இதன் பலனாக பல பொருட்களும், பண உதவிகளும் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக கொடுக்கப்பட்டன. எமது மக்களுக்கு சிறீலங்கா அரசாங்கம் செய்யும் அநீதியையும், பாகுபாடுகளையும் விளக்கி எங்களாலான முழு ஒத்துழைப்பையும் செய்து நின்றதில் ஓரளவு எங்கள் மனத்தவிப்பை ஆற்றிக்கொண்டோம். மேலும் மேலும் தமிழீழத்திற்காக உதவிக்கரம் கொடுக்கவேண்டும் என்று உறுதியோடு இருக்கின்றோம். நாமே நம் மக்களுக்கு உதவி என்பதை உணர்கின்றோம். நீங்களும் அவ்வண்ணமே உணர்ந்து கொள்வீர்கள் என்று நம்புகின்றோம். ஏனென்றால் எமது பணி எமது தாய்நாட்டிற்கே இருக்க வேண்டும்.

**கார்த்திஜா ஓம்பிரகாஸ் (காயா)**
தமிழ் இளையோர் அமைப்பு - ஜேர்மனி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# புலிகளின் குரல் வானொலி பிரதம செய்தியாளர் திரு.தவபாலன் அவர்களுடனான நேர்காணல்

நேர்கண்டவர்:
தா.பாலகணேசன்
பாரிஸ்
28.02.2005

1. இராணுவ வெற்றிகளை மட்டும் ஊடகங்கள் பறை சாற்றி வந்ததாகவும் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை வெளிக்கொணர்வதில் ஊடகங்கள் பின் தங்கியிருந்தன என்ற கூற்றை நீங்கள் எவ்வாறு விளங்கிக்கொள்கிறீர்கள்?

இதில் கடந்த போர்க்காலத்தைக் கருத்திலெடுத்துப் பார்க்கவேண்டும்.

தமிழ்மக்கள் மீது சிறீலங்கா அரச படைகள் நிகழ்த்திய படுகொலைகளை ஊடகங்கள் பறை சாற்றவில்லை என்பது வணிக ஊடகங்களுக்கு வேண்டுமெனில் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் தமிழ்த்தேசியத்தை வரித்துக்கொண்ட ஊடகங்கள் சமநிலையில் நடந்து கொண்டிருக்கின்றன. ஆயினும் துயர்தோய்ந்த படுகொலைகளுக்கு அப்பால் போரின் வெற்றிகள் இந்த படுகொலைகளுக்கு எல்லாம் பதிலடியாக கருதப்பட்டு மக்களால் கொண்டாடப்படுகின்றன. ஊடகங்கள் அவற்றுக்கு முதன்மை கொடுக்கின்றன. ஆனால் தமது வணிக முதன்மைக்காக சில ஊடகங்கள் இராணுவ வெற்றிகளுக்கு முதன்மை கொடுத்து மக்களின் துயர்களை கண்டும் காணாது விட்டுவிட்டன. ஆயினும் தமிழ்த்தேசிய கொள்கையைக்கொண்ட ஊடகங்கள் இதில் தெளிவாகச் செயற்பட்டன என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

குறிப்பாக தடைகள் நிறைந்த போர்க்காலத்தில் தாயகத்தின் ஒளிப்பதிவுகளை வெளியுலகுக்கு கொண்டு சென்ற ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை முதன்மைப்பங்கை வகிக்கின்றது. அத்துடன் வெறுமனே துயரங்களைக்காட்டி அழுது கொண்டிருப்பது போராடும் சமூகத்துக்கு உளரீதியாக பின்னடைவையும் கொடுக்கும் என்ற பக்கமும் உள்ளது. ஆனால் இருட்டடிப்பு என்பது குற்றமானதுதான். இதேவேளை தமிழ்த்தேசியக்கொள்கை வரிப்பில் தமிழ் ஊடகங்கள் மாற்றம் காணவேண்டிய தேவை 1987ல் ஈழமுரசு நாளேட்டை விடுதலைப்புலிகள் பொறுப்பேற்று வெளியிடத்தொடங்கியபோது ஏற்பட்டது. ஆக அதற்கு முன்னர் தமிழ்மக்களின் அரசியல் பிரச்சனை செய்தியாக மட்டும் தான் தமிழ் ஊடகங்களால் கையாளப்பட்டன அதிலும்கூட தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் போன்ற சொற்ப்பதங்களே கையாளப்பட்டன இந்நிலை குறிப்பாக 1980களின் நடுப்பகுதிகள் வரை தொடர்ந்தது.

1950களில் கல்லோயா தமிழர் விரட்டியடிப்பு,

1984களில் மணலாறு ஒதியமலைப்படுகொலை, தீவகம் குமுதினி படுகொலை, திம்புப்பேச்சுக்களின் காலத்தில் இடம்பெற்ற வவுனியாப் படுகொலை உள்ளிட்ட தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் ஊடகங்களூடாக உரிய தாக்கத்தோடு வெளிப்படவில்லை. இவை ஒருசில உதாரணங்கள்தான்.

சுதந்திரன் அக்காலப் பகுதியில் விதிவிலக்காக தமிழ்த்தேசியக்கொள்கைக்காக வெளிவந்துகொண்டிருந்தது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**1980களின் இறுதிப்பகுதியின் பின்னர்தான் தமிழ்த் ஊடகத்துறை தமிழ்த்தேசியத்துடன் தீவிரமாகப் பயணிக்கத் தொடங்கியது.**

**குறிப்பாக தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் தலைமையில் விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்றபோது, அவரின் சிந்தனையில் உதித்த ஊடகங்களின் தோற்றத்தின் பிறகுதான் தமிழில் தமிழருக்காக ஊடகங்கள் உருவாகத்தொடங்கின.**

1987ன் பின் தமிழ் மக்கள் துய்த்த துன்பங்கள் பரபரப்பான செய்திகளாக ஊடகங்களில் சில நாட்கள் அடிபட்டு பின்னர் மறைந்து போன அவலமும் இருக்கிறதுதான். இந்த வகையில் தமிழ் மக்கள் மீதான படுகொலைகளை ஊடகங்கள் தொடர்ந்து நினைவூட்டாமல் அலட்சியாமாய் விட்டதன் காரணத்தால் அவை மறக்கப்பட்டு விட்டன. இதனால் படுகொலைகளை செய்தவர்கள் தப்பித்து விடுகின்றார்கள். உலக மனசாட்சியின் முன் அவை முன்னிறுத்தப்படாது போயின. இராணுவ வெற்றிகளை மட்டும் ஊடகங்கள் பறை சாற்றி வந்ததாகவும், மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை வெளிக்கொணர்வதில் ஊடகங்கள் பின்தங்கியிருந்தன என்பதை ஊடகங்கள் கருத்திலெடுத்தாகத்தான் வேண்டும்.

இங்கு ஊடகங்கள் பற்றி பொதுவாக பேசமுடியுமே தவிர குறிப்பிட்டுப் பேசமுடியாது.

இதற்குமப்பால் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியும், மாற்றுக்கருத்துகள் என்ற பேரிலும் பிழைப்பு நடத்தியும், எதிரிக்குச் சேவகம் செய்தன.

குறிப்பாக நாம் குறிப்பிடும் வகையில் புலம்பெயர்தளத்தில் பல பின்னணிகளில் இந்த வகையறாக்கள் இயங்குகின்றன.

வானொலிகளாக, தொலைக்காட்சிகளாக, இணையத்தளங்களாக, சஞ்சிகைகளாக, பத்திரிகைகளாக இயங்குகின்றன. இவை பற்றி தமிழ்மக்கள் தெளிவாக இருப்பதால் குறுகிய காலத்தில் இவை அம்பலப்பட்டும் போகின்றன. அதனால் இவை பற்றி நாம் பெரிதாக அச்சப்படவேண்டியதில்லை. ஏனெனில் வரலாற்றில் குறுகிய காலத்தில் இவை மக்களால் தூக்கியெறியப்பட்டுள்ளன. இப்போது இருக்கின்ற யூதர்களின் இஸ்ரேல் அரசு கொண்டுள்ள ஆதிக்கக்கொள்கை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், தம் தாயகத்தை வலுப்படுத்த அவர்கள் வரலாற்றில் சந்தித்த மிகப்பெரிய இன அழிப்பு, துன்பங்கள் நினைவூட்டப்பட்டுக்கொண்டேயிருப்பதும் ஒரு காரணமாகும்.

2. தமிழில் தங்களை ஈர்த்த ஊடக வியலாளர்கள் பற்றி எமக்குக் கூற முடியுமா?

**'ஊடகவியலாளன் நடுநிலையாளன்' என்ற கருத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. ஊடகவியலாளன் அறிவுபூர்வமானவனாக, தான் சார்ந்துள்ள ஊடகத்தளத்தினை முழுமையாக அறிந்துள்ளவனாக இருக்கவேண்டும். சமகால ஊடகப் பண்பாட்டுடன் பயணிப்பவனாக இருக்க வேண்டும்.**

தமிழில் என்னை ஈர்த்த ஊடகவியலாளன் யாரெனில் ஒரு மதம் சார்ந்த வானொலியில் இருந்து கொண்டு ஈழத்தமிழ் மக்களுக்காக - ஊடகத்தின் மூலம் குரல் கொடுத்த அருட்திரு ஜகத் கஸ்பார் முக்கியமானவர். ஈழத்தமிழர் அனைவரையும் தன்பால் ஈர்த்து வைத்தவர்.

1950களில் தமிழ்மக்களின் போராட்டம் சாத்வீக வழிகளில் தொடங்கியபோது நமது அப்போதைய தமிழ் ஊடகவியலாளர்கள் அதற்காக அன்று முழுமையாக உழைக்காத தன்மையை நாம் அறியலாம்.

அவர் கால ஊடகங்களினை பார்க்கக்கிடைத்தபோது அவை நிரூபணமாகின. தமிழ்த்தேசியத்துக்காக உழைத்ததாகக்கூறும் மூத்த தமிழ்ஊடகவியலாளர்கள் சிலர் தம் 'அனுபவ மீட்டல்களில்' தமிழ்மக்களை ஒடுக்கிய ஆதிக்க சக்திகளுடன் விருந்துண்டதை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

முக்கியமாக குறிப்பிடுவது அவர்கள் பணி தொடர்பாக விமர்சனங்களைக் கொண்டு வருகின்றது.

**1980களின் இறுதிப்பகுதியின் பின்னர்தான் தமிழ்த் ஊடகத்துறை தமிழ்த்தேசியத்துடன் தீவிரமாகப் பயணிக்கத் தொடங்கியது.**

**குறிப்பாக தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் தலைமையில் விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்றபோது, அவரின் சிந்தனையில் உதித்த ஊடகங்களின் தோற்றத்தின் பிறகுதான் தமிழில் தமிழருக்காக ஊடகங்கள் உருவாகத்தொடங்கின.**

தமிழ்ஊடகத்துறையை நுணுக்கமாக ஆராய்பவர்களுக்கு இந்த உண்மை புரியும். இந்த வகையில் தமிழகத்தவராக இருந்தும் மதகுருவாக இருந்தும் ஈழத்தமிழருக்காக கஸ்பார் ஆற்றிய தரமான ஊடகப்பணி நிராகரிக்கப்படமுடியாது.

மேலும் எழுத்தில் தமிழ்மக்களின் நியாயத்தை உரைத்த நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன் ஈர்ப்புக்குரிய தமிழ் ஊடகவியலாளர்.

புலம்பெயர் தமிழ்மக்களிடம் தமிழ்த்தேசியக்கருத்தை கட்டி வளர்ப்பதில் ஈடுபட்ட கப்டன் கஜன் நடத்திய 'ஈழமுரசு' ஏடு வழியாக அவர் ஆற்றிய ஊடகப்பணியின் தரத்தை உணர முடிகின்றது. அவரும் எனை ஈர்த்த தமிழ் ஊடகவியலாளர்களில் அடங்குகின்றார்.

ஊடகங்களில் அரங்கச்செயற்பாடு என்று பார்க்கும்போது தாயகத்தில் மரபு சார் கூத்தை நவீனப்படுத்தி சமகால அரசியலுடன் பிணைத்த புதுவை அன்பன் முக்கியமானவர் ஆகின்றார். அதேவேளை அரங்கை தமிழ்மக்களின் ஒன்று திரண்ட அரசியல் எழுச்சிக்கு வித்திட்ட 'பொங்குதமிழ்' என்ற அரங்க செயற்பாட்டின் பிதாக்களான க.சிதம்பரநாதன், செ.விந்தன் ஆகியோர் ஈர்ப்புக்குரியவர்கள்.

தாயகத்தில் சினிமா, குறும்படங்கள் ஆகியவை நிறையவே வெளிவந்துள்ளன. இவற்றில் ஞானரதனின் 'காற்றுவெளி' முக்கியமானது. அது சகல தரப்பின் கவனத்தையும் ஈர்த்த ஒன்று.

சில தமிழ் ஊடகவியலாளர்கள் திறமையானவர்களாக இருந்தும்அவர்களின் நேர்மையற்ற தன்மை அவர்களை ஈர்க்கத்தடையாக உள்ளது. **ஒரு ஊடகவியலாளன் எந்தளவு தூய்மையாகவும் நேர்மையாகவும் இருக்கிறானோ அவனே கருத்தையும் சொல்லும் தகுதி பெற்றவனாக இருக்க வேண்டுமென நான் கருதுகிறேன்.**

3. தமிழ் ஊடகவியாலாளர்களை ஆக்கிரமிப்பாளர்கள் குறி வைத்து தாக்கி அழித்த சம்பவங்களின் பின்னால் உள்ள அகப்புறக்காரணிகள் பற்றி விளக்க முடியுமா?

தாயகத்தில் 1987ல் ஈழமுரசு, நிதர்சனம் என்பன இந்திய இராணுவக் கொடுங்கரங்களால் அழிக்கப்பட்டன.

1990 களின் பிறகு தமிழீழ விடுதலைப்போராட்டம் புதிய பரிமாணத்தில் முனைப்புற ஆரம்பித்துவிட்டது. இதில் சிறீலங்கா அரசு ஊடகரீதியான போரை தமிழ்மக்கள் மீது வலுவாக மேற்கொள்ள ஆரம்பித்தது. இந்த வேளையில் தமிழீழத்தேசியத்தலைவர் அவர்களின் சிந்தனையில் உதித்த புலிகளின்குரல், ஈழநாதம் ஆகிய இரு நாளாந்த ஊடகங்கள் தமிழ்ஊடகங்களுக்கு முன்னோடியாக செயற்பட்டுவருகின்றன.

இந்த ஊடகங்கள் தமிழ் ஊடகங்களுக்கு ஒரு பாணிஉருவாக்குனராகவும் அதாவது 'ட்றெண்ட்செற்றராக' இருந்தன இருக்கின்றன. இந்த பாணி உருவாக்கல் என்பது கருத்தியல் தளத்திலானதாகும். இந்த நிலையில் தமிழ்ஊடகங்கள் தமிழ்த்தேசிய கருத்தில் தீவிரம் பெறத்தொடங்கின. இங்கு தமிழ்த்தேசியப்போராட்டம் எதிரிக்கெதிராக வலுப்பெற்றது.

இது சிறீலங்கா அரசுக்கு பெரும் சவாலாக இருக்கின்றது. இதன் மூலம் தமிழ் ஊடகங்கள் சிங்கள அரசின் - தமிழ்மக்களுக்கு எதிரான எந்த ஒரு நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்தியும் - தமிழ்மக்களுக்கும் உலகுக்கும் தமிழ்த்தேசிய உண்மைகளை தெரிவித்தும் வருகின்றன.

இதனால் தமிழ் ஊடகவியலாளர்களை எதிரிகள் ஒரு அழித்தொழிக்கப்பட வேண்டிய இலக்காகக்கொண்டனர். இதனால் அவர்கள் துணிச்சலாக உண்மையை வெளியிட முடியாது செய்து விடலாம் எனக் கருதுகின்றனர்.

மிரட்டல்கள், கொலைகள் மூலம் அவர்களை அகரீதியாக அச்சப்படவைக்க முயல்கின்றனர். பாதுகாப்பற்ற தன்மைகளும் அதிகமாக காணப்படுகின்றன.

இதைவிட வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகள் தமிழ் ஊடகவியலாளர்களை இலக்கு வைத்து ஊடகக்கற்கை என்ற பேரில் அவர்களை விலைக்கு வாங்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றன.



அவர்களை தமிழ்த்தேசிய எதிர்த்தள கருத்துலகத்துக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊடகப்போரை எதிர்கொள்ள முடியாத அரசினதும் எதிரிகளினதும் கையாலாகாத்தனம்தான் அது.

தமிழ் ஊடகவியலாளர்களை இலக்கு வைத்துக் கொல்வது, அவர்களை திசை மாற்றமுயல்வது எல்லாம் இதே நோக்கின் அடிப்படையிலாகும்.

அதேவேளையில் தமிழ்த்தேசியத்துக்கு எதிரான தமிழ்ஊடகங்கள் தோற்றுப்போனமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

4.விடுதலைப் போராட்டத்திற்கு முன் எமது சமூகத்தில் இயங்கி வந்த ஊடகங்கள் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் எத்தகைய பங்கு ஆற்றின என விரிவாகக் கூற முடியுமா?

விடுதலைப்போராட்டத்துக்குமுன் தமிழ்மக்கள் உரிமை கொண்டாட இருந்தவை பத்திரிகைகள் மட்டுமே.

அவை அந்த அந்த காலத்துக்குரிய சமூக



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விழிப்புணர்வை ஊட்டியிருக்கின்றனவா என்பது ஒரு பெரும் கேள்வியே. ஆனால் தமிழ்மக்களின் தேசியப்போராட்டம் சார்ந்த வகையில் 1987 வரை அவற்றை 'செய்தி' களாகக் கையாண்டனவே தவிர, தமிழ்த்தேசிய விழிப்புணர்வுடன் செயற்படவில்லை. இதில் சிரித்திரன், தமிழரசுக்கட்சியின் சுதந்திரன் விதிவிலக்கானவை.

படைப்பாளிகள் தமது ஆக்கங்களில் தமிழ்த்தேசியப்போராட்டத்தை பேசியுள்ளார்கள்.

அன்றைய தமிழ் ஊடகங்கள் போராட்டத்துக்கு முன்பாக இருந்த சாதிய, பிரதேச, சீதன, பெண்ணிய பிரச்சனைகளை ஒழிப்பதில் தம் பங்கை வழங்கவில்லை. அவை பிற்போக்கு சக்திகளிற்கு முண்டு கொடுத்துக்கொண்டே நின்றன. ஒடுக்குமுறையாளரின் பின்னணி வாத்தியங்களாக முழங்கியமையே உண்மை.

அரங்க செயற்பாட்டில் அம்பலத்தாடிகளின் 'கந்தன் கருணை', 'ஏகலைவன்' உள்ளிட்ட அவர்களின் பணி செம்மையாக இருந்துள்ளது. மேலும் சிறு சஞ்சிகைகள் இதில் முக்கிய பங்கை வகித்துள்ளன.

ஆனாலும் இந்த இதழ்கள் தமிழ்த்தேசியம் என்ற பார்வையில் முரண் நிலையில்தான் நின்றுள்ளன.

இத்தகைய முரண்நிலை படைப்பாளிகளிடம் கூட இருந்தது இருக்கின்றது.

சில வேளைகளில் மாற்றுக்கருத்துப்போர்வையில் தமிழ்த்தேசியப்போராட்டத்தில் எதிர் ஊடகவியலாளர்களாக இவர்கள் செயற்பட்டமை கவலை தரும் விடயமாகும். போதாததற்கு இன்றும் கூட பத்திரிகை ஊடகங்கள் சாதியத்தை வேறு காவிப்பிடிக்கின்ற அவலங்களும் தொடர்கின்றன.

5. எமது மண்ணில் நவீன ஊடகங்களாக எவை இயங்கி வருகின்றன? அவை எம் மத்தியில் எத்தகைய செல்வாக்கைச் செலுத்தி வருகின்றன?

மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்தி வரும் நவீன ஊடகங்கள் வானொலிகள், தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், செல்பேசி என்பனவைதான். இணையத்தளங்களை தமிழ்மக்கள் முழுமையாக ஆக்கபூர்வமான வழியில் இன்னும் பயன்படுத்தவில்லை.

புலம்பெயர்ந்து நவீனவசதிகளுடன் இருக்கின்ற மக்களிடம்தான் இணைய ஊடகங்கள் நுழைந்திருக்கின்றன.

ஆகவே இப்போதைக்கு இது அவர்களின் பணியாகும்.

வணிக ஊடகங்கள் தமிழ்மக்களிடம் அதிகம் ஆதிக்கம் செலுத்த முயன்று வருகின்றன. இதனால் தமிழ்மக்களின் அன்றாட வாழ்வில் பிறழ்வு ஏற்படும் வகையிலான ஆபத்தும் இருக்கின்றது. இது தாயக மக்களிடம் வேறு ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டது.

குறிப்பாக தமிழகத் தொலைக்காட்சிகள், கொழும்பின் வணிக வானொலிகள் போன்றன ஆபத்தானவையாகும். இதே பிரச்சனையை புலம்பெயர் தமிழ் மக்களும் எதிர்கொண்டுள்ளனர்.

தாயக, புலம்பெயர் மக்களிடம் நாம் ஒரு கருத்து ரீதியான ஆய்வை மேற்கொண்ட போது, அவர்கள் தொடர்கள், சினிமா நட்சத்திரங்களின் கவர்ச்சிகரமான பேட்டிகள் போன்றவற்றில் ஒரு வித மயக்கமான மோன நிலையில் திளைத்திருக்கிறார்களேயன்றி அவற்றின் கருத்தாதிக்கத்தில் இன்னமும் சிக்கிக்கொள்ளவில்லை.

தமிழ்த்தேசியப்போராட்ட உணர்வில் இவை இன்னும் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

ஆனாலும் அவர்களின் நேரத்தை தின்னுபவையாக, வாழ்வை முழுங்குபவையாகவே இவை இருக்கின்றன என்பதுதான் மிக முக்கியமான பிரச்சனையாக இப்போது இருக்கின்றது.

இவற்றில் கருத்தாதிக்கப் பிரச்சனைகளும் இருக்கின்றன என்பது முக்கிய விடயம்தான். ஆனால் அந்த ஊடகங்களின் பண்பாட்டுச்சூழல்வேறு என்பதால் அவற்றின் 'கருத்துப்பரம்பல்கள்' ஆதிக்கம் பெற முடியவில்லை. ஆனால் தமிழ்த்திரைப்படங்களைப்பார்த்து யாழ்ப்பாணத்தில் 'தீனா குறூப்' 'பாட்சா குறூப்' என்ற அடிதடிக்கும்பல்கள் உருவாகிவிட்டனதான். போதை வஸ்துக்கும்பல்களும் உருவாகிவிட்டன. உண்மை என்னவென்றால் இவற்றின் பின்னணியில் நாசகார சக்திகளே உள்ளன என்பதுதான். இதையாரும் மறுக்க முடியாது. இவை தமிழ் இளம் தலைமுறையினரை மிகமோசமாக சகல வழிகளிலும் சீரழித்து வருகின்றன.

பண்பாட்டுச் சீரழிவு என்பதற்கு அப்பால் சாதாரணமான நடத்தைகளில் கூட மிகமோசமான சீரழிவை இவை ஏற்படுத்தியுள்ளன. இவைகளுக்கு மத்தியிற்தான் 'பொங்கு தமிழ்' என்ற அரங்கச் செயற்பாடு தமிழ்மக்களிடம் எழுச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

அடுத்ததாக வணிக ஊடகங்களின் மத்தியில் தமிழ்த்தேசிய விடுதலையை வரித்துக்கொண்ட புலிகளின்குரல் வானொலி, தமிழீழத்தேசியத்தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் வரிசையில் எரிமலை, ஈழநாதம், நமது ஈழநாடு, ஈழமுரசு, உலகத்தமிழர், என்பவை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கை கொண்டிருக்கும் ஊடகங்களாகும்.

இதில் தமிழக மற்றும் சீரழிவு ஊடகங்களுக்கு சவாலாக நமது மக்களை ஈர்க்கத்தக்க விடயங்கள் இருந்து கொண்டே உள்ளன.

6. எமது மண்ணில் மரபு ஊடகங்கள் நவீனத்தன்மை அடைந்து வருகின்றனவா ?

நமது மண்ணில் பிரதான மரபு ஊடகங்களாக இசை, நாடகம், கூத்து என்பனவற்றைச் சொல்லலாம்.

அவை இன்று மெதுவாக நவீனமடைந்து வருகின்றனதான். அதேவேளை செவ்வியற்கலைகள் தமது மரபை மீறத்தயாராக இல்லாத தன்மையும் காணப்படுகின்றது. புலம்பெயர் சமூகத்தில் இந்த செவ்வியற்கலைகள் சில இடங்களில் ஆரோக்கியமான வழிகளில் நவீனமாகி வருகின்றன என்பதை இணையத்தளங்கள் ஊடாக அறியமுடிகின்றது. இது வரவேற்கத்தக்கது. தனது அடையாளங்களை இழக்காமல் நவீனமயப்படும் ஊடகங்கள்தான் வாழும். தமிழ்மொழியே இதற்கு சிறப்பான எடுகோள்.

நமது பண்பாட்டின் சிறப்பான வடிவங்களான கூத்துகள், நாடகங்கள் என்பன இன்னும் நவீனமாகவில்லை. சிலர்மட்டும் முயல்கின்றனர். இதில் தாயகத்தின் புதுவை அன்பன் முக்கியமானவர். அவர் 'காத்தான் கூத்தைப்' போராட்ட வடிவமாக்கி 'களத்தில் காத்தான்' ஆக்கினார்.

பின்பு அதற்கு அடுத்த கட்டம் நகர்ந்து புதிய அரங்க வடிவங்களில் அந்த கூத்துகளின் மெட்டுகள், ஆட்டங்களை பயன்படுத்துகிறார்.

இதற்குமப்பால் அரங்க செயற்பாட்டாளர்கள் க.சிதம்பரநாதன் செ.விந்தன் ஆகியோர் அரங்கை முழுமையாக அரசியல் மயப்படுத்தியிருக்கிறார்கள்.

பண்பாட்டு ரீதியாக கீழ் நிலையில் இருந்த 'பறை' என்கின்ற இசைக்கருவி இன்று பாடல்களில் இடம் பிடித்து, கூத்துக்களில் நாடகங்களில் எல்லாம் இடம் பிடித்து விழாக்களில் இடம் பிடித்து பெரும் செல்வாக்கு பெற்று முக்கியத்துவமிக்க புதிய பண்பாட்டு இசைக்கருவியாக மாறிவிட்டது.

7. மண்ணின் கலை, இசை, நாடகம், கூத்து, பொருண்மியம் போன்ற விடயங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் வானொலி ஆற்றி வருகிற பங்களிப்புக் குறித்து பேச முடியுமா?

நமது மண்ணின் முகங்களையும், அகங்களையும் நாம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் தலைமையிலான விடுதலைப்போராட்டம் தமிழ் ஊடகத்தில் ஒருபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது இப்பொழுதும் இனியும் தமிழ்ஊடகத்தின் பாணி இதன்பாலாகவே இருக்கும்.



வெளிப்படுத்தி வருகின்றோம். தேசியம் இவற்றை உள்ளடக்கியதுதானே. ஒரு மக்கள் கூட்டத்துக்கு தம் பண்பாட்டம்சங்கள் வழியாக வருகின்ற யாவற்றிலும் ஈர்ப்பு அதிகமாக இருக்கும். இந்த வகையில் மண்ணின் இசை, நாடகம், கூத்து, பொருண்மியம் போன்றவற்றை வெற்றிகரமாக கொண்டு செல்லக்கூடியதாக உள்ளது. இன்றைய வானொலிப் பாணியான மக்களை கலந்து கொள்ள வைக்கின்றதென்ற 'தொலைபேசி அலட்டலை'த் தவிர்த்து மக்களை வானொலியில் பங்கு பெற வைக்கின்றோம்.

நமது மக்களின் 'பேச்சு வழக்கே' ஒரு பண்பாடுதானே. எமது மக்கள் குரல் எமது வானொலியில் 'வானொலி மன்றங்கள்' வழியாகவும் ஒலிக்கின்றன. அவர்களின் சகல உணர்வுகளின் கருத்துகளும் பரிமாறப்படுகின்றன. அவர்களின் திறமைகள் வெளிக்கொணரப்படுகின்றன.

8. கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஊடகக் கல்லூரியில் தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளதான செய்தி உங்களுக்கு எத்தகையதோர் உணர்வைத் தருகிறது?

கொழும்பின் தளம் என்னவென்று எமக்கு தெளிவானதொன்று. அதில் தமிழில் ஊடகக்கற்கை இருந்தாலும் அது சிறீலங்கா தேசியத்தை மையமாகக்கொண்டதுதானே.

நமது யாழ் பல்கலைக்கழகம் நடத்தும் ஊடகக்கற்கைகூட தமிழீழத்தேசிய ஊடகத்துறையை சிதறடிக்கும் நோக்கில்தானே உள்ளது. இந்த நிலையில் கொழும்பு ஊடகக்கல்லூரி பற்றி அலட்டிக்கொள்ளவேண்டுமா? இதற்காகத்தான் **தமிழர் தாயகத்தில் தமிழ்த்தேசிய சிந்தனையுடன் ஊடகக்கல்லூரி ஒன்று தயாராகி வருகின்றது. மற்றவர்களின் கல்லூரிகளில் தமிழுக்கு இடமில்லை என்று சொல்லிக்கொண்டிருப்பதை விட நமக்கானதை நாமே தொடங்கவேண்டிய காலத்தில் அதற்குரிய பலத்துடன் தமிழன் இருக்கும்போது இது பற்றி அலட்டத்தேவையில்லை.**

9. முற்போக்கான ஊடகங்களுக்குரிய பண்புகள் பற்றி குறிப்பிடுங்கள்?

சமூகப்பொறுப்புணர்வுடன் அறிவுபூர்வமாக இருக்கவேண்டும். மக்களை சீரழிக்கும் பண்பைத்தவிர்த்தல் வேண்டும்.மக்களுக்கு நன்மைபயப்பதாக இருக்கவேண்டும்

இதற்குமப்பால் நடைமுறையிலிருந்து அந்நியப்பட்டு நிற்கும் வரட்டுத்தனமான சித்தாந்தங்களால் மக்களை குழப்பவேண்டியதில்லை. **புதிய பூகோள மயமாக்கலில் இருந்து எம்மால் விடுபடமுடியாது. ஆனாலும் இதற்குள்ளும் நமது அடையாளங்களுடன் நிமிர்ந்து வாழமுடியும்.**

அது பற்றித்தான் நாம் கடுமையாகச் சிந்திக்கவேண்டும்.

10. ஊடகத்துறையில் நீண்ட காலமாக துடிப்போடு இயங்கி வரும் நீங்கள் அரசியல், வரலாறு, போராட்டம், சமூகம், விஞ்ஞானம், கலை என பல்வேறு தளங்களில் பன்முகனாக இருக்கும் நீங்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள் சவால்கள் பற்றி ஊடகத்துறையில் பயில்நிலையில் உள்ளவர்களுக்கு பயன்படும் வகையில் தங்கள் கருத்துக்களை பகிர்ந்துகொள்ளுங்களேன்...

தமிழ்த்தேசிய ஊடக உலகம் தமிழினம் இராணுவ அரசியல் ரீதியாக பலம்பெறுவதற்கு மிகவும் உழைத்திருக்கிறது. இது நசிபடுதல், அச்சம் கொள்ளுதல், தனது நோக்கில் பிறழ்வு உறுதல் அற்றதாக செயற்பட்டுவருகிறது.

இதற்கு ஊடகம் தொடர்பான தமிழ்த்தேசியகோட்பாட்டுக்குட் பட்ட பாணியை உருவாக்கவேண்டிய தேவையுண்டு. அது குறித்து இளம் ஊடகவியலாளர்கள் தேடல் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். வரலாற்று ரீதியான அறிவை பலமாக பெற்றிருத்தல் வேண்டும்.

எதிரிகளின் ஊடகப் பரப்புரையை முறியடித்து மக்களை தெளிவாக்கவேண்டிய கடமை உண்டு.

**ஊடகவியலாளன் தன்னை அறிதலில், தேடலில் தொடர்ந்து ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும்.**

**அதிலும் தான் சார்ந்த தளத்தில் கருத்தில் தெளிவாக இருக்கவேண்டும்.**

**நிமிடத்துக்கு நிமிடம் தன்னைப்புதுப்பித்துக்கொள்ளவேண்டும். இணையச் சொல்லில் சொல்வதானால் 'அப்டேற்' செய்து கொள்ளவேண்டும். தான் சார்ந்த பணியை விசுவாசிக்கவேண்டும். சவால்கள், அச்சங்களை எதிர்கொள்ளவேண்டும். திட்டமிடல், எந்தநேரத்திலும் தெளிவாக முடிவுஎடுக்க கற்றுக்கொள்ளவேண்டும்.**

அப்போதுதான் ஒருவன் தன்னை ஊடகத்துறையில் பலப்படுத்திக்கொள்ளமுடியம்.

இதற்கும் மேலாக தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் தலைமையிலான விடுதலைப்போராட்டம் தமிழ் ஊடகத்தில் ஒருபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது இப்பொழுதும் இனியும் தமிழ்ஊடகத்தின் பாணி இதன் பாலாகவே இருக்கும்.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## மாலிகா கவிதை

திசைவழி தவறா நடத்தலிற்தான்
சேரிடமடையும் விரைவிருக்கிறது.
பாலையும் சோலையும் இடைவரும் நாளில்
பாலையிற் தளர்ந்தும்
சோலையிற் கிளர்ந்தும் தடுமாறல்
பயணத்துக்காகாது
இலக்கின் தலைமேலுள்ள குறியில்
விழியகலக்கூடாது.
நடத்தல்
மீண்டும் நடத்தல்
தொடர்ந்தும் தொடர்ந்தும் நடத்தலெனும்
பிரயத்தனமே வெற்றிதரும்.
வெய்யிலடிக்கும்போது நட
மழைபொழியும் நாளில் நட
பனியும் புயலும் தின்னும்
இரவோ பகலோ நட.
நடந்தபின் கொஞ்சம் ஓய்வெடு
நடக்கமுன் இளைப்பாறாதே.
நடை பயணத்துக்கு வேண்டியது
உடற்பலமல்ல
நம்பிக்கை பலம்.
வழிநெடுகிலும் பார்த்தபடி போ.
உனக்கு முந்திய யாத்திரியரின்
எலும்புக்கூடுகள் கிடைக்கும்
பயணவழிக் குறிப்புகள் கிட்டும்
முன்னோடிகளின் காற்தடங்கள் அகப்படும்
எல்லாவற்றையும் கடந்துபோ
அவை வழிகாட்டும் உனக்கு.
இடையில் விழுந்தாலும் தகைமையுடைச் சாவுவரும்.
நாளைய பயணிக்கு
நீயும் திசைசொல்லியாய்க் கிடக்கும்
தவம் பலித்த ஒருவனாக
உன் தடமிருக்கும் மண்ணில்.
போதாதா உனக்கு
தொடர்ந்து நட.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஆதிலட்சுமி சிவகுமார்

# உதிராத சருகுகள்

வானத்தில் கருமுகில்கள் கூட்டம் கூட்டமாய் நகர்ந்து கொண்டிருந்தன. மழையும் மெதுவாகத் தூறிக்கொண்டிருந்தது. மூன்றடி ஒழுங்கைக்குள் ஒற்றையடிப்பாதை தவிர இருமருங்கிலும் புற்கள் மூடி இருந்தன. புஸ்பராசா வீட்டு மதில்கரை ஓரங்கள் மட்டும் புற்கள் செதுக்கப்பட்டு அழகாகத் தெரிந்தது.

மழை பெரிதாகப் பெய்வதற்குள் வீட்டுக்குத் திரும்பிவிடவேண்டும் என்ற நினைப்போடு முத்துராசா சயிக்கிளை இறுக்கிமிதித்தான். பிரதான சாலையில் ஏறியதும்.... வாகனப் போக்குவரத்துகள் அதிகமாயின பாடசாலைப் பிள்ளைகளும் கூட்டம் கூட்டமாய் போய்க்கொண்டிருந்தார்கள்...

"நல்ல மரக்கறியாப்பார்த்து வேண்டிக்கொண்டு வாங்கோப்பா.... இவ்வளவு நாளும் இருந்துபோட்டு.... தம்பியும் விரதநாளில வந்திருக்கிறான்....."

மனைவி கூறிவிட்ட வார்த்தைகள் திரும்ப ஞாபகத்துக்கு வந்தன. சயிக்கிளை பாதுகாப்புகொட்டிலுக்குள் நிறுத்திவிட்டு மரக்கறிவாங்கும் பையை சயிக்கிளில் இருந்து கழற்றிக்கொண்டு திரும்பினான்



ஒளிப்படம்: தி.தவபாலன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

முத்துராசா "முத்து".....

திரும்பிப் பார்த்தான். நாகராசா நின்றான். "விடிய வெள்ளண எங்கையடா இந்தப்பக்கம் ....."

"தம்பி லீவிலை வந்துநிக்கிறானடா.... அதுதான் நல்ல மரக்கறியா ஏதும் பாப்பமெண்டு..."

"என்னடா.... லீவிலை வந்துநிக்கிறவனுக்கு மரக்கறியோ சாப்பாடு..." "மனிசியும் மூத்தவளும் கவுரிவிரதமடா.... அதுகளின்ர விரதத்தை நாங்கள் ஏன் குழப்புவான்?..."

"அதுகும் சரிதான்.... அதோடை எங்கடை வைரவநாதனெல்லே இத்தாலியிலை இருந்து வந்திருக்கிறான்.... உனக்குத்தெரியுமா...."

"தெரியாது..... எப்பவந்தவன்.....

"மூண்டாந்திகதி வந்ததெண்டு சொன்னவன்.... ரெண்டு கிழமை நிற்பான்போல.... உன்னையும் எப்படியிருக்கிற தெண்டு விசாரிச்சவன்..." நெஞ்சுக்குள் ஏதோபாரம் ஏறினமாதிரி இருந்தது.



"வேற என்ன?.... வரட்டே..."

நாகராசா சயிக்கிள் பாதுகாப்பிடத்துக்குப் போனான். சந்தைக்குள் மரக்கறிகளை இப்போதுதான் வெளியே எடுத்து அடுக்கிக்கொண்டிருந்தார்கள். வழமையாக அந்த அம்மம்மாவிடம் தான் முத்துராசா மரக்கறிவாங்குவான். அவவின் கணவர் யாழ்ப்பாணத்தில் விமானக்குண்டு வீச்சில் இறந்துவிட்டார். இடம் பெயர்ந்து பல துன்பங்களுக்கு மத்தியில் சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்யும் அவளிடம் தான் முத்துராசா வாடிக்கையாக வாங்குவான். சிலவேளைகளில் கையில் காசு தட்டுப்பாடாய் இருக்கிற பொழுதுகளிலும் கடனாக மரக்கறிகள் வாங்குவான். முத்துராசாவின் மனைவி மாமிசம் உண்பதில்லை. பிள்ளைகளுக்கும் அவனுக்கும் மட்டும் சமைத்துத் தருவாள்.

கலியாணம் செய்த புதிதில் இறைச்சி அது இது என்று சாப்பிடாவிட்டாலும் சிறிய மீன், முட்டை என்று சாப்பிட்டுவந்தாள். மூத்தவன் வீட்டைவிட்டுப் போனபிறகு அத்தையும் அவள் சாப்பிடுவதில்லை. "நீ சாப்பிடாட்டி பிறகென்னத்துக்கு எனக்கு?..."

அவனும் மறுத்துப்பார்த்தான்.

"நீங்கள் உடம்பை முறிச்சு வேலை செய்யிற நீங்கள்.... இதையும் விட்டா பிறகென்ன?....."

அதற்குப்பிறகு. அவன் எதுவும் சொல்வதில்லை. கொடுப்பதை வாங்கிச்சாப்பிட்டுவிட்டுப் போய்விடுவான்...... ஆனாலும் சாப்பிடுகிறவேளைகளில் உள்ளே ஏதோ உணர்வு மாறும்.

பிரதானவீதியில் ஏறமுயன்ற பாரஊர்தி ஒன்று எழுப்பிய அவலஒலியில்.... நடுங்கிப்போய் முத்துராசாவின் சிந்தனைகள் அறுபட்டன. பாரஊர்தி அவனை விலத்திக்கொண்டு விரைந்தது.

இப்போது அவன் மனதை இத்தாலியிலிருந்து வந்திருக்கும் வைரவநாதனின் நினைவுகள் ஆக்கிரமித்தன.

வைரவநாதனும் முத்துராசாவும், நாகராசாவும் ஒன்றாகப் படித்தவர்கள். முத்துராசாவுக்கும், நாகராசாவுக்கும் குடும்பத்தில் வறுமை கோலோச்சியது.

நாகராசா ஒன்பதாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திக் கொண்டு வயலுக்குள் இறங்கிவிட்டான். முத்துராசா இன்னும் கொஞ்சம் சிரமப்பட்டு பல்லைக்கடித்து க.பொ.த உயர்தரம் வரை படிப்பை இழுத்துப்பார்த்தான். அதற்குமேல் முடியாதென்று தோன்றியது.... குமாரசுவாமி என்கிற பிரபல கட்டிட ஒப்பந்தகாரருடன் நாட்கூலியில் சேர்ந்து கொண்டான்.

வைரவநாதன் க.பொ.த உயர்தரச் சோதினையை மூன்றுதரமும் எடுத்துவிட்டு... இரண்டுவருடங்கள் சவுதியில் போய் நின்றான். அங்கிருந்து வந்தபிறகுதான் திருமணம் செய்தான். திருமணம் செய்த இடமும் பெரும் வசதியான இடமென்று சொல்லிவிடமுடியாது. இவனுடைய கையை அவர்களும் எதிர்பார்த்தார்கள்.

தெரிந்தவர்கள், நண்பர்கள், பழக்கமானவர்கள் என்று எல்லோரிடமும் கடன்பட்டடான். பொய்கள் தாராளமாய்பிறந்தன. வாங்கிய கடனின் வட்டி சுமையானது.

எப்படியோ வைரவநாதன் கொழும்புக்குபோய் யாரையோ பிடித்து இத்தாலிக்குப் போய்விட்டான். அவனுடைய நான்கு பிள்ளைகளும்.... மனைவியும் இரண்டுவருடங்கள் சொல்லொணாத் துன்பப்பட்டார்கள். பிறகு வைரவநாதன் காசனுப்பத் தொடங்கிவிட்டான். மளமளவென்று கடன்கள் அழிந்தன. வீடு உயர்ந்தது. வீட்டைச்சுற்றி மதில் எழுந்தது.

மூத்த பெண் பெரியவளானாள். ஊர்முழுவதையும் அழைத்து விருந்து போட்டு பெரிதாக சாமத்திய வீடு செய்தார்கள். முத்துராசாவும் வேலையால் வந்து குளித்து, மகளையும் கூட்டிக்கொண்டுபோய் சாப்பிட்டுவிட்டு வந்தான். மூன்று நாட்களாக போன எல்லோரையும் வீடியோப்படம் பிடித்தார்களாம்.

இப்போது பதின்நான்கு வருடங்கள் கழித்து வைரவநாதன் ஊருக்கு வந்திருக்கிறான் பெரும் தனவந்தனாக.

ஊரில் பிள்ளையார்கோயில் கோபுரத்தை இடித்து புதிதாக உயர்த்திக் கட்டுகிறார்கள். திருப்பணிகள் இன்னமும் முடியவில்லை. இந்த கட்டிட நிதிக்கு வைரவநாதன் இரண்டு லட்சம் கொடுத்திருக்கிறானாம்.

பதின்நான்கு வருடங்களுக்குப் பிறகு ஊருக்கு வந்திருக்கிறவன் அதுவும் ஊரிலே பெரிய பணக்காரன் தன்னை விசாரித்ததாக நாகராசா சொன்னதை நம்ப முடியாமலுமிருந்தது முத்துராசாவுக்கு. முத்துராசாவின் மனைவி கோயிலில் வைரவநாதனின்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மனைவியைக் காண்பதாக கூறுவதுண்டு. ஆனால் கதைபேச்சு என்று ஒன்றுமில்லை சிலவேளைகளில் முத்துராசாவும் வழிதெருவில் அவளைக் கண்டிருக்கிறான். அவள் சிரித்ததில்லை. ஒருவேளை புருசன் ஊரில் இல்லாதபோது அவனுடைய நண்பர்களைப் பார்த்து ஏன் சிரிக்க வேண்டும் முத்துராசாவின் மனதில் வைரவநாதனைப் பார்க்கவேண்டுமென்ற உந்துதல் இருந்தாலும்.... அன்றாடவேலை நெருக்கடிகள் அதற்கு இடம்தரவில்லை. மூத்தவளுக்கு திருமணம் பேசி வந்தது. ஒன்று விட்ட சகோதரியின் மகன் தான். ஆனால் அவர்கள் எதிர்பார்க்கும் "ஏதோ முடிஞ்சளவு கொஞ்சமென்றாலும்" கூட கொடுக்க வசதியில்லாமல் இருந்தது.

அடுத்தவனுக்கு வவுனியா கல்வியியற் கல்லூரியில் படிக்க அனுமதி கிடைத்தது. அவனுடைய படிப்புச் செலவுக்கு என்னசெய்யலாம் என்று மனம் துடித்துக்கொண்டிருந்தது.

கடைக்குட்டி சோபிதா ஒன்பதாமாண்டு படித்துக்கொண்டிருந்தாள். அவளையும் எப்படியாவது படிப்பித்துவிடவேண்டுமென்ற ஆசை இருந்தது.

சனிக்கிழமை தலைமுடி அளவுக்கு மிஞ்சி வளர்ந்துவிட்டதாகவும்... அதை எப்படியாவது ஒழுங்காக்குமாறும் முத்துராசாவை மனைவி சிலநாட்களாய் நச்சரித்துக்கொண்டிருந்தாள். இன்றைக்கு தலைமுடியை வெட்டியபிறகே என்னவேலையென்றாலும் செய்வது என முத்துராசா முடிவெடுத்து... புறப்பட்டான். கடையில் அவ்வளவாக ஆட்களில்லை.

யாரோ ஒருவயதானவருக்கு முடிவெட்டி முடிந்திருந்தது. அவர் பணம் கொடுத்துக் கொண்டிருந்தார்.

"அண்ணை வாங்கோ..."

இப்போது முத்துராசாவின் முடிவெட்டப்பட்டுக் கொண்டிருந்தது. முடி வெட்டிக்கொண்டிருந்த போது தான் வடிவாக தன் முகத்தை கண்ணாடியில் பார்தான் முத்துராசா.... சொக்கைகள் இரண்டும் உள்ளிறங்கி தலையிலும் நரை அதிகரித்திருந்தது. கண்களும் சாடையாக உள்ளே போனமாதிரி......

சம்பந்தமில்லாமல் மனைவியின் நினைப்பும்வந்தது. மனைவி பேரழகி என்று சொல்லிவிடமுடியாது. ஆனால் மிகுந்த சகிப்புத்தன்மை உள்ளவள் என்ற ரீதியில் அவள் உயர்ந்வள் என நினைத்துக்கொண்டான்.

முத்துராசா காசைக் கொடுத்துவிட்டு வெளியேவந்தான். சயிக்கிளை எடுத்து ஏறமுன்றபோது அருகே யாரோ நடந்து வருவது தெரிந்து. திரும்பிப்பார்த்தான். சட்டென்று அடையாளம் தெரிந்துது. "வைரவநாதன்..."

தன்னையும் அறியாமல் முத்துராசாவின் குரல் உயர்ந்தது.

"ஓ... நீ... முத்தெல்லே...."

இரண்டுகைகளையும் பற்றி இழுத்து..... கட்டி அணைத்தான்.

"எப்பிடி இருக்கிறாய்?...."

"எனக்கென்னடா... நான் நல்லாத்தான் இருக்கிறன்....."

"வீட்டைவாவன்..."

"இப்பிடிச்சும்மா வரக்கூடாது.... பிறகொருநாளைக்குவாறன்.... உன்னைக் கண்டவுடனை நிறையக் கதைக்கவேணும் போல கிடக்கு...." கண்களிற் சிவப்புத் தெரிந்தது.

"எங்கேயோ குடித்துவிட்டு வருகிறானோ..." ஊடுருவிப்பார்த்தான். பார்வையை அவன் புரிந்துகொண்டானோ என்னவோ.

"என்னடாப்பா அப்பிடிபாக்கிறாய்... கோயிலடியால போவம்.... மடத்திலை இருந்து கொஞ்சநேரம் கதைச்சிட்டு போவம்..."

இருவரும் மௌனமாக நடந்து கொண்டிருந்தார்கள். "இப்ப என்ன வேலை செய்கிறாய்?...."

"எங்கடை ஆக்களோடைதான்... இப்ப சண்டையில்லைத்தானே... படம் நடிக்கிறன்... நாடகம் நடிக்கிறன்.... பாடுகிறன்... ஏதோ முடிஞ்ச எல்லாம் செய்யிறன்......"

உதடுகள் சொல்லிக்கொண்டாலும்.... மனம் சுவர்கரைந்த வீட்டையும்..... கிழிந்தசட்டையைத் தைத்து அணிந்திருக்கும் மனைவியையும் சடாரென்று ஒருகணம் நினைத்தது.

"நீ குடுத்து வைச்சனியெடாப்பா....."

"எங்கடை நாடகங்கள்...... கூத்துக்கள் எல்லாம் பாக்கிறனியோ அங்க...... வீடியோவில வெளிநாடுகளுக்கெல்லாம் வாறது......."

அவன் தலையைக் குனிந்து கொண்டு தலையை ஆட்டினான். அவனிடமிருந்து பெருமூச்சொன்று விடுதலை பெற்றது.

மடத்தடி வெறிச்சோடிக்கிடந்தது. பெரிய வேப்பமரத்திலிருந்து நிறையப் பச்சை இலைகள் உதிர்ந்து விழுந்து கிடந்தன.

வைரவநாதனும் முத்துராசாவும் முதற்படியிலேயே அமர்ந்துகொண்டார்கள். குரங்குகள் சில நான்கு கால்களில் நடந்து போய்க்கொண்டிருந்தன. "நான் உண்மையைச் சொல்லவிரும்புறன்...."

"இவன் என்னத்தைச் சொல்ல விரும்புகிறான்...ம்..." மௌமனமாச் சில கணங்கள் கழிந்தன.

"அங்கை எங்கட வாழ்க்கை எப்பிடியிருக்குமெண்டு நீ அறிய விரும்புவாயெண்டு நினைக்கிறன்...."

"........"

"வேலை.... வேலை...வேலை..... இதத்தவிர சத்தியமா எனக்கொண்டும் தெரியாது....."

காற்று குளிர்மையாய் வீசியது. மரத்திலிருந்து இலைகள் உதிர்ந்து நான்கு திசைகளும் பரவின. மழை எந்தக்கணத்திலும் கொட்டலாம், எங்கோ பார்த்துக் கொண்டிருந்த முத்துராசா வைரவநாதனைப் பார்த்தான். மெல்லிய மஞ்சள் நிறம்..... கருகருவென்ற முடியும் மீசையும் . கைவிரல்கள் இரண்டில் பெட்டி மோதிரங்கள்.... தொப்பைவிழுந்த உடம்பு... "உண்மையா முத்து... விடிய எழும்பினா ரயிலைப் பிடிச்சு வேலைக்கு ஓடோணும்.... வேலையில இறங்கினா எதுவும் நினைக்க வராது.... சமைச்சு சாப்பிட்டுப்போட்டு......மிச்சத்தை பிறிச்சுக்குள்ள தள்ளிப்போட்டு.... படுப்பன். பிறகு விடிய..." நிறுத்தி விட்டு முத்துராசாவைப்பார்த்தான்.

".........."

"இப்பிடி ஓடிஓடித் தான்ராப்பா வீட்டுக்கு காசு அனுப்புறம்...."

அவனின் கண்களில் நீர் நிறைந்தது. முத்துராசா அவனின் முதுகில் தட்டினான். "நீங்கள் எங்களை ஏற்றுக்கொள்ளுவியளோ எண்ட குற்ற உணர்விலை..... குனிஞ்சு கொண்டுதான் வந்தனான்..... ஆனா... எங்களில நீங்கள் காட்டுற கரிசனை..."

தலையை ஆட்டி பற்களை உதடுகளால் கடித்தான். அவன் தொடந்து வார்த்தைகளற்றுச் சிரமப்படுவது புரிந்தது. அது இவனுக்குள் ஒருவித உற்சாகத்தை தந்த மாதிரி இருந்தது.

"எழும்பு மச்சான்...... வீட்டைபோவம்....."

இருவரும் எழுந்தார்கள். மழைத்தூறல் விழ ஆரம்பித்தது. அதைப் பொருட்படுத்தாமல் இருவரும் நடக்கத் தொடங்கினார்கள்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தேடாதே தேகம் இருக்காது





போராளி - காந்தா

நாளைய வாழ்விற்காய்
நாட்டின் தேவைக்காய்
காலமறிந்து காக்கும் கடமை
கைகளில் இருப்பதால்
தேடாதே தேகம் இருக்காது.

துயரப் பாடல்களை மனப்பாடம் செய்து
மௌன ஊர்வலம் வந்து கொண்டிருக்கும்
உன் கண்கள் என்னை மட்டுமே
சேமித்து வைத்திருக்கும்.
இலட்ச தீபங்கள் ஒன்றாகி
ஒளி வீசும் சூரியனாய் — என் முகம்
உன்னுள்ளே எல்லாமாகி நிற்பதும் புரிவேன்.

இந்த செய்தி ஒரு மாதமோ ஓராண்டோ
அன்றி ஓரிரு ஆண்டோ
என்றோ ஒரு நாள் எப்படியோ
உன் கையில் கிடைக்கும் - அன்று
என் ஆன்ம துடிப்புக்களை அறிவாய்.
உனக்கு அன்றைய நாள் எப்படியிருக்கமென்று
என்னால் சரியாக கூறமுடியாது.
இதன் மூலம் என்னை நீ புரிவாய்
இதயத்தின் இறுதி மடலது
தேடாதே தேகம் இருக்காது.

எம்தேசத்தில் சாதல் பட்டியல்
எமக்கு கூடிய போது
என்னால் மட்டும் எப்படி இருக்க முடியும்
கண்களைக் கூட இழக்கலாமா?
உனக்கென ஓர் அண்ணன்
மறுபடி வரலாம்

நான் நெருப்புத்தான் ஆனால்
பஞ்சில் பத்தும் நெருப்பல்ல
இரும்பை எரிக்கும் தீ
இதயத்தில் எரிவது தீ - அந்த
இதயம் எரியப் போவதும் தீயில்
இயலாமை என்றைக்கும் இல்லை
ஈரப் பசை இல்லாதவன் - என்று
இயம்புவாய் புலம்புவாய் எதுவானாலும்
என்னை இயக்குபவருக்கும்
எனக்கும் மட்டுமே தெரியும்
எனது பயணப் பாதை
எங்கள் மக்கள்
கரும்பாய் சரிந்த போதெல்லாம்
இரும்பாய் இதயம் இறுகியது
சிறைக் கூடங்களில்
சாறாய் பிழியப்பட்ட போதெல்லாம்
இதயம் நாராய் கிழிந்தது - இனித்
தேடாதே தேகம் இருக்காது.

இங்கு வந்த இத்தனை ஆண்டுகளில்
எத்தனையோ மனிதர்களிடம்
புத்தனின் மனிதம் இருப்பதை கண்டேன்.
இந்த மனிதர்களிடம் இருந்து வந்த
அந்த மனிதர்கள் தானே - எம்
பிஞ்சுகளை சிதைத்தனர்கள்.
எங்கள் கைக்குள்
ஆயுதத்தை திணித்தார்கள் - மனங்களில்
தீராத வடுக்களை விதைத்தார்கள்.
அன்பான உன்னிடமே முழுமையான
என் முகவரியை மறைக்கவும்
கருமை என்ற உறுதியை கைப்பிடிக்கவும்
அவர்கள் தானே கற்றுத் தந்தார்கள்.

சாதிப்பதற்காய் சென்று சென்று
தோல்வியுடன் திரும்பும் - ஒவ்வொரு
தடவையும் என் நெஞ்சையறியாத நீ
சிரிக்கச் சிரிக்கப் பேசி
புன்னகை பூக்களால் உள்ளத்திற்கு
ஒத்தடமிட்டுக் கொண்டிருப்பாய்
எல்லாம் மறந்து உன்
இல்லத்தில் களித்திருப்பேன்
இதற்காய் ஒரு போதும் வரிகளில்
நன்றி சொல்லப் போவதில்லை.
நாளைய வாழ்விற்காய்
எமது இறுதி நோக்கு
எட்டினால் போதும்
தேடாதே இப்போ தேகம் இருக்காது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழர்தாயகத்தின் மூத்த, பாரிய நீர்ப்பாசனக்கட்டுமானம்; கட்டுக்கரைக்குளம்


ஒளிப்படம்: அமரதாஸ்

மன்னாரில் இந்த கட்டுக்கரைக்குளம் இருக்கிறது. வரட்சியை அதிகம் கொண்ட தனித்துவமாக ஆற்றுப்படுக்கை இல்லாத தான கட்டுக்கரைக்குளம் சுமார் 2000 ஆண்டு களின் முன்னதான மக்களின் நீர்ப்பாசனத் தொழில்நுட்ப அறிவுக்கு சான்றாகும்.

ஏனெனில் கட்டுக்கரைக்குளம் இயல் பாக இயற்கையாக ஒரு ஆற்றுவெளிபடுக் கையை கொண்டதல்ல.

மன்னாரின் தென்பகுதியில் ஓடும் வளம் மிக்க அருவிஆற்றை திசைதிருப்பி அள வக்கை ஆறு என்ற கால்வாய்மூலம் நீர் கட்டுக்கரைக்குக் கொண்டுவரப்பட்டு உரு வாக்கப்பட்டது. கட்டுக்கரை நீர் மூலம்தான் வரட்சியான தொன்மை நகரான மாந்தை வளமுடன் வாழ்ந்திருக்கின்றது. சிங்களவர் தம்வரலாறு எனக்கொள்ளும் மகாவம்சத்தில் இந்த கட்டுக்கரை யோதவாவி எனக்குறிப் பிடப்பட்டுள்ளது.

இதன்மீதான முதல் ஆய்வு ஆங்கிலேய நீர்ப்பாசனப் பொறியியலாளர்களால் மேற் கொள்ளப்பட்டது.

வரடசிப்பகுதியான மன்னாருக்கு குளம் ஒன்றை அமைக்கும் தேடலில் அவர்கள் ஈடுபட்டபோது அழிவடைந்த நிலையில் பண் டைய கட்டுக்கரைக்குளம் கண்டுபிடிக்கப் பட்டது. 1950 ஏக்கர் பரப்பளவில் 5 அடி ஆழத்தைகொண்டதாக 1800களின் கடைசி யில் கட்டுக்கரை கண்டுபிடிக்கப்பட்டது.

அவர்கள் அந்தக் குளத்தின் ஆற்றுப் படுகையைத் தேடி ஆய்வை மேற்கொண்ட னர். அதன்போது அவர்கள் அருவிஆற்றில் இருந்து நீர் கட்டுக்கரைக்கு திசை திருப் பப்பட்ட இடத்தை கண்டுபிடித்தனர். மன்னார் வவுனியா வீதியில் மடு வீதிச்சந்திக்கண் மையாக தெற்கே குஞ்சுக்குளத்துக்கு செல்லும் பாதையில் இப்போது தேக்கம் என்ற இடத்தில் அருவிஆறுதிசை திருப்பப் பட்ட சான்றுகளை அவர்கள் கண்டனர். தேக்கம் கல்லணை என அது அழைக்கப்படு கின்றது.

அந்தத் தேக்கம் அணை 90 அடி அகல மாக இருந்தது. இந்த கல்லணை அமைக்கப் படுவதற்கு முன்பதான ஒரு அணை இருந் ததற்கான சான்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

கல்லணை என்ற தொழில்நுட்பத்திற்கு முன்பதானதாக அது அமைந்தது. அந்த மூத்த, அருவிஆறு திசைதிருப்பல் அணை இப் படித்தான் அமைந்திருந்தது. ஆறின் அடித்தளத் தில் இருந்த பாறையில் வரிசையாக சதுரக்குழி கள் காணப்பட்டன.

இவற்றில் பலமான மரங்கள் செருகப்பட்டு ஆறு மறித்து திசைதிருப்பப்பட்டிருக்க வேண் டும் என பிரிட்டன் நீர்ப்பாசனப்பொறியிய லாளரும் தொல்லியல் ஆய்வாளருமான ஹென்றி பார்க்கர் தெரிவிக்கிறார். இந்தப் பிரதான மரஅணையைத்தாங்க தாங்கு மரங் களும் அமைக்கப்பட்டிருந்ததற்கான சான்றாக அதற்குரிய கற்குழிகளும் கண்டுபிடிக்கபட்டுள் ளன. இந்த அணையின் பின்னர்தான் கல் லணை கட்டப்பட்டிருக்க வேண்டும் என அவர் தெரிவிக்கிறார். இரு அணைகளுக்கும் இடைப் பட்ட கால இடைவெளியும் அதிகம் என்றே பார்க்கர் கூறுகிறார்.

கிட்டத்தட்ட கல்லணைக்கு முன்பதாக ஒரு நீர்த்தேக்கமாக அது இருந்திருக்கிறது எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

தேக்கத்தில் தமிழரின் பெருங்கற்காலத் துக்குரிய மட்பாண்டங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவை பெருங்கற்கால குடியிருப்பாக இருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. தேக்கம் கல்லணை யில் இருந்த செங்கற்கள் 2.51 x 8.57 அங்குல அளவுடையதாக இருந்தன. அதன் கனவளவு 324 கன அங்குலமாக இருந்தது. இது கி.பி 2ம் நூற்றாண்டு முதல் 4ம் நூற்றாண்டு வரையான காலத்துக்குரிய செங்கல் அளவாகும். ஆக இதற்கு பல நூற்றாண்டுகள் முன்பதாக கட்டுக் கரை இருந்து வந்துள்ளது என்பது பார்க்கரின் முடிவு.

கட்டுக்கரைக்குளத்தின் மீள்அமைப்பில் ஈடுபட்ட பிரிட்டன் நீர்ப்பாசனப் பொறியியலாள ரான வே.ஆ.வோக்கர் கட்டுக்கரைப்பகுதியில் செப்பனாக வெட்டப்பட்ட கற்களை கண்டு பிடித்துள்ளார். அது குளத்தின் மடைப்பபகுதி யாக இருந்திருக்கலாம் என்பது வோக்கரின் முடிவு. மேலும் குளப்பகுதியில் எண்கோணத் தில் செதுக்கப்பட்ட தூண் ஒன்றும் எடுக்கப்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பட்டது. அதில் ஒரு கல்வெட்டும் இருந்துள்ளது. "ஶ்ரீமத் சிகபுர ஜட ஶ்ரீபராக்கிரம பாகு நகரிதன் விஸ்வலோ காத்த காரிய யா பாரிதத் மனா" என குறிப்பிடப்பட்டிருந்தது.

சிங்கள மன்னனான பராக்கிரமபாகுவின் எழுச்சிக்காலத்தில் இக்குளமும் அகப்பட்டுள்ளது. இலங்கையில் முக்கிய பெரிய குளங்களில் பராக்கிரமபாகு கல்வெட்டுகளை பொறித்துள்ளான். அவற்றில் ஒன்று கட்டுக்கரையிலும் பொறிக்கப்பட்டிருக்கிறது.

கட்டுக்கரைக்குளத்தின் மற்றொரு தொன்மை அதன் கீழான புலவுப்பயிர்ச் செய்கை யாகும்.

புலவுப்பயிர்ச்செய்கை எனப்படுவது ஆற்றுப்படுகைகளில் காணப்படும் வண்டல் வெளிகளில் ஆறை மறித்து அதில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதாகும். உலகில் ஆரம்ப காலப்பயிர்ச்செய்கை ஆறுகளை மறித்து அதன் படுக்கைகளில் பயிர் செய்வதாகும். அதற்கான சான்றுகள் வன்னியின் ஆற்றுப்படுகைகளில் உள்ளன. இலங்கையில் வட பகுதியில் மட்டுமே ஆறுகள் வேகம் குறைந்து சிறந்த வண்டல் வெளிகளை கொண்டுள்ளன. இவற்றில் கட்டுக்கரைக்குளத்தின் கீழ் 162 ஊட்டக்குளங்கள் உள்ளன. அதாவது கட்டுக்கரை நீரைப்பெற்றுள்ள குளங்கள் அவை. மன்னாரில் இன்றும் வரட்சிக்காலத்தில் குளங்களின் படுக்கைகளில் பயிர் செய்யும் முறை கடைப்பிடிக்கப்படுகின்றது. இது தொன்மைக் கால புலவுப்பயிர்ச்செய்கையின் எச்சமாகும். இன்றும் இலங்கையில் மிக தொன்மைக்கால பயிர்ச்செய்கை படுக்கையாக கட்டுக்கரை ஊட்டக்குளங்கள் உள்ளன.

ஆங்கிலேய பொறியியலாளர்கள் கட்டுக்கரையை கண்டுபிடித்த வேளையில் அதன் படுக்கைப்பகுதிகளில் மக்கள் பயிர்ச்செய்கையினை மேற்கொண்டிருந்தனர். அதனைக் கண்ணுற்ற அவர்கள் கட்டுக்கரைக்குளம் இயற்கையாகவே ஒரு வண்டல் வெளி என்பதை உணர்ந்திருந்தனர். அவர்கள் தம் அறிக்கையில் அதனைக்குறிப்பிட்டிருந்தனர். சிங்கள வரலாற்றாசிரியர்கள் தம் பகுதிகளில் தான் நீர்ப்பாசன நுட்பம் முதலில் விருத்தியடைந்தன என்ற இறுமாப்பை தகர்க்கும் வகையில் தமிழர் பகுதி தொன்மை நுட்பத்தின் சான்றாக கட்டுக்கரைக்குளம் விளங்குகின்றது.

கட்டுக்கரைக்கு இராட்சதக்குளம், அரக்கர் குளம் என்றுள்ள பண்டைய பெயர்கள் அதன் தொன்மைக்கு மற்றொரு சான்று.

தி.தவபாலன்

# அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவாக...



## வல்லரசு வேடங்களை மனவலியால் கிழித்தவள்

அன்னை பூபதி தேசத்தின் அன்னையானாள்
பார் போற்றும் நாயகியை
பாரதம் பலி கொண்டதுவோ?
அகிம்சைக் கரம் கொண்டு அழிக்க நினைத்ததுவோ?

தென் தமிழீழத்தில் உதித்தவளே
எம் மண்ணில் விடுதலைப்பசியோடு இருந்தவளே
அகிம்சை வழி பெரிதென்று சொன்னவர்க்கு
அந்த வழி சென்று அகிம்சையை வென்றாயே

மாதம் ஒன்று பசிகிடந்தாய்
மட்டில்லா துன்பங்கள் வாழ்வில் நீ சுமந்தாய்
மாமாங்க வீதியிலே மண்டியிட நீ மறுத்தாய்
வல்லரசு வேடங்களை மனவலியால் நீ கிழித்தாய்.

பே. சுகந்தன்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## மூன்றாவது துளை

பலமில்லியன் கணக்கில் ஆயிரக்கணக்கான
நெடுஞ்சாலைகளில் மோட்டார் வாகனங்கள்
ஊர்ந்து கொண்டேயிருக்கின்றன.

எங்கெங்கோவிருந்தெல்லாம்
பேருந்துகள் புறப்பட்டு எங்கெங்கோவெல்லாம்
போய்க்கொண்டேயிருக்கின்றன.

ஒவ்வொரு நகரத்திலிருந்தும் ஆகக்குறைந்தது
ஒரு புகைவண்டியாவது ஒவ்வொரு கணமும்
பயணப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

முகிலைக் கிழித்து வானை உரசும்
விமானங்கள் திசையெங்கும்
பறந்து கொண்டேயிருக்கின்றன.

பயணங்கள் பயணித்துக் கொண்டேயிருக்கின்றன.
வீட்டுக்கென்னை அழைத்துச் செல்லாத
வெறும் பயணங்கள்தான் இவையனைத்தும்.

வாழ்க்கைப் பேரங்காடியில்
அனைத்தையும் வாங்குவதற்காய்
அனைத்தையும் விற்று. ஆதாயம் ஏதுமின்றியே
சந்தை முடிந்த பின் என்னுயிர்
ஒரு வெள்ளிக்கிழமை மாலைப்பொழுதில்
வீடு போகக் காத்திருக்கிறது.

எங்கு சென்று விட்டபோதிலும்.
மேலும் எங்காவது செல்லவேண்டும்
எனும் ஒரு சலிப்பற்ற விருப்புடன்
ஏதாவது ஒரு புகையிரதம் வரும் வரையும்
ஏதோ ஒரு நிலையத்தில்
என் உயிர் வீடு செல்லும் பயணத்தை
எதிர்பார்த்துக் காத்து நிற்கிறது.

சென்றடைய முடியாதென்றாகிவிட்ட
வீட்டைச் சென்றடையும் வரையும்
என் உயிர் தன் விரலிடுக்கில் மரணத்தை மூட்டிப்
புகைத்துப் போதையுற்று குளிர் மண்டிய
ஒரு புகையிரத நிலையத்தில் காத்துக்கிடக்கிறது.

இதுவரையும் வராததால்,
இறுதியில் வரவேண்டியது இனி எப்போ வந்தாலும்
தாமதாகியே வரும் என்பது உறுதியாகிவிட்டது.

பானையில் மூன்றாவது துளையிடுவது
மாத்திரம் இன்னமும் பாக்கியாயிருக்கிறது.

## தத்துவத்தின் தோல்வி அல்லது தோல்வியின் தத்துவம்

கட்டிலை விட்டுக் காலையில்
எழுந்து கொள்வதற்குக்
கற்பிக்க வேண்டிய
காரணங்களைக் கண்டு கொள்வது
நாளுக்கு நாள் கடினமாகிக் கொண்டே போகிறது.

இரவெல்லாம் கனவுகளில் துளித்து வழிந்த
அபத்தங்களைத் திருடி எடுத்துக்
கதவுக்குப் பின்னால்
என்னைக் காத்துக் கொண்டு நிற்கும்
பேய்கள் வேடம் போட்டுக்கொள்கின்றன.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஓவியம்: வான்கோ

# இலையுதிர்காலத்தில்....

பின் அறையை விட்டு வெளியேறும் வேளை
எனக்கு ஆசை காட்டி நாள் முழுவதும்
அவை என்னுடன் அலைகின்றன.

பள்ளிக்கூடச் சிறுவன் பாண்
கடைக்குப் போவதுபோல் வாழ
எண்ணும் எனக்குப் பங்குச் சந்தை
நிலவரங்களை இடைவிடாது நாள்முழுவதும்
கூறிக்கொண்டேயிருக்கின்றன
என்னுடன் பகலில் அலையும்
பிசாசுகள்.

பின்னிரவில் அறைதிரும்பிக்
கட்டிலுக்குப் போகும் போது
மனம் மந்தமுற்றுச் சுமக்கிறது.

போர்வைக்குள் நுழைந்தபின்தான் புரிகிறது
நான் ஒரு கரப்பான் பூச்சியாக மாறிவிட்டிருப்பதும்
எனக்குக் காவ்கா நோய் பீடித்திருப்பதுவும்.

என் அறைகூட இப்போ
எனக்குப் பாதுகாப்பற்ற
இடமாகிவிட்டது.

இனி எனக்கும் விடுதலை
வேண்டும்.

அறுவடை முடிந்துஅடுத்த வசந்தம் வரையும்
அநாதையாகிய கோதுமை வயல் வெளிகளைத்தாண்டி.
எவரும் பயணிக்காத ஏகாந்தப் பாதைகளுடனும்
இலைகளையுதிர்த்த நெட்டை நெடு மரங்களுடனும்
உரையாடிக்கொண்டே,

நீள் கோடாய் கிழக்கே நோக்கி
விரைகிறது தண்டவாளம்.

இருள்தரும் இதம்போல்
இதந்தருகிறது குளிர்காலத்தை
அண்மிக்கும் இலையுதிர்காலம்.

புகார் மண்டி அலையற்று கரையோர
மொட்டை மரங்களின் துயரத்தை விம்பித்துத்
துயில் கொள்ளும் மார்ன் நதிக்
கரையில் ஆரம்பித்து வியாபிக்கின்றது
அன்றைய நாள் அராலி வெளி.

மனங்கொள்ளும் காலங்களுக்கும் மதிகொள்ளும்
காலத்திற்குமான எல்லைகள் மயக்கமுற்றுத்
தெளிவிழந்து போன இருப்பில் இடங்களும் கலைகின்றன.

பட்டுப்போன ஒரு பூவரசைச் சுற்றி வட்டமிடுகின்றன
வான்கோவின் இறுதி ஓவியத்திலிருந்து
புறப்பட்ட காகங்கள்.

இடம் பிறழ்ந்து எழுந்து மார்ன் நதிக் கரையில்
இன்று வியாபிக்கும் அன்றைய அராலி வெளியில்
அகாலமாய் தோற்றம் கொள்ளும் ஒற்றைப்பனையின்
அடியில் கள்ளுண்டவாறே மொஸாட்
'றெக்கியுயம்' இசை தொகுத்துக்கொண்டிருக்கிறான்.

என் இலையுதிர் காலத்தினூடாக
மூளைக்குள் முடிவற்று ஓடிக்கொண்டிருக்கும்
ஒரு தண்டவாளத்தில் நான் என் பலஸ்தீனத்திற்குப்
பயணப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.

வாசுதேவன் கவிதைகள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அன்றுதான் அவரை நான் முதன் முதலாகப் பார்த்தேன். பரந்த வட்டமான, பெரிய விழிகளையுடைய குழந்தைத்தனமான முகம். நிமிர்ந்து என்னைப் பார்த்த முகத்தில் அப்போதுதான் புதிதாக அல்லாமல் ஏற்கனவே என்னை அறிந்தவர்போல் ஒரு பாவனை. பார்த்த மாத்திரத்தில் மனதில் பதிந்து விடுகின்ற முகம் அது. யார் அது? புரியவில்லை. முன்னர் எப்போதாவது சந்தித்திருப்பேனா? நினைவில்லை.

நான் போய்க்கொண்டிருந்தது என் நண்பனைச் சந்திக்க. அங்கே நண்பன் எனக்காக காத்திருந்தான். தாமதத்துக்கு மன்னிப்புக் கேட்கவேண்டிய தேவையே இல்லை. சிரித்தபடி அமர்ந்தேன். சந்தித்த விடயம் சற்று முக்கியமானது. கதைத்து முடிந்தபின் பேச்சு திசைமாறியது. எனக்குள் அந்தக் குழந்தைத்தனமான முகம் வந்து போனது. நான் மெல்லப் புன்னகைத்து விட்டேன் போலிருக்கின்றது. ஏதோ சொல்ல வாயெடுத்த நண்பன், என்னவெண்று கேட்டான். சிரித்துவிட்டு.

"பிறகு சொல்லுறன். நீங்கள் சொல்லுங்கோ"

என்றேன்.

"இண்டைக்கு உங்களைப்பற்றி எங்கடை இடத்தில கதை வந்துவிட்டுது"

என்றான். நான் ஆர்வத்தோடு பார்த்தேன்.

"வெளிக்கிடுறதுக்காக முகம் கழுவ சோப் கேசைத் தூக்கிக்கொண்டு போகேக்கையே பொடியள் பகிடிபண்ணத் தொடங்கிவிட்டாங்கள், சினேகிதியிட்டப் போறியோ எண்டு. நான் சிரிச்சுக்கொண்டு கிணத்தடிக்குப் போனன். முகம் கழுவிக்கொண்டிருக்கேக்க கிணத்தடிக்கு அவர் வந்தார். எங்கை போறாய் எண்டார். உங்களிட்டைப் போறன் எண்டன்.



மலைமகள்

# எனது மனிதர்கள்-2



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஆளோட எதுவும் கதைக்கலாமோ எண்டு கேட்டார்.

ஓ, நீங்கள்கூட அவவோட கதைக்கலாம். அவ கதைப்பா எண்டன்.

சீ, நான் கதைக்கேல்லை, ஆனா ஒரு விசயத்தை ஆளிட்டச்சொல்லிவிடு. பெண் விடுதலை, அது , இது எண்டு என்ன இருக்குது. காலுக்கு மேல் காலைப் போட்டுக்கொண்டிருந்தா, பனைமரத்தில ஏறினா விடுதலை கிடைக்குமோ? ஆணாதிக்கம் எண்டு ஒண்டுமில்லை. இப்ப, ஒரு கணவன் சாப்பிட்டுட்டு தட்டில மிச்சம் வைச்சா, அதை மனைவி சாப்பிடுறதை இவை அடக்குமுறை எண்டு நினைக்கக்கூடாது. அவர் ஏன் மிச்சம் விட்டவர்? சட்டிக்குள் இருந்த எல்லாத்தையும் வீட்டில இருக்கிற எல்லாரும் சாப்பிட்டிருப்பினம். இவள் ஒண்டும் எடுத்து வைக்காமல் எனக்குத்தான் தந்திருப்பாள் எண்டு அவருக்குத் தெரியும். அவளும் சாப்பிடவேணும் எண்டுதான் அவர் மிச்சம் வைக்கிறவரே தவிர, அவளை அடக்கவேணும் எண்டு நினைச்சு இல்லை. தனக்கு அவர் தருவார் எண்டு அவளுக்கும் தெரியும். அது ஒரு கணவனுக்கு தன்ரை மனைவியிடமுள்ள அன்பு, பாசம், புரிந்துணர்வு எண்டதை உங்களுக்குச் சொல்லு எண்டு சொன்னவர்”என்றான் என் நண்பன்.

அவ்வளவு நேரமும் ஒரு சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருந்த நான்.

“கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயான உறவு அந்த ரெண்டு பேர்மட்டுமே தீர்மானிக்கவேண்டிய விடயம் எண்டு நான் நினைக்கிறேன். அதைப்பற்றி விவாதிக்க நான் எப்பவுமே தயாரில்லை. நான் விவாதிச்சிருக்கவுமில்லை. எல்லாம் இருக்கட்டும். அவர் ஆர் எண்டு எனக்கு விளங்கக்கூடிய மாதிரிச் சொல்லுங்கோ” என்றேன்.

பெயரைச் சொன்னான்.

விளங்கவில்லை.

பட்டப் பெயரைச் சொன்னான்.
ம்ஹூ...ம். புரியவில்லை.

“அடையாளம் சொல்லுங்கோ” என்றேன்.

சொன்னான் அடையாளத்தை. அவர் பாவிக்கும் உந்துருளியை.

ஓஹோ ஹோ ஹோ!

நண்பன் சொல்லச் சொல்ல.... பார்த்த மாத்திரத்திலேயே மனதில் பதிந்துவிடுகின்ற பரந்த, வட்டமான, பெரியவிழிகளையுடைய, குழந்தைத்தனமான முகமும், அப்போதுதான் புதிதாக அல்லாமல், ஏற்கனவே என்னை அறிந்தவர்போல அதில் தெரிந்த பாவனையும், உந்துருளியை வளைத்துத் திருப்பிய லாவகமும் மனதுக்குள் பளிச்சென வந்து போயின.

“என்ன, ஆளை விளங்கிட்டுதோ”

என்றான் நண்பன்.

“ம் ......ம்....... ம்.... அவரின்ர அன்பான ஆலோசனைக்கு என்ரை நன்றியைச் சொல்லிவிடுங்கோ”

என் புன்னகை அகல விரிந்தது. அந்தக் குழந்தை முகத்துச் சொந்தக்காரனா எனக்குப் பெண் விடுதலை வகுப்பெடுப்பது?

* * *

தளத்தில் நின்ற எல்லோருமாகச் சேர்ந்து அவருக்கு ‘பனையேறிய பெண் விடுதலை’ என்ற பட்டத்தைச் சூட்டினார்கள். நான் ஒருத்திக்கு அடையாளம் காட்ட, அவள் மற்றவளுக்குக் காட்ட, அப்படியே எல்லோரும் எமது கதாநாயகனை இனங்கண்டுகொண்டார்கள். ஆனால் மிகவும் கண்ணியமாக நடந்துகொண்டார்கள். லூட்டி அடிப்பதெல்லாம் தளத்தில் மட்டும்தான். வீதியில் அல்ல. ஆனால் நாளொரு கதையும் பொழுதொரு புதினமும் எப்படியோ அவரைப்பற்றிச் சேகரித்துக்கொண்டு வந்து ஒலிபரப்புவார்கள்.

இவர்கள் திரட்டிய தகவல்களின்படி, அவருக்குப் பெண்கள் விடயத்தில் ஈடுபாடே இல்லை. தேவையேற்பட்டால்கூட பெண்களோடு அளந்துதான் பேசுவார்.

அப்படியா? அதனால்தான் எங்களிடம் பனைமரம் ஏறாதே, காலுக்கு மேல் கால் போடாதே என்று வலியுறுத்தப்பட்டதோ? இது வெறுப்பின் வெளிப்பாடோ? கேலியோ?

எப்போதும் அமைதி தவழும் அந்த முகத்தை பார்த்தால் ஒரு கோபக்காரனைப்போல் தெரியவில்லையே.
எம்மை நேராகப் பார்கின்ற அந்த அகன்ற விழிகளுக்குள்ளே வெறுப்பைக் கண்டதாக நினைக்கவில்லை. ஆனால் அந்த விழிகள் சிரித்ததாகவும் நினைக்கவில்லை. ஆக மொத்ததில், பனையேறிய பெண் விடுதலையை ஒரு முசுறு என்று முடிவெடுத்தோம். இவர் யார் எங்களைப்பற்றிக் கதைக்க என்ற கோபமும் மனதில் எழாமலில்லை.

* * *

அந்தச் சந்திப்பு அன்று எதிர்பாராத விதமாக நடந்தது. நானும் இன்னொருத்தியும் குடும்ப நண்பர் ஒருவரின் வீட்டுக்குப் போயிருந்தோம். நண்பர் முன்னறையில் இருந்தார். நண்பரின் மனைவி வீட்டுக் குள்ளிருந்தவாறே ஏசிக்கொண்டிருந்தார். அவர் ஏசிக்கொண்டிருந்தது ஒரு கணவரை. யாரந்தக் கணவர்? நமது நண்பரா? காதல் திருமணம் கலகலப்பாக வெள்ளிவிழா ஆண்டை நெருங்கும் நேரத்தில் சபையைக் குழப்பியது யார்?

தனது அமைதி எம்மை மேலும் குழப்புவதை அறிந்துகொண்ட எமது நண்பர் விடயத்தை விளக்கினார். நண்பரின் மனைவியின் நாவில் விழுந்து புரண்டுகொண்டிருக்கும் கணவர் வேறொருவர். இவரல்ல. அவர் தன் மனைவியை வீட்டின் நாலு சுவருக்குள் வைத்துச் செய்த சித்திரவதை போதாதென்று வீதியிலே இழுத்து வந்து அடித்ததைப் பொறுக்கமாட்டாத மனைவி இவர்களிடம் அடைக்கலம் தேடி வந்திருக்கிறார். அந்தக் கணவரைக் கூட்டிவர ஆள்விட்டு, கணவர் ஊழியம் செய்யும் நிறுவன மேலாளரைக் கூட்டிவர ஆள் அனுப்பிவிட்டு குமுறிக்கொண்டிருந்தது இந்த வீடு. கதையைக் கேட்ட எங்களுக்கும் கொதி ஏறியது.

திடீரென வீட்டினுள் வந்த உந்துருளி ஒன்று முன்னறைக்கு நேரே வந்து நின்றது. அதில் வந்தது பனையேறிய பெண் விடுதலை. குழந்தை முகம் கோபத்தில் இறுகிக் கிடந்தது. நாங்கள் அறிந்த நாள்வரையில் இப்படித் தோற்றத்துடன் இதற்கு முன் கண்டதில்லை. வருகையின் நோக்கமும் கோபத்தின் காரணமும் புதிர்களாக இருந்தன.

நமது நண்பர் அவரிடம் நடந்து முடிந்திருந்த குடும்ப வன்முறையை முழுவதும் விளக்கினார். அந்த உரையாடலின்போதுதான் வில்லன் வடிவெடுத்த கணவர் வேலை செய்யும் நிறுவனத்தின் மேலாளர் நமது கதாநாயகன் என்பது புரிந்தது. மனைவிக்கு கொடுத்துச் சாப்பிடும் கணவர்கள் அடக்குமுறையாளர்களல்ல என்பது இருக்கட்டும். மேலான புரிந்துணர்வை வெளிப்படுத்தவேண்டிய படுக்கையறையிலே மனைவியைக் காயப்படுத்துகின்ற இந்தக் கணவனின் செயலையும் இவர் நியாயப்படுத்தப்போகின்றாரா?

பனையேறிய பெண் விடுதலைக்குச் சினம் சிரசிலேறியது. சீறி வந்தன வார்த்தைகள்.

“ஆள் இப்ப வருவார்தானே? வரட்டும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அடிச்சுக் கையைக் காலை முறிச்சுப் போடுறன். பொம்பிளையளைப் பூ மாதிரி வச்சிருக்கவேணும். மனிசியைக் கை நீட்டி அடிக்கிறவனுக்கெல்லாம் என்னத்துக்குக் கலியாணம்?"

குழந்தை முகத்தின் மனதுக்குள்ளிருந்த பூ இதழ் இதழாக விரிந்து, தன் மென்மையையும், வாசனையையும், பிரம்மாண்டத்தையும் வெளிப்படுத்த, எனக்கு என்மேலேயே கோபம் வந்தது.

* * *

தளத்தின் முன்னறையில் எங்கள் பாராளுமன்றம் கூடியது. "பூ மாதிரிப் பெண்களை வைத்திருக்கவேண்டும்" என்ற வார்த்தைகளில் எல்லாருமே ஆடித்தான் போனோம். மனைவியை எப்படி வைத்திருப்பதென்பது அவரவர் தனிப்பட்ட விடயம். ஆனால் அந்த மனிதரைப் பற்றித் தவறாகக் கணிப்பிட்டிருந்ததை எண்ணி நொந்து போனோம்.

எனினும், மனதில் நெருடல் இல்லாமல் இல்லை.

"இப்படிக் கதைத்தவர் ஏன் அன்று அப்படி ஒரு விடயத்தைச் சொல்லி விடவேண்டும்?"

"முரண்பாடாக இல்லை?"

நள்ளிரவு கடந்தும், எங்களின் கூட்டத்தொடர் நீண்டது.

பெண்களை நேசிப்பது அவரது இயல்பாக இருக்கலாம். பெண்களோடு கதைக்கக்கூடாது என்பது அவர் தன்மீது தான் விதித்துக்கொண்ட கட்டுப்பாடாக இருக்கலாம். கட்டுப்பாட்டை உணர்வுமீறியபோது, நேசத்தை வெளிக்காட்டியிருக்கலாம் என்று கடைசியில் முடிவெடுத்தோம். நாங்களெல்லோருமே அவரை நேசிக்கத் தொடங்கிவிட்டோம் என்பதை உணர்ந்துகொண்டோம்.

மறுதடவை குடும்ப நண்பரைச் சந்தித்தபோது, பனையேறிய பெண் விடுதலை சொல்லிவிட்ட 'மிச்சம் சாப்பிடுகின்ற புரிந்துணர்வுக்' கதையைச் சொன்னேன். மனைவியை அடிப்பவர்களுக்குத் திருமணம் எதற்கு என்று சீறியதால் அவர்பற்றி எங்களிடம் எழுந்த கேள்விகளைச் சொன்னேன். அவ்வளவு நேரமும் முகமெல்லாம் சிரிப்போடு என் கதையைக் கேட்டுக்கொண்டிருந்த நண்பர் அட்டகாசமாக ஒரு சிரிப்புச் சிரித்தார்.

"அதுக்கிடையில அந்தக் கதையும் உங்களுக்குச் சொல்லி விட்டுட்டானோ?" என்றார் சிரிப்பின் இடையே.

எந்தக் கதையை? நானும் என்னோடு வந்திருந்தவரும் ஆளை ஆள் பார்த்துப் புருவங்களை உயர்த்தினோம். அமர்க்களமான சிரிப்போடு நண்பர் நடந்த கதையை விளக்கினார்.

"நான்தானம்மா அந்தக் கதையை அவனிட்டை சொன்னனான். பெண் விடுதலைபற்றி ஒருநாள் கதை வந்திட்டுது. எல்லாத்தையும் தூக்கி எறியிறது. ஆண்கள் எதிர்க்கிறதுதான் பெண் விடுதலை எண்டு கனபேர் பிழையா நினைச்சுக்கொண்டிருக்கினம். அப்படியில்லை. ரெண்டுபேரும் அனுசரிச்சுப் போறதுதான் பெண் விடுதலை. கணவன் சாப்பிட்ட மீதியை மனைவி சாப்பிடுறதை அடக்குமுறை எண்டு ஆரும் சொல்லட்டும். நான் சொல்லமாட்டேன் எண்டு நான்தான் அந்தக் கதையை அவனுக்கு விளக்கமாகச் சொன்னனான். அதுக்கு நீங்கள் என்ன சொல்லுவீங்கள் எண்டு உங்களிட்டையே கேட்டுப் பார்க்கச் சொன்னனான்.

அவன் உங்களில கோபத்தில கேக்கேல்லை. அவன் ஒரு குழந்தையம்மா. உங்களைக் கேலி செய்ய வேணுமெண்டு நினைக்கிற ஆளுமில்லை. சும்மா கேட்டான். அவ்வளவுதான். அவன் ஒரு ஞானி. அவனுக்கு ஒருத்தரையும் புண்படுத்த தெரியாது.....'

எங்களின் மதிப்புக்குரியவர்களின் பட்டியலில் அந்தக் கணமே அவரைச் சேர்த்து விட்டோம். முற்றத்து ஒற்றைப் பனைக்கு நிகராக இவரையும் அந்த உயர்ந்த இடத்தில் தூக்கி வைத்தோம்.

அதற்காக, அதன் பின்னர் ஏதோ நாம் தேடிப் போய் அவரோடு கதைத்தோம் என்றெல்லாம் இல்லை. வீதியில் காண நேருகையில் நிமிர்ந்து ஒரு பார்வை. நேசமான ஒரு பார்வை. அவ்வளவே. உரையாடல்கள் இல்லாமலேயே உறவு தொடர்கிறது.

மனதுக்குள் உள்ள நேசத்தை மனிதர்களிடம் வெளிப்படுத்துவதற்குக்கூடக் கஞ்சத்தனம் பார்க்கும் பிறவி. ஐந்து சதத்தைக்கூட தேவையற்றுச் செலவழிப்பதில்லை என்று கேள்வி.

திடீரென்று ஒரு நாள் தெருவில் மறித்து, உங்களைப்பற்றி நாம் கேள்விபட்டதெல்லாம் உண்மைதானா என்று அவரிடமே நேரடியாகக் கேட்டால் என்ன சொல்வார்?

நினைத்துப் பார்த்தேன்.
சிரிப்பு வந்தது.

# தொல்கால கல்வெட்டு ஒன்று சிதைகின்றது

திருகோணமலையின் வெருகல் மாவடிச்சேனை கல்லடியில் கல் மலையொன்றில் காணப்படும் தொல்கால கல்வெட்டு ஒன்று சிதைவடைந்து வருகின்றது. மாவடிச்சேனை கல்லடி மலையின் மேற்புறப் பாறையில் 2 மீற்றர் நீள அகலத்தில் கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. இந்த கல்வெட்டுப்பாறை மழை மற்றும் வெய்யில் காரணமாக பாறையில் ஏற்படும் சிதைவு காரணமாக சேதமாகி வருகின்றது. இதுவரை எவரும் இக்கல்வெட்டு தொடர்பாக ஆய்வுகள் எதையும் மேற்கொள்ளவில்லை மலையின் மேற்புறப்பாறையிலும் கீழ்ப்புறப்பாறையிலும் இரு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இலங்கைத்தீவில் முன்னோடி எழுத்துவடிவ கல்வெட்டு வரிவடித்தில் இந்த வரிவடிவம் காணப்படுகின்றது. கல்வெட்டுச் சாசனம் படிப்பவர்களாலேயே இதனை வாசிக்கமுடியும். மலையின் உச்சியில் ஒரு கட்டுமானத்துக்கான செங்கல் அடித்தளம் காணப்படுகின்றது. தொல்கால மட்பாண்டங்களும் இங்கு சிதறிக்காணப்படுகின்றன. கல்வெட்டு இப்போதே சிதைந்து கிடக்கின்றதால் இது ஆவணப்படுத்தப்படாது போனால் இது அழிந்து போகும் வாய்ப்புகள் அதிகமாகும். இந்த மலையில் தொல்கால படக்கற்களும் அதனருகே ஒரு குழியும் காணப்படுகின்றது. கல்வெட்டுகளினதும், படிக்கற்கள் - செங்கற்கட்டுமானத்தினதும் காட்சிகள் படங்களில் உள்ளன.

தகவல்: தி.தவபாலன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

















www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# எழுமின்!

அகநிலா



2ம் லெப். பூபாலினி

2ம் லெப்ரினட் பூபாலினி, அவளிடம் எதிலும் ஒரு நேர்த்தி ஒழுங்குமுறை இருக்கும். எதனையும் முடிந்தவரை முழுமையாக, செம்மையாக, சலிப்பின்றிச் செய்யும் தன்மைகள் அவளிடம் அதிகம்.

அவளுக்காய் கொடுத்தபணி நிறைவு பெறும்வரை அவளைப் பசியோ, தூக்கமோ அண்டாது. அவளுக்கான பணியாய் அலுவலகப் பணி வழங்கப்பட்டிருந்த காலமதில், குறித்த அலுவலக நேரத்தில் முழுமையாக தொழிற்பட்டுக்கொள்வதோடு அந்நேரத்திற்கும், வேலைக்கும் அப்பாலும் சென்று கண்விழித்துக் கடமையில் ஈடுபட்டிருப்பாள்.

ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைநேரத்திற்கு அப்பால் என்றால் ஓய்வு நேரங்களையும் நித்திராதேவியிடம் சரணடையும் நேரங்களையும் தான் தியாகம் செய்ய வேண்டியிருக்கும். போராட்ட பணியே ஆழமான அர்ப்பணிப்பினை வேண்டிநிற்கும் பணி. அதனுள்ளும் அவள் ஆழமாய் சென்று அர்ப்பணத்துள் அர்ப்பணம் செய்வாள்.

எதனையாவது செய்து முடித்து விடவேண்டுமென்று தீர்மானித்துக் கொள்வாளானால் அதனைச் செய்து முடித்து விட்டுத்தான் மறுவேலை நடக்கும்.

அவளின் ஒழுங்கிற்கு ஒரு உதாரணம் நடைபெற்ற ஓட்டப் போட்டி ஒன்றில் பூபாலினியும் கலந்துகொண்டாள். ஆள் கட்டை அதிகம் ஓடமாட்டாள். அகலக்கால் வைத்தால் முடியாதுதானே! ஆனாலும் கலந்துகொண்டாள் தானும் கலந்துகொள்வதாய். அவளுக்குத் தெரியும்



ஒளிப்படம்: இ.ஜீவகுமார்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

முதல் 3 இடங்களிற்குள்ளும் இடம் கிடைக்காது என்று. ஆனாலும் போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமென்றே கலந்துகொண்டாள்.

'எதுவென்றிலும் கலந்து கொள்ளாதிருப்பதனை விடவும் கலந்து கடை நிலையை அடைந்தாக்கூட அது காரியம்' என்ற அவள் நினைத்திருக்க வேண்டும்.

முதல் மூன்று நிலைகளுக்குள்ளும் வரமுடியாதென்று கணக்கிட்டுக் கொண்டோர் போட்டி நிறைவு பெறுவதற்கு முன்னராகவே நின்று விட இவள் மட்டும் போட்டிக்குரிய அத்தனை 'ரவுண்டு' களையும் ஓடிமுடித்தபின்பே ஓய்வெடுத்தாள்.

"ஏன்ரியப்பா நின்றிருக்கலாமே! ஏன் உந்த வீண் அலைச்சல்" என்றபோது அவள் கூறினாள்.

"எதுவொன்றிலும் கலந்துகொண்டாலும் அது அது முடியும் வரையில் அது எத்தனையாவதாக வருவதானாலும் சரி ஓடிமுடிக்க வேண்டும்" என்று. அதுதான் ஒழுங்குமுறை அது தான் அவள்.

பூபாலினி, அவள் தனக்கென தனித்துவமான சில குணவியல்புகளைக் கொண்டிருந்தாள். அவளது அக் குணவியல்புகளே அவளை 'பரோபகாரி', 'அம்மா' 'களஞ்சியம்' 'அழுத்தம்தாங்கி', 'விசுவாசம்', 'உபதேசி' என அவளைப் பட்டப்பெயர்களால் அலங்கரித்துக் கொண்டன.



பரோபகாரி, யாரிடமிருந்தும் உதவிகளை எதிர்பார்க்காள். ஓய்வாய் இருப்பது அவளுக்கு ஒத்துவராது. எதையாவது செய்துகொண்டிருக்க வேண்டும்.

உணவுப்பண்டங்கள் வாய்ப்பாய்க் கிடைக்கிறபோது பதுகிக்கிப் பத்திரப்படுத்தி வேண்டும்போது பகிர்ந்தளிப்பாள். அதிகமாக இருப்பின் மீளவும் அவை பதுக்கப்படும். வேண்டும் போது வெளிப்படும். இதற்காய் அவளுக்குக் கிடைத்த மகுடங்கள் தான், 'பரோபகாரி', 'களஞ்சியம்', 'அம்மா',

சகதோழிகள் நோய்வாய்ப்படுகின்றபோதும் அவர்கள் ஏதேனும் பற்றாக்குறைகளுக்கு உட்படுகின்றபோதும் அவளிடம் உள்ளவை அவர்களுடையதாகும். சலிப்பின்றி, சங்கடமின்றி பராமரிப்புத் தொடரும். அழுத்தங்கள் தாங்கிக் கொள்ளும் மனோபவத்தினை அவள் இயல்பாய்க் கொண்டிருந்தாள். அவை அத்தனையாலும் தான் அவள் 'விசுவாசி' என்றும் அழைக்கப்பட்டாள்.

அத்தனை விசுவாசம் கொண்ட விசுவாசி ஒருமுறை தவறியும் போனாள் தான்.

'ஒருவன் விழாமல் நடந்தான் என்பது பெருமையல்ல விழுந்தபோதும் எழுந்து நடந்தான் என்பதே பெருமை' என்ற ஆன்றோர் வரியோ.

'விழுமின் எழுமின் கருதி கருமம் கைகூடும் வரை உழைமின்' என்ற விவேகானந்தர் வரிகளை மனங்கொண்டாலோ என்னமோ அவள் தன் தவறை உணர்ந்துகொண்டாள்.

எந்தவொரு அமைப்பிலும் 'இரகசியக் கசிவு' என்பது தெரிந்தோ தெரியாமலோ இடம்பெறுமாயின் அது பெரும் விளைவுகளை உண்டுபண்ண வல்லது. அவள் உண்மையை உணர்ந்து கொண்டாள்.

போர்க்களப் பணித்தேர்வு தனக்கு வேண்டியதே என்பதனை உள்ளிருத்திக்கொண்டாள்.

10.06.1995 இல் போராட்டவாழ்வில் இணைந்து பயிற்சி முடித்து சூரியக்கதிர் - 02 இல் காவும் குழுவாய் போர்க்கள அனுபவமும் பெற்றிருந்த அவளிடம் இயல்பாயிருந்த பொறுப்புணர்வும், செயல்திறச்தேர்ச்சியும் அவள் கற்றுக்கொண்டிந்த தட்டெழுத்து நெறியும்தான் அவளை அலுவலகப்பணிக்காய் உள்ளீர்த்துக் கொண்டிருந்தது உண்மை. செயல்திறனால் உழைமின் உழைமின் என்று உழைத்தும் உண்மை.

விழுமின் எழுமின் கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின் என்ற வரிக்காய் விழுந்தவள் அல்ல என்றாலும் விழுந்தாள் என்பது அதுபோன்றே என்பதனைவிட அதனிலும் வேகமாய் எழுந்தாள் என்பதும் அதேபோன்றதான உண்மையே.

விழுதலில் சினந்து ஓர்மம் உட்புகுந்து அவள் வேகம் விருட்சமாகிக் கொண்டது.

ஜெயசிக்குறுவில் தானும் ஜெயிப்பதாய் கங்கணம் கட்டிக்கொண்டாள் போலும் அவளின் பொறுமையும் நிதானமும் வேவுப் பணிக்காய்த் தேர்வாக்கிகொண்டது. குறுகிய காலத்திலேயே அவள் அவ்அணியின் 2ம் அணித்தலைவியானாள்.

பண்டாரிகுளத்திலிருந்து புளியங்குளம், புதூர், விஞ்ஞானகுளம், கனகராயன்குளம், கிளிநொச்சி, மாங்குளம், ஒலுமடு, அம்பகாமம், ஓயாத அலைகள் 02 என அவள் பணி பரந்து விரிந்து கொண்டது. அது பனிச்சங்குளப் பகுதியில் வைத்து 'எல்.எம்.ஜி' கனரகப் பயிற்சி வழங்கி மாங்குளப் பகுதியில் 'எல்.எம்.ஜி' கனரக 'லோட்'ராக்கிக் கொண்டது.

ஓயாத அலைகள் 02 ற்கு அவள் 'எல்.எம்.ஜி' கொண்டே களமிறங்கினாள்.

ஓயா அலைகள் 02 களமிறக்கம் அவளுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவள் வளர்ந்த வாழ்ந்த இடமது.

அவள் பருவமறிந்ததிலிருந்து பல இடப்பெயர்வுகளைச் சந்தித்திருந்தாள். பிறந்தது வேலணையில் என்றாலும் அவள் வாழ்வு அவ்வப்போது நடந்துகொண்டிருந்த இடப்பெயர்வுகளுக்குரிய விதமாய் கணேசபுரம், பரவிப்பாஞ்சான், வட்டக்கச்சி, கிருஷ்ணபுரம், ஆனந்தபுரம்....என்று நகர்ந்து கொண்டபோதுதான் அவள் நாலும் உணர்ந்தாள். நமக்கொருநாடு நாடாயிருக்கவேண்டுமென்று கணேசபுரத்தில் ஆரம்பித்த அவள் கல்வி வாழ்வு, கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை, கிளிநொச்சி கனிஷ்ர வித்தியாலயம் (தற்போது கிளிநொச்சி மகா வித்தியாலயம்) வேலணை நடராசர் வித்தியாலயம், மீளவும் கிளி-கனிஷ்ர வித்தியாலயம், வேலணை வைத்திலிங்கம் துரைசாமி வித்தியாலயம் என்று மாறி மாறி அலைப்புக்குள்ளானது. அந்நேரத்திலும் கூட ஒருவாறு கா.பொ.த சாதாரண தரத்தை நிறைவாக்கிக்கொண்டு தொழிற்பயிற்சியாய் தையலும், சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் பயின்று கொண்டாள்.

எழுதுவினைஞையாய் சிலகாலங்கள் தனியார் நிறுவனங்களில் பணியும் செய்தாள்.

பணியைப் பணியாய்ச் செய்யும் தேசமதில் தான் இல்லை என்பதனை அவள் புரிந்து கொண்டபோது தேசம் இருப்பை நிலைநிறுத்தும் போராட்டவாழ்வில் அவள் தன்னை இணைந்துக்கொண்டாள். ஓயாத அலைகள் 02 இல் 29.08.1998 இல் கிளிநொச்சி வெற்றிச் செய்தியோடு வீரமரணமடைந்தாள்.

திரு.திருமதி கோபாலபிள்ளை கனகாம்பிகை தம்பதிகளின் நான்காவது புதல்பியான ஆனந்தகுமாரி என்ற இயற்பெயர்கொண்ட 2ஆம் லெப்ரினட் பூபாலினி ஆலங்குளம் துயிலறையில் துயின்றுகொண்டிருக்கிறாள். அவள் இலட்சியம் ஈடேறும் சமாதானம் சகவாழ்வு அல்லாதபோதும் அவர்கள் இலட்சிய நெருப்பு சகவாழ்வு கொடுக்கும். அவள், அவள் போன்றவர்கள் இலட்சியச் சாவால் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள். இலட்சிய நெருப்பு இமயம் தொடும் ஈழத்தைப் பிறப்பிக்கும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# நினைவுகள் வேகமாக...



அந்த வரைபடம் எனது கோல்சருக்குள் மடித்தபடி பலநாளாய் கிடக்குது. எனக்கு அதைப் பார்க்க வேண்டுமெண்டோ அதைப் பயன்படுத்தித்தான் மோட்டார்களுக்கு இலக்கின் வகை சொல்ல வேணுமெண்டோ அவசியம் இல்லை. இப்பதான் நிஸ்மியாக்கா வந்தவ. வன்னியெண்டபடியால இந்த குச்சொழுங்கைகள் அவாவிற்கு வடிவாத் தெரியாது. வரைபடத்தை எடுக்கச் சொல்லி அதில வடிவா விளங்கப்படுத்தச் சொல்லியும் கேட்டவா. எனக்கு பஞ்சியாகத்தான் இருந்தது. அக்கா கேட்டுட்டா எண்டதற்கு காட்டினன்.

வரைபடத்தை பார்க்கேக்க, "இந்த றோட்டிலயே காந்தா உம்மட வீடு" எண்டு அக்கா கேட்டவா. எனக்கு ஒரே விசரா இருந்தது. வீடு இதிலதான் எண்டு காட்டினப்போ எனக்கு ஏதோ செய்துச்சுது. "சீ... என்ன காலமப்பா" என்று சினந்தும் கொண்டன்.

இப்பதான் அக்கா கேட்டா "நீ நிக்கிற இடத்தில இருந்து எத்தனை கிலோ மீற்றர் தெரியுமா...?" என்னண்டா. அப்பதான் அந்த நாள் நினைவிற்கு வந்தது. அங்கதான் இருந்தன். ஆனால். எங்கயோ போட்டான். அக்கா என்னட்ட எத்தனை கிலோ மீற்றர் எண்ட பதில் கேட்காமலே போயிற்றா. அந்த இடத்தவிட்டு எப்ப போனா எண்டு எனக்குத் தெரியேல்ல.

யோசிக்கேக்க மகிழ்ச்சியாகவும் இருந்தது - வெறுப்பாயும் இருந்தது. என்ர உடல் சோர்வா, அலுப்பா இருந்தது. ஏனெண்டா நேற்றிரவு நித்திரை இல்லை. அதற்கு முதல்நாளும் இல்லை. முதல் நாள் வேவுக்காரரோட போய் இராணுவத்தின்ர தடம் கிடக்கோ எண்டு பாத்து உறுதிப்படுத்தினனான். அதுதான் இரண்டு நாளா உசார் நிலையில இருந்திட்டம்.

அந்த நிலையில் உசாராய் இருந்த படியாலதான் அவன் அங்கு வெளிக்கிடேக்க கண்டு அடிச்சிட்டம்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அவன்ர நகர்வு அந்த இடத்திலேயே தடை செய்யப்பட்டது. எனக்கு ஒரே இராணுவத்தின்ர நினைவுதான். ஏனெண்டா கொஞ்சத் தூரத்தில் எங்கட வீடு அங்கதான். அம்மா, அப்பா, தம்பி உறவுகள் என எல்லோரும் கூடியிருந்தா ஊர். அவைகளுக்கு என்ன நடந்ததோ ...சீ... நான் இப்படி நினைக்கக் கூடாது. என்னை நானே திட்டிக்கொண்டேன்.

என்ர பிள்ளையள் பாவங்கள். நேற்று வடிவாச் சண்டை பிடிச்சதுகள். தங்கட தங்கட காப்பு நிலைகளிலே என்ன செய்யுதுகள்? வடிவா அவதானிச்சுதுகளோ என்று பார்ப்பம் எண்டுதான் வெளிக்கிட்டன். நான் துவக்க எடுத்துக்கொண்டு வர தேனரசி வந்தாள். முன்னுக்கு நடந்தாள். அதோட குறிஞ்சியும் பின்னுக்கு துவக்கோட வந்தா. இரண்டு கிலோ மீற்றர் நீளத்துக்கு நடந்து நிலைகளைப் பார்த்தோம்.

அது 55வது காப்பரண். அதில நின்ற பல்லவி, குறிஞ்சிதான் உறவுக்காரி என்று எனக்குத் தெரியாது. பல்லவியின்ர பதுங்குகுழிக்க நிண்டபோது குறிஞ்சிதான் அவளிட்டக் கேட்டாள். “பல்லவி இதில இருந்து எங்கட வீடு 2 கிலோமீற்றர் வருமெல்லா.....” வன்னியில எண்டா இது கூப்பிடு தூரம் என்றாள் பல்லவி. அவையளின்ர உரையாடலைக் கேட்க எனக்கு அவையும் தென்மராட்சி என்பது வடிவா விளங்குது. என்ர வீட்டக் கேட்டு நான் வேதனைபடுமாப்போல அதுகளையும் வேதனைப்படுத்த விருப்பமில்லாமல் இருந்ததுச்சுது.

அந்தக் காப்பரண் விட்டுப் போகேக்க எனக்கு குறிஞ்சி. பல்லவி என அதுகளின்ர நினைவுதான் வந்திச்சுது. அதில இருக்கிற அம்மன் கோயிலுக்கு அதுகள் போயிருக்குங்கள். சீ... இப்ப அது சூனியப்பிரதேசமா பாழ்பட்டுக் கிடக்கும். அந்தப் பள்ளியில் படிச்சிருக்குங்கள். அந்த ரோட்டால அடிக்கடி போய்வந்திருக்குங்கள். அதுகளும் என்னைப்போலத்தான் நினைக்குங்கள். இராணுவத்தை துரத்தினால், வீட்டை.... ஊரை.... பார்க்கலாம் எண்டுதானே சிந்திக்குங்கள். எனக்கு இப்ப நல்லா நித்திரை வருது. படுத்தா படுபயங்கரமா வரும். இப்படித்தானே அதுகளுக்கும் வரும். என்னையறியாமலே வாய்விட்டுச் சொல்லிக்கொண்டேன். அப்பதான் அதுகள் கேட்டதுகள் “என்ன உங்கடபாட்டுக்கு நித்திரை எண்டு சொல்லிக்கொண்டு போறீயள்?”

“ஒண்டுமில்லை” எண்டன். என்ர நினைவெல்லாம் வீட்ட போச்சுது. காப்பரண் எல்லாம் பார்த்திட்டு என்ர நிலையில் வந்திருந்தன. திரும்பவும் “உசாரா இருங்கோ இராணுவம் நகரக்கூடும்” எண்டு செய்தி வந்திச்சுது.

என்ர சிறுசிறு அணிப் பொறுப்பாளருக்கெல்லாம் உடனே தகவல்களை அனுப்பினன். திரும்பவும் இனி நித்திரை இல்லை மீளவும் வீட்ட போட்டன். எனக்குப் பகல் கொள்ளுறதெண்டாலே படுபயங்கரமாப் பிடிக்காது. இப்ப அந்தக் காலத்தை நினைக்க ஆசையாய இருந்தது.

காலையில எழும்பி படிச்சாப் பிறகு சாப்பாடு ....பள்ளிக்கூடம் பள்ளியால வந்ததும் சாப்பிடுவன் எனக்கு அம்மா சாப்பிடத் தந்திட்டு தம்பிக்கும் கொடுத்திட்டு போய் படுத்திடுவா. சாப்பிட்டிட்டு போனா விறாந்தையில அப்பா நல்ல நித்திரை அடிப்பார். அம்மா முன்னறைக்க படுத்திருப்பா அவவும் நித்திரையா இருப்பா. தம்பி சாப்பிட்டிட்டு வந்து அப்பாவிற்கு பக்கத்தில் படுத்திருப்பான். அக்காவும், அண்ணையும் கட்டாயம் பகல் நித்திரை கொள்ளுவினம். அவையளைப் பார்க்க எனக்கும் நித்திரை கொள்ளவேணும் போல இருக்கும்.

தலையணையைத் தூக்கிக்கொண்டு எனக்குப் பிடிக்காத பாடப்புத்தகத்தையும் எடுத்துக்கொண்டு போய் படிக்கிறதோட படுப்பன். நித்திரை வராது.... பேந்து புரண்டு புரண்டு படுத்துப் பார்ப்பேன். அப்பவும் நித்திரை வராது. எழும்பிப் போய் பின்னறைக்குள்ள புழுக்கொடியல் உரப்பைக்குள்ள இருந்து எடுத்து வருவன். கைநிறைய புழுக்கொடியல் இருக்கும். இப்ப புழுக்கொடியல் சாப்பிட ஆசையாக இருக்கிறது. இதுக்க இருக்கிற இந்த கொஞ்சத் தூரம் ஆமியைத் தூரத்திட்டா அங்க போய் சாப்பிடலாம். அம்மா கட்டாயம் புழுக்கொடியல் போட்டு வைச்சிருப்பா. புழுக்கொடியல் எடுத்துக்கொண்டு தேங்காயும் எடுத்து உரிச்சு உடைச்சுக்கொண்டு வந்து. பெரிய நாவலுக்குக் கீழ் கட்டின ஊஞ்சலில் ஆடி ஆடி சாப்பிட்டுப் பார்ப்பன். நித்திரை வராது. பகல் நித்திரை சரிவராது. மனம் கேட்காம திரும்பவும் வந்து படுத்துப் பார்ப்பன். நித்திரை வராது. பேந்து முன்வீட்ட போவன். விபுலனை விளையாடக் கூப்பிடுவமெண்டா. அங்க அவன் தாய்க்குப் பக்கத்தில் படுத்து நித்திரை அடிப்பான். முன்வீட்டு அன்ரியின் மனுசன் வெளிநாட்டில. அவா வீட்டையும் திறந்து போட்டிட்டு நல்ல நித்திரை அடிப்பா.

எனக்கு விசராக்கும். திரும்பி வீட்டை வருவன். மாமரத்தில ஏறி காயாச்சும் சாப்பிட்டுக் கொண்டு மாமரக் கொப்பில் படுத்துப் பார்ப்பன். அதுவும் சரிவரா. தினம் இதுதான் நடக்கும் எல்லோரும் பகலிலே நித்திரை கொள்ள நான் மட்டும் எதையாவது சாப்பிட்டுக்கொண்டு அது வெளியே திரிவன். இப்ப நான் அன்றுபோல சின்னவளாகவே இருந்திருக்கலாம். உசார் நிலையில இருக்கச் சொல்லியெல்லோ தகவல் வந்தது. அந்தக் காலத்தில நித்திரை கொண்டாலும், பகலிலே வரவே வராது. இப்ப எப்பயடா நித்திரை கொள்ளுவன் எண்டிருக்கு.

என்ர பிளாட்டூன். செக்சன் பொறுப்பாளர்கள் எல்லாம் தொடர்பு எடுத்தார்கள். உசாரா தாங்கள் இருப்பதாய் குறிப்பிட்டுதுகள். பல்லவி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தொடர்பெடுக்கேக்க கேட்டாள். “அக்கா அவன் வந்தால் அடிச்சுக் கொண்டு அப்படியே தள்ளிக்கொண்டு போய் துப்பரவாக்கி விடுவம்” என்றாள் அதைத்தான் நானும் நினைச்சு வைச்சிருந்தன். கொஞ்சத்தூரம் அவன் ஓட ஓடக் கலைச்சு வீட்டுக்குக் கிட்ட போய்விடலாம். எல்லோருக்கும் இதைத்தானே சொல்லுறனான். ஊரைப் பிடிப்பம். வீட்டை போவம். அதுமட்டும் எல்லாத் துயரையும் தாங்கிக்கொள்ளுவம் எண்டு.

என்ன விரும்புறன் எண்டு சொன்ன முரளிக்குக்கூட இப்படித்தானே சொன்னான். ஊருக்குப் போகும் மட்டும் சண்டையில சாகாதிருந்தா, அங்க போன பிறகு முரளிய விரும்பிறன் என்று சொன்னன். நாலு வருசமா அவனும் எதுவுமே என்னட்ட கதைக்காமல் இருக்கிறான். முரளியும் சண்டையில தான் நிப்பான். என்ர ஊரையும் என்னையும் நினைப்பான். எல்லோருக்கும் தங்கட ஊரைப் பார்க்க உறவுகளோட கதைக்கத்தானே ஆசையாக இருக்கும். திரும்பவும் நான் வீட்ட போய் வந்தன். அம்மா, அப்பா, தம்பி, என்ன செய்வினம்? நடைபேசி கதைக்கத் தொடங்கியதும் முதலில் பல்லவியின்ர தொடர்புதான் கிடைச்சது. அந்தப் பக்கம் அவன் அசைவதாகத் தெரியுதாம். இராணுவத்தின் 24 குழல் வைத்து அடிக்கும் பீரங்கிக் குண்டுகள் வந்து விழுந்தது. வேற கனக்கச் சூடுகளும் வேகமாக வந்து விழுந்தது. வேற செல்களும் வந்து கொண்டிருந்தது. 55வது நிலைப்பக்கம் திருவிழா தொடங்கிற்று. நான் அவசரமாகவும் வேகமாகவும் பல்லவியின்ர நிலைக்கு போகவேண்டியிருந்தது. ஓடிப்போனன்.

குறிஞ்சியும் தேனரசியும் என்னோட ஓடி வந்திச்சினம். குறிஞ்சிக்குச் சன்னம் பட்டிட்டுது. அதோட தான் வரப்போறதா குறிப்பிட்டாள். அவளப் பேசிப்போட்டன். கவலையாக இருந்தது. சண்டையில நேரத்தை வீணடிச்சா எங்களுக்குத்தான் இழப்பு அதிகரிக்கும். வேகமாக நாங்கள் போயிற்றம். பல்லவி நல்லா சண்டை பிடிச்சுக்கொண்டிருந்தாள். வரைபடத்தைப் பார்த்து செல்விழுந்த கோணம் சொல்ல வேண்டியிருந்தது.

பல்லவி சொன்னாள் “அக்கா அதுக்குள்ள தான் எங்கட வீடு நான் என்னர செக்சனை கொண்டு இறங்கட்டே” தன் கோல்சருக்குள் இருந்த வரைபடத்தை எடுத்து எனக்குக் காட்டினாள். இரண்டு கிலோமீற்றருக்கப்பால் அவளின் வீடு இருப்பதை அந்தக் கணத்திலும் வரைபடத்தில் காட்டினாள் அவள். முன்னோக்கி எதிரி நகர முற்பட்ட பக்கமா நகர முற்பட்டாள். கொஞ்சம் பொறு செல்லால கொடுத்திட்டு இறங்குவம் எண்டாள், ஒரு நல்ல சண்டை கிடைச்சா திருப்பி இறங்கி அடிக்க வேணும்.

பல்லவி தான் பாய்ந்து அடிச்சுக்கொண்டு போனாள். கொஞ்சத் தூரத்தில் என்னைக் கூப்பிட்ட சத்தம் கேட்டது ஓடிப்போனன். பிள்ளைகள் என்னை முந்திக்கொண்டு அவனைச் சுட்டபடி போய்க்கொண்டிருந்ததுகள். பல்லவி என்னட்ட வா எண்டாள். அவளுக்கு வயிற்றில காயம். அக்கா நீங்கள் என்ர அம்மாவையும் போய்ப் பாருங்கோ எண்டவள் உடனே மூச்சுவிட மறந்திட்டாள். அம்மாவைப் போய் பாருங்கோ என்று திரும்பவும் ஒலித்தது. ஆனா, அது என்ர பிரமையா இருக்கவேணும். ஒரு மணித்தியாலயத்தில படுபயங்கரமா சண்டை நடந்திட்டுது செக்சன், பிளாட்டுன் எல்லாம் நல்லாச் சண்டை பிடிச்சதுகள் பல்லவியின்ர செக்சன் முன்னுக்கு அடிச்சுக்கொண்டு போனதுதான்.... பல்லவியும் விழுந்ததோட அடுத்தடுத்த செக்சனுக்கு இழப்பு வரத் தொடங்கிற்று.

பல்லவி அவவொரு திறமையான சிறு அணிப் பொறுப்பாளர். நல்லாச் சண்டை பிடிப்பாள். என்ர கண்ணுக்கு முன்னுக்கு அப்படிச் சொல்லிப்போட்டுப் போயிற்றாள். என்ர சிந்தனை வெகுநேரமாக ஓடிச்சுது. பல்லவியின்ர நினைவு அடிக்கடி வந்து போகுது. நேற்றைய சம்பவங்களைக் கோத்து மீட்டுக்கொண்டிருந்தபோதுதான் நடைபேசியால் தொடர்பு வந்திச்சு. நிஸ்மிஅக்காதான் தொடர்பு கொண்டிருந்தார்.

நேற்று நடந்த சண்டையில எங்கட நிலைகளில இருந்து பின்னுக்கு காயக்கரார்கள் என்று போனவையின்ர காப்பரண்களை நிறைக்க வேண்டியிருந்தது. அதுக்குத்தான் ஒரு செக்சன் பெடியள் வருகினம் எண்டும் அவதான் நேரா வாறா எண்டும் குறிப்பிட்டா. நேற்று நான் இருந்த நிலையும் இண்டைக்கு என்ர நிலையும் எனக்கே எதையெதையோ எல்லாம் கற்றுத் தந்து.

இதைத்தான் அடிக்கடி நினைச்சன். பல்லவி வீரச்சாவடைஞ்சா அந்தச் சண்டையில, அவளின்ர செக்சன் மாதிரி ஒரு செக்சன் எண்டாலும் இருந்தா அந்தச் சூனியப் பிரதேசமான ஒரு கிலோமீற்றரையும் பிடித்து முன்னுக்கு நகர்ந்து எங்கட முன்னணி நிலையை அமைச்சிருக்கலலாம். எதிரியு ம் கொஞ்சம் பயமாகவும் இனி நகர்வெடுக்கத் துணியாமலும் இருந்திருப்பான். இந்த எண்ணந்தான் என்னைப் போட்டுக் குடைஞ்சிது. இன்னும் கொஞ்சப் பேர் இருந்தால் அல்லாட்டி இன்று வந்திருந்தா நிலைமை வேறாக இருந்திருக்கும். எங்களுக்கு வீச்சா சண்டை பிடிக்க ஆக்கள் காணாமல் இருக்குதே. எண்டு நினைக்க கவலையாகவே போட்டுது.

இப்ப நிஸ்மியக்கா சொன்னபடி ஒரு செக்சன் வருதாம் - தம்பியவையாம். வரட்டும் காயப்பட்டுப் போனவையின்ர இடத்தை நிரப்ப எண்டாலும் வரட்டும். நான் நினைச்சுக்கொண்டிருக்கவே அந்த செக்சன் வந்து நிண்டது. வந்தவையளுக்கும் வரைபடம் காட்டி போற நிலைகளையும் காட்டி நிலைகளைச் சொல்லி விளங்கப்படுத்த வேணும். அது என்ர முக்கிய கடமையுமாய் இருக்குது. வரைபடத்தை விரிச்சு விளங்கப்படுத்தினன். அந்த செக்சன் பொறுப்பாளர் ஏதுவுமே கதைக்காம அதில என்ன இதில என்ன என்று கேட்காம இருந்தது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

தம்பி என்ன ஒண்டும் கேட்காம இருக்கிறியள் எண்டன். அவன் அந்த வரைபடத்தில் அந்த இடத்தைச் சுட்டிக் காட்டினான். அதிலதான் தன்ர வீடு எண்டான். என்ன பெயர் எண்டு கேட்டன். பல்லவன் எண்டான். நினைவுகள் வேகமாக....... நெஞ்சை ஏதோ செய்தது.......

**போராளி காந்தா**


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ந.கிருஷ்ணசிங்கம்
நோர்வே

# உழைப்பால் உதவுவோம்

எழுந்தன பேரலை மலைகள் - அங்கே
சிதைந்தது தாயகக் கூடு!
அழிந்தன அன்னவர் ஆவி - இங்கே
வழிந்தன எங்களின் விழிகள்!

மாண்டார் தொகையும் மழலைகள் உடலும்
ஆண்டுகள் போயினும் அகலுமோ மனதில்!
மண்டலம் அதிர வந்தமா கடலே- நீ
தின்றிட மனிதன் தீனியா சொல்லு!

விழுந்து அழுது விழிநீர் உகுத்து
அழுந்து துயரால் மொழிந்து சோர்ந்து
கொழுந்து கருகிய கொடிபோல் குலைந்து
தளர்ந்து நாங்கள் தவித்தே விட்டோம்!

தழுவிய கவலையை தரையிலே சாய்ப்போம்!
உழுத மனதை ஒப்பனை செய்வோம்!
கழுவியே கருத்தில் பழுவிசை ஏற்போம்!
எழுந்து மீதவர் வாழ்வினைச் சுமப்போம்!

மாந்தரே! மண்ணின் உறவினரேயென.
அந்தகோ! எம்மவர் அலறிய ஆவியை
சேர்த்தனம் எம்முடன் சிறந்தனம் உறுதியில்!

ஆர்த்தோம் எழுந்தோம் ஆறிடல் அற்று.
வியர்ப்போம், உழைப்பின் விசையால் உதவுவோம்!

# எங்கள் தேசம்

ஈரக்காற்று தேடிவந்து உடலைத் தொடும்
சூரம் சொல்லும் பாடல்ஒலி சூழஎழும்!
தேரெழுந்த தீரர் ரோந்து தெருவில் வரும்
பேர்விளங்கு புலிகள்நிலப் பெருமை பாரும்!

முப்புறமும் கத்தும்கடல் முத்தம் இடும்
அப்புறத்து அலை வளத்தை அள்ளித்தரும்!
எப்புறமும் பச்சைநிலம் எழில் பரப்பும்
அவ்வரிய தன்னிறைவின் தலை தெரியும்!

கப்பிய உணர்வுடனே கலைகள் எழும்
காவியங்கள் ஓவியங்கள் காட்சி பெறும்!
முப்பரிய கூத்தோடு, தெருக் கூத்தும்
செப்பரிய சிறப்போடு சபை ஏறும்!

உயர்ந்த மாதலைவன் உருவாக்கும்
உவமை இல்லா போர்ப்புலிகள்
உணர்வுக் கதை கவிதைகளும்
எப்பொழுதும் எழுச்சிமிகும்.

அப்பு ஆச்சி ஆண்ட இடம்
நினைக்க மனம் பனித்துவரும்!
எப்பிறப்பிலும் நான்மறவேன்
தப்பாது கால்மிதிப்பேன்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உடையும் மௌனம்

முல்லை யேசுதாசன்

இனிமேற்பட்டு, வாழ்க்கையில, கலியாண வீட்டுப்படமெடுக்கப் போறதில்லை. என்ன சனம் அதுகள். கேவலம் கெட்டதுகள். மண்டைக்குள்ள இருக்கிற அடிப்படையான ஊர்வனமூளை, பின்னுக்கு வந்த பகுத்தறிவு மூளையைவிட, இன்னமும் முன்னுக்கு முட்டிக்கொண்டுதான் நிக்குது பல பேருக்கு இதுகளெல்லாம் உலகத்தில இருந்து என்ன பிரயோசனம்.

பரந்தன் சந்தியில் வச்சிருக்கிற அந்தப் பெரிய கட்அவுட்டை எல்லாரும் பாக்கோணும். கட்டாயமாய். சீதனத்தட்டில ஒரு பொம்புளை சோகமாய் இருக்கிற அந்தப் படத்தை ஒவ்வொரு ஊரிலயும் சனம் புளங்கிற இடத்தில நட்டுவைக்கோணும்.

சிலவேளை பொம்பிளையளில ஆத்திரம் வருகுது. சிலவேளை ஆம்பிளையளில ஆத்திரம் ஆத்திரமாய் வருகுது.

ஒவ்வொரு கல்யாண வீட்டிலையும் படமெடுக்கப்போய் கவலைப்பட்டு அழுது கொண்டு வருகிறதைவிட போகாமலே இருக்கிறது மேல். இனிமேற்பட்டு, வாழ்க்கையில படமெடுக்கப்போறதில்லை. இதோட, கமரா வைக் கொண்டுபோய் எங்கேனும் முகட்டில கட்டித்தூக்கி விடவேணும். அவ்வளவு ஆத்திரம்தான்.



இந்தமுறை அந்தக்கலியாண வீட்டுக்குப் படமெடுக்கப் போக முன்னமும், கன இடத்தில படமெடுத்திருக்கிறன், அதெல்லாம் இப்படியில்லை. அதுகளெல்லாத்தையும் விட இது மோசம்.

இதுக்குள்ள வீடியோக்கமரா, ஸ்டில்கமரா அதைவிட பெரிய பொக்ஸ் வைச்சு மன்மதராசா, மன்மதராசா.... பாட்டு வேற, மாப்பிள்ளை என்ன மன்மதராசாவோ



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தெரியாது. நான் காணேல்ல. இவ்வளவத்துக்குள்ளயும் ஐசிங் கேக் என்ன, மெழுகுதிரி சோடினை என்ன. மேக்கப்புக்கு ஒரு பொம்பிள பத்தாமல் இன்னுமொரு ஆம்பிள. பொம்பிளை சும்மாவே நல்ல வடிவு. பேந்தேன் மேக்கப். என்னத்துக்கு உதையெல்லாம் செய்துச்சுகளோ தெரியாது. ஆனா அதுகள் கஸ்ரப்பட்ட குடும்பம்தான்.

வெளிநாடுகளில அப்படித்தானாம். சினிமாப்படத்தில வாறதுமாதிரி பால் எல்லாம் கொண்டுபோய் மாப்பிள்ளைக்குக் குடுக்கிறேல்லயாம். கடைசியில மாப்பிள்ளையும் பொம்பிளையும் விஸ்கியும் குடிக்கோணுமாம். எல்லாம் மாப்பிள்ளையின்ர அக்கா, அந்த ஆட்டக்காரிதான் சொன்னவளாம். காவோலை போட்டு கொழுத்தோணும்.

அவளின்ர புருசனும் வெளிநாட்டிலயாம். அவர்தான் முந்தி மாப்பிள்ளையை சுவிசிற்கு எடுத்தவராம். அது தான் அக்கா அவனுக்கு எல்லாமாம்.

இந்த மாப்பிள்ளை வெளிநாட்டில இருந்து கலியாணத்துக்கெண்டு வந்து, ஊர்சுத்தி திரியேக்கதான் உந்தப்பெட்டை கண்ணில தட்டுப்பட்டதாம். நல்ல வெள்ளைத்தோல் அவளுக்கு. இவனுக்குப் பிடிச்சுப்போச்சு ஒத்தைக்காலில அவன் நிண்டு, இப்ப கலியாணத்தில நிக்குது. பெட்டையின்ர விருப்பத்தைப்பற்றி ஆர் கேட்டது.

வெளிநாட்டு மாப்பிள்ளை எண்டாலே கிராக்கிதானே. ஆனால் அவளையும் பாவம் எண்டுதான் சொல்ல வேணும். எந்தப் பாண் பேக்கரியிலயோ? அல்லது எந்த கோழிப்பண்ணையிலயோ? அல்லது எந்த இடதிலநிண்டு கக்கூஸ் கழுவினானோ? ஆருக்குத்தெரியும். அப்படி அவங்கள் உழைக்கிற காசு இஞ்ச வரேக்க கனக்கமாதிரித் தெரிய மரியாதைதான். அவனுடைய வீட்டுக்காரர் இஞ்ச பெரிய மனிசர். சாணி போட்டு வீடு மெழுகினாலும், நிலத்துக்கு சென்ற் அடிப்பினம்.

இப்ப இந்தப்பெட்டை மாட்டுப்பட்டுட்டுது. அதுக்கு தகப்பன் இல்லைப்போல. ஒரு அண்ணன் காரனும், அண்ணியும், ரெண்டு தங்கச்சிமாரும்தான் அங்கினேக்க ஓடித்திரியுதுகள். தாய் மனிசிக்கு ஒரு ஆசை, மூத்தபிள்ளைக்கு சாமத்தியச்சடங்கு செய்யேல்ல, இந்தக் கலியாணத்தோட அதையும் செய்துவிடவேணும் என்கிற ஒரு மடத்தனமான ஆசை. என்ன செய்யுங்கள் பெத்ததுகள்தான். காலமை தொடங்கின சாமத்தியச்சடங்கு இன்னும் முடியேல்ல. சும்மா, வெளிக்கிடாமல் இருக்கேக்கையே, கமராவுக்குள்ளால பார்க்க பெட்டை ஒரு வடிவுதான். கமராவுக்கேத்த முகம். அந்த மாதிரி எல்லாம் எனக்குள்ளயும் ஒரு ஆசைதான். ஊர்வனமூளை வேலை செய்யுது. சீ அதைவிடு.

கலியாண வீட்டுக்கு வந்த பொம்பிளை பகுதிச் சொந்தக்காரர், அவ்வளவு காசுக்காரர் எண்டும் இல்லைப்போல. மாப்பிளை பகுதியில ரெண்டு மூண்டு பேர் வந்து நிண்டதுகள். ஆக்கள் பரவாயில்லை வெளிநாட்டுவாசம்.

பெட்டைக்கு ஒவ்வொருத்தரா பால்வைச்சு எல்லாம் முடிஞ்சுபோச்சு. இன்னும் தாய் வந்து பால்வைக்கேல்ல. எல்லாரும் ஆளையாள் பார்த்துக்கொண்டு நிக்கினம். எடுக்க வேண்டிய படமெல்லாம் ஸ்டில்காரன் எடுத்திட்டான். எல்லாரையும், நானும்தான். என்னுடைய பங்கிற்கு எல்லா ஆங்கிளிலயும் எடுத்தாச்சு. றிவைன்ட் பண்ணிப்பார்த்தா எல்லாமே நல்ல சொட்சுகள்தான்.

நேரம் போய்க்கொண்டே இருக்கிறது. இன்னும் தாய் வந்து பால் வைக்கேல்ல. பக்கத்தில வந்த மேக்கப்கராருக்கு பொறுக்கேல்ல.

என்ன வீடியோக்காரர் என்னவாம் பிரச்சினை. இப்படியே பாலில பெட்டை ஊறிப்போய் பாலும் காஞ்சு போச்சு. அம்மாக்காரியை இன்னும் காணேல்ல. நானும் இந்தப்பெட்டையின்ர மேக்கப்பை முடிச்சிட்டு இன்னொண்டுக்கு போகவேணும். அதுவும் பெரியவீட்டு கலியாணமடாப்பா. தலைக்கு மேக்கப் போட்டு முடிக்கவே ரெண்டு மணித்தியாலம் வேணுமடாப்பா. இனி மற்ற மேக்கப் காது, கழுத்து, மூக்கு கழுத்துக்கு கீழயும் இறங்கி மேக்கப் பூச்சு பூசச்சொல்லுதுகள். நான் இப்பெல்லாம் ஆக்களுக்கு முன்னால வச்சுத்தான் மேக்கப்போடுறது. என்னத்துக்கு இந்த மேக்கப் வேலையைப் பழகினனோ. அல்லாட்டில் இந்த மேக்கப் செய்யிற பாசன் என்னெண்டு தமிழர் வரைக்கும் தெரிஞ்சுதோ நானறியேன். ஆனா நல்ல தொழில்தான் நல்ல காசுதான்.

உதையார் உன்னட்டக் கேட்டது' அப்படித்தான் கேக்கோணும் எண்டு நினைச்சனான் கேக்கேல்ல. சனத்துக்கும் காசு கூடக் கூடத்தான் எப்பிடி எப்பிடியெல்லாம் செலவழிக்கோணும் என்கிற ஐடியாவே வருகுது. எவர் கெட்டாலும் எனக்கென்ன நானும் ஐஞ்சப்பத்தை உழைக்கோணும்தானே. சனத்துக்கு இந்த வீடியோ ஆசை இருக்கிறவரைக்கும்தான் என்ர காட்டிலயும் மழையடிக்கும்.

மெல்லமாக கமராவைத்திருப்பி பெட்டைக்கு குளோசப்புக்கு கொண்டுபோய் வியூபைண்டருக்குள்ளால பார்த்தால் பெட்டை தேம்பித் தேம்பி அழுகுது. கலியாணவீட்டில பொம்பிளைக்கு என்னடா கவலை என்று நினைக்க, மேக்கப்காரர் மெதுவாக என்ர முதுகைச் சுரண்டுகிறார். என்ன என்று திரும்பினால் "அங்க பாரப்பா புதினத்தை" என்கிறார்.

கலியாண வீடுகளில் வழமையா நடக்கிற விசயம்தான். ஆனால் இது கொஞ்சம் ஓவர். ஒரு தடிச்ச பொம்பிளை பெரிசாக் கத்திக் கொண்டிருக்கிறாள். கலியாணப் பொம்பிளையின்ர அண்ணன்காரன் போல, தயங்கித் தயங்கி தடிச்சிக்கு பயந்து பணிஞ்சு கதைச்சுக் கொண்டிருக்கிறான். அம்மா வாசலில குந்திக்கொண்டு அழுதபடியிருக்குது மனிசி. என்னடாப்பா இந்தக்கலியாணம் சந்தோசமாய் நடக்காதோ.

"இஞ்சபார் நீ என்னண்டாலும் செய் எனக்கது தேவையில்லை முதலில் என்ர பிரச்சினையை முடியுங்கோ. இல்லாட்டிலும் விடுங்கோ ஆனா கலியாணம் நடக்குமெண்டு கனவிலயும் நினையாதையுங்கோ" மாப்பிள்ளையின்ர அக்கா தடிச்சிதான் கத்திக்கொண்டிருந்தாள்.

"அக்கா காசு பிரச்சினையில்லை இவ்வளவு சீதனத்தையும் சரியாத்தந்திட்டம். இதென்ன கொஞ்சக் காசுதானே கலியாணம் நடக்கட்டும் கட்டாயம் தந்திடுவன்" பொம்பிளையின்ர அண்ணன்காரன் கெஞ்சிக்கொண்டிருந்தான்.

நான் இப்ப உன்னை தரமாட்டாத ஆளெண்டே சொன்னனான். ஆனால் அவனுக்கு, கலியாணம் முடிவாயிறதுக்குகிடையில எனக்கு என்ர பிரச்சினை முடியவேணும். நான் என்ர காணியை வித்துத்தான் அவனை வெளியில அனுப்பினது. அந்தக்காணியையும் இன்னும் மீட்டுத்தரேல்ல அவன். அதுக்கிடையில அவருக்கு ஒரு பொம்பிளை வேணுமோ. அவவுக்கு நான் பொம்பிளைத்தோழி. இவன் இனி எப்ப திரும்பவும்போய் எனக்கு காணி எடுத்து தரப்போறான். மனிசியைக் கண்டவுடன் அவளுக்குத் தலையாட்ட வெளிக்கிட்டுட்டால் எனக்கு காணி கிடையாது. நான் ஒண்டுஞ் செய்யேலாது. இப்ப எனக்கு உங்கட காணி உறுதி வேணும். இல்லாட்டில் கலியாணம் நடக்கவிடன்.

எல்லாவற்றையும் றெக்கோட் பண்ணியாச்சு. நல்லதொரு யதார்த்த சினிமா. இதை எல்லாருக்கும் போட்டுக்காட்ட வேணும். இதெல்லாம் ஊருக்குத் தெரியோணும் இப்படி நடக்குதென்று.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கலியாணம் நடக்குமோ என்று சந்தேகம் மேக்கப்காரருக்கு. காணி உறுதியைக் குடுத்தா கலியாணம் நடக்கும் என்றேன் நான். பொம்பிளை இன்னும் பால் வச்சபடி காய்ந்துபோய் இன்னமும் அழுது கொண்டிருந்தாள்.

அந்தநேரம் பொம்பிளையின்ர அம்மா வீட்டுக்குள்ள இருந்து வெளியில வருகிறா காணி உறுதியோட, அப்பாடா கலியாணம் நடக்கத்தான் போகுது. ஆனாலும் பாவங்கள் இதுகள் என்றார் கவலையோடு மேக்கப்காரர். எரிச்சலாய் இருந்தது எனக்கு கல்லுமாதிரி குந்தின குந்தில இருந்த பெட்டையைப் பார்க்க இவ்வளவு பிரச்சினை நடந்தும் அந்த இடத்தை விட்டு எழும்பாமல் இருக்கிறாள் என்று.

இந்த மாப்பிள்ளை இல்லாட்டி வேற ஒருத்தன் கிடைக்காமலா போயிடுவான். காதலும் கத்தரிக்காயும் அதெல்லாம் பொய். என்ன இன்னும் கொஞ்சநாளிலே எல்லாம் விளங்கும். எழும்பிப் போடி. அப்படிச் செய்தால்தான் ஆம்பிளயளும் திருந்த வாய்ப்பிருக்கும். சொல்ல முடியேல்ல எனக்கு. அந்த மனுசியும் அண்ணன்காரனும் பாவம்.

எல்லாம் செண்டிமெண்ட் கணக்காப் போய்ட்டுது. தமிழ் சினிமாவில அடிக்கடி வருகிற விசயம் மாதிரிக் கலியாணப்பந்தலில மாப்பிள்ளை சீதனம் காணாது, அல்லாட்டி சொன்னதைத் தரேல்ல என்று எழும்பிப் போயிடுவார் என்றால் அந்தப்பொம்பிளையை இனிமேல் ஆருமே கல்யாணம் கட்டமாட்டான் என்கிற சினிமா செண்டிமெண்ட் எங்கட ஊருக்குள்ளையும் இருக்குது. காதுக்குள்ள மெதுவாய்ச் சொன்னார் மேக்கப்காரர்.

காணி உறுதி கையில கிடைச்சதுதான் தாமதம் மாப்பிள்ளையின் அக்காகாரி மளமளவென்று போய்விட்டா. இன்னும் அழுதபடி காய்ந்து போய் பொம்பிளை.

“இருந்ததையும் குடுத்தாச்சு இனி என்ன செய்யப்போறான், இருக்கிற ரெண்டு பிள்ளையளுக்கும் இருக்க ஒரு இல்லிடம் வேணுமே” தாய் மனுசி, கோடிக்குப் பின்னால போய் பெரிய ஒப்பாரி. ஆக்கள் ஒரு மாதிரி ஆறுதல் சொல்லிக் கூட்டிவந்து பொம்பிள்ளைக்குப் பால்வச்ச பிறகுதான் பொம்பிள்ளை அந்த இடத்தைவிட்டு எழும்பினது.

“காணி உறுதியை குடுத்தாச்சு” என்று சொன்ன பிறகுதான் பொம்பிளை முழுச்சது. கலியாணம் வேண்டாம் எண்டு வீட்டுக்க ஓடிட்டுது. ஏன்ரா இந்தக் கலியாணத்துக்கு வந்தன் என்கிறது மாதிரிப் போச்சு எனக்கு.

அண்ணன்காரன் அடிச்சுப்போட்டான் பெட்டைக்கு. எடியே காதலிக்கேக்க கண்மண் தெரியேல்ல. இப்ப என்னடி கதைக்கிறாய். ஊர் முழுக்க உன்ர விசயம் தெரிஞ்சபிறகு எவனடி இனிக்கட்டப்போறான். எங்கையாலும் போய்த்துலை, அங்கயும் செண்டிமெண்ட்தான்.

பொம்பிளைக்கு முழுகவாத்து உடுப்புடுத்திக்கொண்டு வர நல்லா நேரம் போச்சு. இவ்வளவுக்கும் பொம்பிள்ளைத்தோழி அதுதான் அந்த ஆட்டக்காறி மாப்பிள்ளையின்ர அக்கா இன்னும் இல்லை. காலமை எட்டுமணிக்குத் தொடங்கின கலியாணவீடு பன்னிரெண்டு மணியாச்சு இன்னும் நடக்கேல்ல. தாலிகட்டுக்கு வந்திருந்த சனமெல்லாம் அரைவாசி திரும்பிப்போட்டுது.

பொம்பிளைத்தோழி வரும் வரும் என்று காத்திருந்து, ரெண்டரை ஆச்சு. பொம்பிளையின்ர அண்ணன் மாப்பிள்ளை வீட்டபோய் அக்காக்காரியைக் கூட்டிக்கொண்டுவாறன் எண்டு போனவன் போனவன்தான். நாலு மணிக்கு வாறன்.

“என்னடா” என்று கேட்டால் அக்காக்காரிக்கு சரியான அலுப்பாம், நித்திரையுமாம்.

உறுதி குடுக்கேக்க எல்லாரும்தான் நினைச்சது கலியாணம் உடன நடக்கும் என்று. கலியாணக்கனவு பெட்டைக்கும் இருக்கும்தானே. அதுவும் வெளிக்கிட்டபடி நிற்கிறது. மேக்கப்காரர். நல்லாத்தான் மேக்கப் போட்டிருந்தார். எல்லா வியூவிலயும் வீடியோவுக்குள்ள போட்டாச்சு. நூறு வீதம் அழகி. அவளுக்குத்தானாம் சீதனம் மாப்பிள்ளை கொடுக்கோணும். இந்த முஸ்லீம் நாடுகள் மாதிரி எங்கட ஊர்களும் வராதோ?

பெட்டையைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. முகம் முழுக்க ஓரே சோகம். மாப்பிள்ளையை நினைக்க ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. ஒழுங்காக ஒரு பெட்டைக்குத் தாலி கட்ட முடியாதவன் பேந்தேன் காதலிச்சவனாம்.

திமிர் பிடிச்சவள் அக்காக்காரி. அவளுக்கு காணி உறுதி வந்தால் போதும். என்ன மனுசி அவள். அவளின்ர புருசன் என்ன பேக்கிளாஞ்சியோ? கலியாணம் நடந்தால் என்ன விட்டால் என்ன என்று கலியாணத்துக்கு வந்த சனம் அரைவாசிக்குமேல திரும்பிப்போக கலியாணப்பந்தல் வெளிச்சுப்போச்சு.

என்ன சொன்னாலும் பொம்பிளையின்ர வாழ்க்கையில எதிரி என்றால் இன்னொரு பொம்பிள்ளைதான். அது ஒரு சாபம். எப்படித்தான் பெண்ணடிமைத்தனம் பற்றிப் பேசினாலும் அடக்கப்படுகிறது பொம்பிள்ளைதான். என்கிறது முற்று முழுதா தெரிஞ்சு போச்சு. ஆனா அதுக்குக் காரணம் பொம்பிளைதான் என்கிறதும் வெளிச்சப்பாடு.

இருட்டுப்பட்டுக்கொண்டு வந்த பிறகும் மாப்பிள்ளையோ மாப்பிள்ளை வீட்டுக்காரரோ வரேல்ல. அவங்களுக்குள்ளும் என்ன பிரச்சினை ஏதுமே தெரியாது. கலியாணம் இல்லையெண்டா காணி உறுதிக்கேன் நாண்டுகொண்டு நிண்டவை என்று அண்ணன்காரன் சயிக்கிளை எடுத்துக்கொண்டு போனான். சிலவேளை சண்டை ஒன்று நடந்து கலியாணம் நிண்டுபோகலாம். அல்லது சமாளிச்சு இரவுக்கும் தாலிகட்டுப்படலாம்.

இனி இருந்தென்ன செய்யிறதென்று கேட்டார் மேக்கப்காரர். இனிப்படமெடுக்கிற தென்றால் லைட் ஒழுங்குவேணும். கமரா சாமான்களை எல்லாம் கட்டிவச்ச பிறகும், ஆருமே என்னை நில் என்று சொல்லேல்லை. பிறகேன் நிற்பான். மோட்டார் சைக்கிள் ஸ்ராட்.

சே, என்ன சீவியம், என்ன கலியாணம் இது. இனிமேல் வாழ்க்கையில இந்தக் கலியாண வீட்டுப்படமெடுக்கிறதே இல்லை. அது ஒரு சிரழிவு பிடிச்ச வேலையடாப்பா.

இதை நானும் கதைக்க லாயக்கு இல்லாத ஆள்தான். ஏனெண்டால் எனக்கும் அம்மா சீதனம் வாங்கித்தான் கலியாணம் முடிச்சு வச்சவ. என்ர மனிசியின்ர காசில கமரா, மோட்டர்சைக்கிள், தங்கச்சிக்கு சீதனக்காசு. என்ர கலியாண வீட்டிலையும் சண்டை நடந்திருக்கும். அதுதான் என்ர மனிசியும் அடிக்கடி பாயிறவளோ. அவள் இப்பவே மகன வச்சுக் கொஞ்சுவாள், நீ வளர்ந்தவுடன் உனக்கு இருபது இலட்சம் சீதனம் வேண்டித்தான்ரா உன்ன கட்டி வைக்கிறது என்று. என்ன பெண்கள் ஒருவரை ஒருவர் பரம்பரை பரம்பரையாகப் பழிதீர்த்துக்கொண்டே போகப்போகிறார்களோ? தான் பழிவாங்கப்பட்டதற்கு இன்னொருவரைப் பழிவாங்குவது சந்தோசமா? என்றாலும் அந்தப்பெட்டை அந்த மாப்பிள்யை வேண்டாம் என்று சொல்லிப் போடோணும்? அந்த மாப்பிள்ளை எண்டவன் ஆம்பிளை இல்லை. தான் வாழுறதுக்காக இன்னொரு ஆம்பிளையின் உழைப்பை சுரண்டுவது பிழைதான்.

நானும் அப்படித்தானோ? எனக்கு அப்படி நடக்குமோ? பொம்பிள்ளைப் பிள்ளை பிறந்தால் தானே பிரச்சினை. சே. நானும். எனக்கும் ஊர்வன மூளைதான்.

நன்றி: வெளிச்சம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எங்களுக்கானதொரு சினிமா...! துளிர்க்கும் நம்பிக்கைகள்...!

## குறும்படப் போட்டி

நித்தியன்



புலம்பெயர்வாழ் தமிழீழக் கலைஞர்களின் 'ஈழத் தமிழ்த் திரைப்படங்களைக் கண்டடைவதற்கான' முயற்சிகள் மீண்டும் எழுச்சி பெற்றுள்ளன. உலகின் பல பாகங்களிலுமிருந்து குறிப்பாக இளைஞர்கள் இம் முயற்சியில் இறங்கி நின்று செயற்படுவது நம்பிக்கையை தருகிறது.

03.04.2005 அன்று மாலை பாரிசில் 'நல்லூர் ஸ்தான் கலைப்பிரிவி'னரால் நடாத்தப்பட்ட குறும்படப் போட்டி, குறும்பட வளர்ச்சியின் பாதையில் ஒரு பதிவாகிறது.

ஒவ்வொரு படமும், இருபத்திமூன்று நிமிடங்களுக்கு மேற்படாமலும், வேறு இடங்களில் காண்பிக்கப்படாததாகவும், சமூகப் பார்வையுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்பதும் போட்டிக்கான ஒழுங்குபடுத்துனர்களின் பொதுவிதியாக இருந்தது.

போட்டியிட்ட அத்தனை இளம் படைப்பாளிகளையும் செயற்பாட்டுக்குத் தூண்டி, சமூக வாழ்வியல் சார்ந்த விடயங்களில் அவர்களைத் தேடவைத்த போட்டி அமைப்பாளர்கள் என்றும் பாராட்டுக்குரியவர்களே. ஏழு படங்களும் தனித்தனியே புலம்பெயர் வாழ்வியல் பிரச்சனைகளையே மையமாகக் கொண்டு இயங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

இளம் படைப்பாளிகளுடைய பார்வைகள், அக்கறைகள், உணர்வுகள், சிந்தனைகள், எதிர்ப்பார்ப்புக்கள், கலைத்தாகங்கள், கலைநயங்கள் என்பவற்றை புரிந்துகொள்ள இது ஒரு சந்தர்ப்பமாகவும் அமைந்திருந்தது.

உலகெலாம் அறிவித்து நடாத்தப்பட்ட இப்போட்டிக்கு நிறைய படங்கள் வந்திருந்ததாக அறிகிறோம். எனினும் அவற்றுள் மக்கள், நடுவர்களின் பார்வைக்கு வருவதற்கான தகுதிபெற்ற படங்கள் ஏழு. அவை பின்வருமாறு.

* நீ நான் எல்லோரும் - நெறியாளர்: ரூபன்
* மறுமுகம் - நெறியாளர்: வினாகாண்டி
* நதி - நெறியாளர்: பாஸ்கரன்
* விடுதலை - நெறியாளர்: டிரூபன், சதா பிரணவன்
* எதுமட்டும் - நெறியாளர்: ஐ.ஏ.ஜனா
* வடலி - நெறியாளர்: முத்தமிழ்ச்செல்வன்
* கேள்விக்குறி - நெறியாளர்: ஹரிபிரசாத்

இவற்றுள் முதலாமிட விருதையும், சிறந்த ஒளிப்பதிவிற்கான விருதையும் 'எது மட்டும்' குறும்படம் பெற்றுக்கெண்டது.

புலம்பெயர்ந்து பிரான்சில் வதியும் தமிழ்க் குடும்பம் ஒன்றிற்கும் ஆபிரிக்க தேசமொன்றின் இளைஞனுக்கும் இடையே முகிழ்க்கும் மனித நேய உறவைப் படம் பிடிக்கின்றது.

இரண்டாமிட விருதையும் , சிறந்த நெறியாளர், சிறந்த நடிகர் ஆகியவற்றிற்கான விருதையும் 'நதி' என்னும் குறும்படம் பெற்றுக்கொண்டது. இது பிரான்சில் அகதி விண்ணப்பம் கோரி அதற்காக நம்பிக்கையுடன் காத்துநிற்கும் இளைஞன் ஒருவனின் வாழ்க்கையைச் சுற்றிச் சுழல்கிறது .

மூன்றாமிட விருதினை 'விடுதலை' என்னும் குறும்படம் பெற்றுக்கொண்டது. இது ஒரு மத்தியதரக் குடும்பத்தின் பணப்பட்டு வாடாவையும், போலித்தனங்களையும், ஏமாற்றுக்களையும், சகோதரனின் அக்கறை இன்மையையும், மடமைத்தனங்களையும் கண்டு மனம் கொதிக்கும் அந்த வீட்டு இளைஞன் தன் விடுதலைக்கான பாதையை இயல்பாக வரித்துக் கொண்டு செல்வது பற்றிப் பேசுகிறது.

'நீ - நான் - எல்லோரும்' என்ற குறும்படம் வாழ்க்கையில் விரக்தியுற்ற ஒரு இளைஞனின் வாழ்க்கையை மரணம் வரை சென்று பேசமுற்பட்டது.

'மறு முகம்' ரவுடித்தனங்களில் ஈடுபடும் இளைஞர்களுக்குள்ளும் மன ஆழத்துள் பாய்ந்து கொண்டிருக்கும் அன்பினூற்றை கண்டு அதைச் சமூக மானுட வாழ்வுக்கான அருவியாக பாயச்செய்தது.

வடலி, கேள்வி ஆகிய குறும்படங்களும் நல்ல கருக்களைக் கொண்டிருந்தன. இங்கு நாம் எந்த ஒரு படம்பற்றிய திறனாய்வுகளை மேற்கொள்ளவில்லை அந்தக் கடமை தனியானது. இங்கு பொதுவான சில அபிப்பிராயங்கள் மட்டுமே பரிமாறப்படுகின்றன.

முனைவர் திரு.மௌனகுரு அவர்களின் 'பழசும் புதுசும்' என்ற நூலில் அவர் கிராமியக் கலை பற்றிப் பேசும் போது, கலையானது எங்கு, எப்போது முகிழ்க்கிறதோ! அதை அந்த இடத்தில், அந்த நேரத்தில் அவர்களுடன் சேர்ந்து வளர்த்தெடுத்திட வேண்டும் என்ற கருத்துப்பட கூறியமை இங்கு நினைவுகூரத்தக்கது. அந்த வகையில் அபிப்பிராய பேதங்களுக்கப்பால் இத்தகைய நன்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவேண்டும் என்பதே எமது ஆதங்கம். சிறு மரக்கன்றை நாட்டும் போது, அதைச்சுற்றி கூடடைத்து நீரூற்றி வளர்ப்பது போல் முளைவிடும் கலை முயற்சிகளை விருட்சமாக்க வேண்டிய பணி எம்மெல்லோரிடமும் உள்ளதாக உணர்கிறோம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தா.விவேகானந்தன்

திரைப்படம்

# Hotel Rwanda

# தலைகுனிந்து நிற்கும் தலைமுறை

இருண்ட கண்டம் என மேற்குலகால் அழைக்கப்படுகிற ஆபிரிக்கா. அதன் துயரங்களின் வருகையில் ருவாண்டா.

நூறு நாட்களுக்குள் எட்டு லட்ச மக்கள் கொன்று குவிக்கப்பட்ட கொடுமை உலகின் ஊனக் கண்களுக்கு முன்பாகவே நடந்தேறியது.

மனித குலம் மற்றுமொரு தலைகுனிவை சந்தித்தது.

ருவாண்டாவின் பிள்ளைகளின் அபயக் குரல் உலகப் பிரக்ஞையின் செவிப்பறைகளில் பயனற்று ஒலித்து ஓய்ந்தது.

விக்டோரியா ஏரியில் (குளம்) ருவாண்டா மக்களின் உதிரம் நிறைந்தது.

துட்சி இனமக்களை கொன்று அந்த புதைகுழிகளின் மேலே புல் பதித்து உதைபந்து விளையாடிய குட்டு வெறியர்களின் அட்டூழியம் அரங்கேறியது.

உலகம் நித்திரை போல் பாவனை செய்தது. இந்தத் துயர் நிறைந்த வரலாற்றை ஆவணப்படுத்தி வெளிவந்திருக்கிறது. hotel rwanda என்கிற திரைப்படம்.

தொண்டைக்குழி வரை துயரம் முட்டி நிக்க வைத்திருக்கிற ஒரு திரைப்படம்.

மேற்குலகின் ஒவ்வொரு வீட்டின் வாசலையும் தாண்டி வந்து மனச்சாட்சியை உலுப்பியிருக்கிற ஒரு திரைப்படம் வந்து ருவாண்டாவின் சொல்லப்படாத சோகங்களை செதுக்கிவிட்டுப் போயிருக்கிறது.

ஆம், hotel rwanda - hollywood இன் மினுக்குகளை, ஒப்பனைகளைத் தாண்டி இன்னும் எஞ்சி இருக்கிற மனிதத்தின் ஈரத்தை இரந்து நிட்கிற ஓர் வரலாற்றுப் பதிவு.

பதட்டமான ஓர் சூழலில் செய்திகளை அறிகிற ஒரு அவசரத்தில் வானொலி அலைவரிசைகள் தேடப்படும் பின்னணி ஒன்றுடன் படம் ஆரம்பமாகிறது.

குறிப்பிட்ட வானொலி நிலையத்தின் அலைவரிசை கிடைக்கிறது.

"அன்பான குட்டு நேயர்களே ! எல்லாத் துட்சிகளையும் நான் ஏன் வெறுக்கிறேன் என யாரும் கேட்டால் எங்கள் வரலாற்றை வாசி என அவர்களுக்குச் சொல்வேன்.

இந்தத் துட்சிகள் பெல் காலனியாளர்களின் அடிவருடிகள். எங்கள் குட்டு மண்ணை சூறை ஆடியவர்கள். கரப்பான் பூச்சிகள் கொலைகாரர்கள். ருவாண்டா, குட்டுக்களின் நிலம். நாம் பெரும்பான்மையர். அவர்களோ



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சிறுபான்மையர். வந்தேறு குடிகள் காட்டிக் கொடுக்கும் கயவர்கள்.

இந்த தொற்று நோயை வேரறுக்க உறுதி பூணுவோம். இது குட்டு பவர் றேடியோ rtlm !"

துவேசம் ஒப்பலிக்க வானலைகளில் பரவுகிறது விஷம். (இங்குள்ள வானொலிகள் நெடுஞ்சாலை போக்குவரத்து தொடர்பான நடப்பு நிகழ்வுகளை உடனுக்குடன் அறியத்தருகிற செய்தியைப்போல (trafic infos) இந்த குட்டு வானொலி துட்சிக்களின் மறைவிடங்கள், நடமாட்டங்கள் பற்றி உடனுக்குடன் குட்டு வெறியர்களுக்கு அறியத்தருவதன் மூலம் இந்த இனப்படுகொலையின் வழிகாட்டியாக இருந்தது.)

நமக்கும் இந்த படத்தின் கதைக்கும் இருக்கும் ஒற்றுமைகள் ஓங்கி அறைய இயல்பான ஈர்ப்பு எங்களுக்குள் வந்துவிடுகிறது.

கதை இதுதான்

நாயகன் பால் ரச செபகினா ஒரு குட்டு. துட்சி இன பெண்ணை காதலித்து கை பிடித்தவன். கிகாலியிலுள்ள hotel des milles collines இல் உதவி முகாமையாளர்.




அரச இயந்திரங்களின் கெடுபிடி, இராணுவ அடாவடிகளை லஞ்சம் கொடுத்தும், 'காக்கா பிடித்தும்' லாவகமாக கையாளும் சாணக்கியன்.

1994 இல் குட்டு அரசாங்கத்துக்கும் துட்சி கெரில்லாக்களுக்கும் இடையே ஐ.நா அனுசரனையுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றது. மிதவாதியான குட்டு ஜனாதிபதி துட்சிகளுக்கு அதிகமாக விட்டுக்கொடுப்பதாய் குட்டு தீவிரவாதிகள் முரண்பட, குட்டு இராணுவம் 'இன்தர் கம் வே' எனும் கூலிப்படையை ரகசியமாய் பயிற்சிக்கொடுத்து சமாதானத்தைக் குழப்ப தயார்ப்படுத்துகிறது. இறுதித் தீர்வில் கையெழுத்திட இருதரப்பும் தயாராகையில் ஜனாதிபதி செல்லும் விமானத்தை குட்டுக்கள் சுட்டு வீழ்த்தி பழியை துட்சிகள் மேல் போட முறுகல் முற்றுகிறது.

"நெட்டை மரங்களை எல்லாம் வெட்டித்தள்ளுங்கள்"

என்ற சங்கேதக் குறியை குட்டு வானொலி அறிவிக்கவும் (துட்சிக்கள் உயரமானவர்கள்) இன அழிப்பு ஆரம்பமாகிறது.

போலிடம் துட்சி அயலவர்கள் அபயம் கேட்டு வருகிறார்கள். நெருக்கடி நிலையால் கோட்டலின் முகாமைப் பதவி போலிடம் வரவே தனக்கிருந்த மேலிடத்துச் செல்வாக்காலும் கோட்டலின் பணபலத்தாலும் இனவெறியர்களிடமிருந்து தனது உயிரையும் பணயம் வைத்து 1200 அபலைகளை காக்கின்ற ஒரு தனி மனிதனின் போராட்டமாய் கதை விரிகிறது.

ஐ.நா அமைதி காக்கும் படை, பிரெஞ்சு நாட்டுப் படை, உலகின் காவல்காரன் என மார் தட்டும் அமெரிக்கா, உலக மக்களின் மனசாட்சி எல்லாமே அவர்களை கைவிட்டுவிட. தம்மை தாமே காப்பாற்றவேண்டிய சூழலில் ஒட்டு மொத்த மனிதத்துவத்தின் பிரதிநிதியாக போல் உயர்ந்து நிற்கிறான்.

போலின் கதை உண்மையாக நடந்த நிகழ்வு என்பதை வாசகர்கள் மனதில் கொள்க.

படத்தின் ஒவ்வொரு காட்சியும் ஒவ்வொரு சாட்டை அடியாய் சுழீரிடும் அனுபவம். கத்திகளை மட்டுமே ஏந்திய ஒரு காடையர் கும்பல் மனிதர்களை வெட்டிச் சரிக்க ஐ.நா அமைதி காக்கும் படையினர் தானியங்கி ஆயுதங்களை வைத்தபடி மரங்களாய் நின்ற கொடுமை உறைக்கிறது.

வானொலியிலே சோகம் பூசிய குரலில் அமெரிக்க அதிபர் பில் கிளின்றன் குறுமுகிறார்: "எம்மாளான எல்லா



முயற்சிகளை மேற்கொண்டு எமது பிரஜைகள் 200 பேருடைய பாதுகாப்பையும் நாம் உறுதி படுத்துவோம்".

மீண்டும் உறைக்கிறது நமக்கு.

கோட்டலில் தங்கி இருந்த வெளிநாட்டுப் பிரஜைகளை மீட்க பிரெஞ்சு படையணி வந்திறங்கவும், அகதிகள் தமக்கு பாதுகாப்பு வந்ததென மகிழ்கிறார்கள். அவர்கள் தம்மை பாதுகாக்க வரவில்லை என அறிகிற போது அம் மக்களின் முகங்களில் பரவும் துயரம் உறைக்கிறது.

ஐ. நா அமைதிப் படை பொறுப்பதிகாரி உலக நாடுகளை தலையிடச் சொல்லி மனுவுக்கு மேல் மனு கொடுத்தும் மறுக்கப்பட்ட ஆத்திரத்தில் கொப்பொழிக்கிற வார்த்தைகள் உறைக்கின்ற சத்திய வசனங்கள் அவர் போலிடம் சொல்கிறார் "நீ என் முகத்தில் காறி துப்ப வேண்டும் போல் எனக்கு வெட்கமாக இருக்கிறது, நீங்கள் அழுக்குகள் என நாம் கருதுகிறோம்" அப்போது போல் இடைமறித்து "யார் அந்த நாம்" என்று கேட்கிறார்.

'மேற்குலகம், அமெரிக்க வல்லரசு, நீ நம்பியிருக்கிற எல்லாமும் போல்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சொல்லுங்கள்".

இதயம் உள்ள எந்த மனிதனையும் கட்டிப்போடும் இந்த வார்த்தைகள் அந்த மிருகங்களை கட்டிப்போடவில்லை.

இந்தப் படம் தந்த அனுபவங்களின் பின்னணியில் ஆபிரிக்க மக்களின் அழிவை மேற்கு நாடுகள் மறைமுகமாக ஆதரிக்கிறன்றனவா என்ற கேள்வி எழுகின்றது.

குட்டு இராணுவத்திற்கு ஆயுதங்கள் விநியோகம் செய்கிற பிரெஞ்சு அரசாங்கம் நினைத்திருந்தால் ஒரு தொலைபேசி அழைப்புடன் பதட்டத்தை தணித்திருக்க முடியும்.

ஐ நா அமைதிப் படையின் பலம் மற்றும்

நீங்கள் செல்லாக்காசு, நீங்கள் கறுப்பர்கள், நீங்கள் நிகர்கள் கூட இல்லை நீங்கள் ஆபிரிக்கர்கள். இந்தப் படுகொலையை நிறுத்த யாரும் எந்த முயற்சியையும் எடுக்கப்போவதில்லை."

கையறு நிலையில் வெடிக்கும் அவ்வார்த்தைகளின் வெப்பம் உறைக்கிறது. இனப்படுகொலைக் காளாகும் அந்த மக்கள் மேற்குலகின் நியாயதர்மங்கள் மீது வைத்த நம்பிக்கை தவிடு பொடியாகிறது.

நிற்கின்றோம் என்ற நிஜம் அறிகையில் இடிந்து போகிறார்கள்.

செஞ்சுலுவைச் சங்கப் பிரதிநிதி மடம் ஆர்ச்சர் ஓர் அநாதை இல்லத்தின் குழந்தைகளை மீட்க சென்றபோது அங்கே காடையர்கள் குழந்தைகளை வெட்டிச் சாய்க்கத் தொடங்கியிருந்தார்கள். அந்தப் படுகொலைகளை ஆர்ச்சர் பார்க்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். மடம் ஆர்ச்சர் கண்ணீர் மல்க விபரிக்கும் காட்சியின் போது எமக்குள் வலி ஊடுருவும்.





பலவீனம். இங்கு கேள்விக்குள்ளாகிறது. சுடானின் டார்வுரில் நடந்தேறுகின்ற படுகொலைகளை நிறுத்த ஐ. நாவும் ஐரோப்பிய பொருளாதார சமூகமும் அமெரிக்காவும் எடுக்கும் நடவடிக்கைகள் நத்தை வேகத்தில் நகர்கின்ற பகைபுலத்தில் பார்த்தால் ருவாண்டா படுகொலைகள் தடுக்கப்படாததன் காரணம் தெரியும். மேற்கு நாடுகள் ஆபத்தில் கால் வைக்கும் முன் தமக்கு வரும் லாபத்தையே கணக்குப்பண்ணுகின்றனர்......?

சோமேலியாவில் 16 இராணுவத்தை பறி கொடுத்ததும் அமெரிக்கா வெளியேறுகிறது. ஆனால் ஈராக்கில் ஆயிரக்கணக்கான படைகளை பலிகொடுத்தும் வெளியேற மறுக்கிறது.

இந்த இரட்டை விதமான போக்கு ஏன் என்ற கேள்வியும் எழுகிறது. ஆக மொத்தத்தில் ருவண்டாவின் ஒரு மில்லியன் மக்கள் தம் உயிர்கொடுத்து மீண்டும் நிரூபித்திருக்கும் உண்மை மேற்கு நாடுகளில் தலையீடு என்பது நியாயதர்மங்களுக்காக அல்ல பொருளாதார இராணுவ நலன்களுக்காகவா....?

உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது, சர்வதேச ஊடகங்கள் அவதானிக்கின்றன, ஐ.நா அமைதிப்படையணி இருக்கின்றது,

பிரெஞ்சு நாட்டு படை வீரர்கள் இருக்கிறார்கள், எமக்கு இத்தனை அரண்கள் காப்பாக உள்ளன என நினைத்த ருவாண்டா மக்கள் வெட்ட வெளியில் நிர்க்கதியாய் நாம்

ஒரு சிறுமி தனது முதுகில் குழந்தைச் சகோதரியை மூட்டைக் கட்டி சுமந்தபடி, வெட்ட வரும் காடையர்களிடமிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு மடம் ஆர்ச்சரிடம் மன்றாடுகின்றார்.

"அய்யோ அவர்களை வெட்ட வேண்டாம் என்று சொல்லுங்கள் நான் இனிமேல் துட்சியாக இருக்கமாட்டேன் என்று



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# என் கனவிலும் இல்லாத வீரம்



உயிரோடு வேர்கிழிந்து
நரம்புக்குள் மட்டும்
ஈரம் கசியும்
உணர்வு
யாராலும் அறியப்படாத
என் கனவுலகிலும் இல்லாத
வீரம்
மகத்தானது.
விடுபட்ட தமிழன்
எல்லைகளில் எதிரியின்
முகாம்கள்.
வெடிக்கும் சத்தத்தில்
மட்டும்
அடையாளப் படுத்தியது.
இடிமின்னலில்
வரும் மழையைப் போல்
ஒளிக்கீற்றுக்களின் உள்ளே
காணாமல் போனீர்கள்.
அதனால்
இன்று வானமாய் ஆனீர்கள்.
நிழலில்
ஆலமரமாக இருந்தாலும்
கற்பாறை இடுக்கே
உட்புகுந்து இருந்தாலும்
வேர்
குளிர்காயவும் செய்யும்.
இரவு நேரங்களில்
வெளிச்சம் தேடிப்போனவன்
நீ.
நிலவின் பின் முதுகு தெரியாது
அதேபோல்
நீயும் திரும்பி வரப்போவதில்லை.
ஆனால்
இரவில் உனது வெளிச்சம்
வழிகாட்டிக் கொண்டிருக்கும் .
உனது விரல் பிடித்து
வளர்ந்த நகம் வெட்டும்போது
குளறியும், தலையில்
எண்ணெய் வைக்கும் போது
அழுதும்,
காய்ச்சலில் ஒரு குளுசை
போடுவதற்கு
கத்திக் கூச்சலிட்டும்,
இரவானதும்
வீட்டுக்குள் அடங்கும்
ஒரு தாயுடன்
இருந்த காலம் மட்டும்
எப்படி
இன்று எத்தனை தாய்க்குப்
பிள்ளை நீ.
உன்னோடு பழகிய அந்த
ஆல மரத்தடி
ஒற்றைப் பனையடி
நல்ல தண்ணீர் கோயில்
கிணற்றடி
வாய் பேச முடிந்தால்
உன்னைப் பற்றி நிறையச்
சொல்லும்.

உன்னோடு பழகியவர்கள்
பயிற்சி முகாம் முற்றம்
நடந்து சென்றபாதை
இன்னும்
தனிமைப்படவில்லை.
நீண்ட தூரம்
இலக்கு நோக்கி நடந்த
கால்கள்,
களைத்துவிட்ட பாதை
இங்கே
இருக்கும் மட்டும்,
தூரக்கண்ணோட்டத்தில்
பார்வை இழந்த இடங்கள்
இருக்கு மட்டும்.
வலிந்து தொண்டை இறுகி
காய்ந்தும்
உட்புகும்
சொட்டுத் தண்ணீரிலும்
கூட
உன் முகம்
தூய சிந்தனையில்
விடுதலைப் பரவசத்தில்
பழந்தமிழ்
குடித்து நிறைந்தது
அதனால்
வீரவெறி உன்னோடு
ஒட்டியதுமில்லை,
கோழைத்தனம் உன்னோடு
நெருங்கியதுமில்லை.
எதிரியின்
குண்டு மழையில்
வெடித்துச் சிதறி, துண்டங்களாக
இரத்தம் உறைந்த நிலத்தில்
கிடந்தும்.
புகைமண்டலத்தில்
மூச்சுத்திணறிய போதும்
கூட
நுரையீரல் வரைவந்த
காற்று
முதன் முதலில்
தீண்டாமல் திரும்பிய போதுதான்
நீ மாறிவிட்டாய்.
அடி வேரைச் சாய்க்கும்
உனது முடிவை
நினைக்கையில்,
ஆழ உலுக்கி
அதிர்வில் இருந்து எழும்பும்
எதிரிக்கு நடுக்கம்
ஏற்படும்.
எங்கிருந்து வருவான்?
எப்படி வருவான்?
யாருக்கும் தெரியாது.
வெடி ஓசையின் அதிர்வில்
நடந்து முடிந்துவிட்டது
செய்தி வரும்.
ஆழக்கடலில்
மீள முடியாமல்
சென்றுவரும் போதும்
உயிர்கொல்லிகள்
வழிமறித்து வழிமறித்து
சாவுகொண்ட
உன்னைவிட
கடலுக்கும் திமிர் உண்டு.
ஓட ஓடத் துரத்தி
வெடிக்கையில்
கூடுதலான
ஆனந்த கொந்தளிப்பில்

எம்மையும் மீறிவிட்டாய்.
எத்தனை போர்கள்
வரிசையாக வந்து கொண்டிருக்க
இனியும்
எத்தனை நாட்கள்
எங்கள் மண்ணில் இருக்கப்
போகின்றாய்.
செத்தவனைக் கேட்கவும்
அவன் உடலைப் பார்க்கவும்
முடியாது.
காயப்பட்டவனாக
ஒருவரும் இருக்கவும் முடியாது.
தூரவரும் சத்தம்கேட்டு
ஓடியவனைக் கேள்,
கரும்புலி
எப்படிப்பட்டவன்.
நீ எதிர்பார்த்த திசையில்
சண்டை நடக்கும்.
நீ எதிர்பார்த்த திசையில்
கரும்புலி வெடிக்கும்.
நீ செத்ததிற்கான
அடையாளம் இல்லாமல்
உனது குடும்பம்
பிறந்தநாள் கொண்டாடும்,
இனிமேல் ஆவது
இறந்ததிற்கான
அடையாளம் கொண்டு
பிறந்தநாள் கொண்டாடு.
உன்னையே எதிர்பார்த்திருப்பான்
இனிமேலும்
வந்துவிடாதே
சாகவில்லை
பிறக்கின்றான் கரும்புலி.

செல்வா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# அல்ஜீரியாவில் எழுந்த போராட்ட உணர்வலைகள்

பிரான்சுக்கும் அல்ஜீரியாவுக்கும்மிடையே போர் நடந்து முடிந்து இன்றோடு ஐம்பது வருடங்களாகிவிட்டன. இன்று, பிரான்சில் இந்நாளை நினைவு கூருகிறார்கள்.

அது குறித்த சிறு அறிமுகம் ஒன்றை செய்யும் முகமாகவே இச் சிறு கட்டுரையை வரைகிறேன். என்னுடன் கல்வி பயிலும் லிண்டா, தன் பெற்றோர்கள் இந்த போராட்டக் காலத்தில் வாழ்ந்து அவஸ்த்தைப் பட்ட கதையை எனக்குச் சொன்னாள். அவளுடைய மாமனாரும், கர்ப்பிணியாக இருந்த அவளது சித்தியும் சித்திரவதைக்குள்ளாகித் துன்பப்பட்டக் கதையை எனக்கு கண்கள் கலங்கியபடி சொன்னாள். அவர்களும் கூட நீண்ட இந்த போராட்டத்தில் தப்பி புலம் பெயர்ந்து பிரான்சில்தான் வாழ்கின்றார்களாம். எங்களையொத்த துன்பத்தை அவளும் அன்று அடைந்திருக்கிறாள் என்பதை எங்களுக்குள் பரிமாறிக் கொள்ளும் போது நானும் அவளும் புதிய நண்பிகளாக உணர்ந்தோம்.

நானும் உங்களுடைய போராட்டத்தையும், துன்பங்களையும் ஆழமாக உணர்கிறேன் என அவள் எனக்குச் சொன்னாள்.

அல்ஜீரியா நூற்றியிருபத்திநான்கு வருடங்களாக பிரான்சினுடைய காலனித்துவத்தில் சிக்கியிருந்தது. சுயாட்சிக்காக காலனித்துவத்தை எதிர்த்துப் போராடியது.

வன்முறையான கால்களோடு கடந்த அந்தக் காலத்தை பற்றி எப்படிப் பேசாமல் விடலாம் என அவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

## போராட்டம் எவ்வாறு தொடங்கியது

பிரான்ஸ் இந்த போராட்டத்தை எதிர்த்து அதை அடக்குவதற்கு எவ்வாறு செயற்பட்டது நீண்ட, வலியுள்ள இந்த போராட்டம் எவ்வாறு முடிவை எட்டியது என்கிற பல கேள்விகள் என் மனதில் எழுந்துள்ளன அவற்றுக்கெல்லாம் முழுமையான விடையை இச்சிறு கட்டுரையில் தந்து விட முடியாது.

1945 களிலேயே அல்ஜீரியர்கள் மிகவும் கடினமான பிரச்சினைகளைக்கு முகம் கொடுத்தனர். நவீன விவசாயமும், சிறந்த மருத்துவ வசதியும், தரமான உணவுப் பொருட்களும், உயர் தரமான கல்வி முறையும் ஐரோப்பியர்கள் வசமேயிருந்தன. கடைநிலை வேலைகள் எனக்கருதப்பட்ட நிட்சயமற்ற, கடினமான வேலைகளை மட்டுமே அந்த மக்கள் மேற்கொள்ளவேண்டியதாக இருந்தது.





www.tamileelamarchive.com

தமிழ் ஆவணக் காப்பகம்

மீரா

அங்கு சமூக பிரச்சினைகளும், பொருளாதாரப் பிரச்சினைகளும் பெருகிவர மக்கள் அடக்கு முறையை உணரத் தொடங்கினார்கள். அதற்கெதிராக அந்த மக்கள் போராடத் தொடங்கினார்கள்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்று கோசங்களை முன்வைக்கும் பிரான்ஸ் அல்ஜீரிய மக்களுக்குக் அதை வழங்காத காரணத்தினாலேயே அவர்கள் போராட்டத்தைத் தொடங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

அல்ஜீரியாவில் பிறந்த 25 வீதமான மக்கள் ஐரோப்பியர்கள். இவர்களை 'பிரெஞ்சு வம்சா வழியினர்' என்று அழைக்கப்படுகிறார்கள். 1954 ல் புரட்சி வெடிக்கும் வரை அவர்கள் அங்கு வாழ்ந்தார்கள். இவர்களில் அனேகமானோர் நகரவாசிகளாகவும்,உயர்தரக்கல்வி பெற்றவர்க ளாகவும், செல்வந்தர்களாகவும் இருந்தார்கள்.

ஆனால் அல்ஜீரியாவில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு சமத்துவமான ஏற்பாடுகள் முன்வைக்கப் படும் போது இவர்கள் அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை.

அல்ஜீரிய மக்களால் தேசிய விடுதலை முன்னணி என அழைக்கப்படும் சுதந்திரத்தை விரும்பும் விடுதலை அமைப்பு கட்டியெழுப்பப்பட்டது.

நீண்ட ஆறாக பெருகி ஓடிய கண்ணீரையும், துன்பத்தையும் சுமந்துகொண்டு மன உறுதியோடு அவர்கள் போராட்டத்தில் குதித்தார்கள்.

கொடிய வறுமைக்கு மத்தியில் அவர்கள் சுதந்திரத்திற்காக போராடத் துணிந்தனர். நீண்ட காலமாக இப் போராட்டம், உலகத்திற்கு முழுமையாகத் தெரியாத மௌனப் புரட்சியாகவே நடந்துவந்துள்ளது. .



1954 ம் ஆண்டு தொடக்கம் -1962 வரையிலான எட்டு வருடங் களாக நீடித்த இப்போராட்டம். இன்று, பிரான்ஸ் தமக் குள்ளேயே நாற்பத்தி நான்கு வருடங்களுக்குப் பிறகு நடந்த அந்த முறைகேடுகளை, தவறுகளைக் குறித்த விவாதங்களை எழுப்பத் தொடங்கியுள்ளது. லிண்டா இது குறித்த நினைவு நாளில் கலந்துகொண்டுவிட்டு வீடு திரும்பும் பொழுது மனம் கனக்க என்னுடன் நடந்துவந்துகொண்டிருந்தாள்.

பாதைகள் 'மெல்லென' திறபடுகின்றபொழுதும் கடந்த காலம் ஏற்படுத்திய வலியிலிருந்து அவள் மீளமுடியாதவளாக இருந்தாள். அங்குமில்லாமல் இங்குமில்லாமல் போன புதிய அவலம் தொனிக்க அவள் நின்றுகொண்டிருந்தாள்.

## அலைந்தழிந்துபோன இரங்கல் கடிதம்

கை. சரவணன்

எனது சிலுவையை
நானாயே விரும்பித் தோளேற்றிச்
சுமந்து கொண்டிருக்கிறேன்,
எனது உடல், எனது
மனம்போலவே முழுமையும்
என்னிடத்தில்.
அனுதாபம் என்ற
வார்த்தைகளைப் பொருத்திய
நண்பசலில் ஏளனமே
மனத்தது பெரிதாக நாறி.
அவனது மூளையை உயரிக்
கிளையில் வைத்து
காகம் கொத்திக்கொண்டும்,
காலடிக்கிளையில் அலகு
துடைத்தபடியாயும்
இருந்தது.
நாவினை, அறணை
நக்கிக்கொண்டிருந்தது.
வயிற்றினை
அடங்காப் பசிமீறிய
யானை கொண்டு போயிற்று
இரவலாக மட்டும்
என்றான் நண்பன்.
அவனது கைகளால்
குரங்கு சொறிந்துகொண்டது
முதுகு, தலை, கை, கால்
எங்குமாக மாறிமாறி,
வேகமூட்டவே
நத்தைகள் கால்களை
ஊர்ந்து கொண்டிருந்தன.
கண்களில் வௌவால்கள்
குடிகொள்ள வாடகைக்கு
எடுத்திருந்தன.
மீந்துபோன தனது பகுதிகளை
பதுக்கியிருந்தான்,
பாம்புப் புற்றிலோ அல்லது
வேறெங்காகிலுமோ.

இதுபற்றியும்
இவை பற்றியும் அவன் ஏதும்
பேசவில்லை,
பிரயத்தன மெடுக்கவும் இல்லை.
நானாகவே
தோளில் ஏற்றுக்கொண்ட
சிலுவையினது கனம் பற்றி
பஞ்சினது பொறமை பூத்த
வார்த்தைகளில்
நண்பனுக்குச் சுவறிவிட முடியவில்லை.
இரங்கல் தெரிவித்துக்கொள்வதாக
மட்டும் அடிக்கடி
என்மேல் வார்த்தையாடினான்.
அதிலெல்லாம் அவனது
ஏளனமே மனத்தது நாறியபடி.
ஆனால் பாவம்,
தன்னைவிட என்னையே
அதிகமாக நேசிக்க முடிந்தது
அவ்வளவே அவன்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



நெதர்லாந்து

அன்னை பூபதி நினைவு நாள் - 2005







பிரான்ஸ்

லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு மாவீரர்களினதும்
மாமனிதர் சந்திரநேரு அரியநாயகத்தினதும் 45ம் நாள் நினைவுப்பகிர்வு






பிரான்ஸ்

வெற்றி முரசம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

லெப்.கேணல் கௌசல்யன் நினைவுக் கலைக்கூடம் திறப்புவிழா



சுவிற்சலாந்து



நாட்டியமயில் - 2005




சுவிற்சலாந்து




அன்னை பூபதியின் ஞாபகார்த்த எழுச்சி விழா






சுவிற்சலாந்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**பண்டா செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது:**

சிறீலங்காவின் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர். டி. பண்டாரநாயக்காவிற்கும் தமிழரசுக்கட்சித் தலைவர் தந்தை செல்வாவிற்கும் இடையில் மேற் கொள்ளப்பட்ட பண்டா- செல்வா ஒப்பந்தம் 18.04.1958 அன்று பண்டார நாயக்காவினால் கிழித்தெறியப்பட்டது.

**தந்தை செல்வா நினைவுநாள்:**



தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர், தமிழினத்தின் உரிமைகளை அகிம்சை வழிமுறை மூலம் பெற்றுவிடத் துடித்த தலைவர், கட்சிக்காகவும் இனத்திற்காகவும் அளப்பரிய தியாகங் களைச் செய்தவர் தந்தைசெல்வா. அவர் களின் நினைவுநாள் 26.04.1977 அன்று ஆகும்.

**பஸ்தியாம்பிள்ளையும் அவரது அணியினரும் அழிப்பு:**

தமிழ் இளைஞர் பலரை சித்திரவதை செய்வதில் முன்னிலையில் நின்ற வரும். விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதில் தீவிர மாகச் செயற்பட்டவருமான சிறீலங்கா காவல்துறை ஆய்வாளர் பஸ்தி யாம்பிள்ளை தலைமையிலான பொலிஸ் அணியினர் முருங்கன் பகு திக்கு அருகே மடுறோட் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலி களின் முகாமொன்றை 07.04.1978 அன்று சுற்றி வளைத்தனர். மாவீரர் லெப். செல்லக்கிளி தலைமையிலான விடுதலைப் புலிகள் அணி சம யோசிதமாக பஸ்தியாம்பிள்ளை குழுவினரை மடக்கி அவர்களைத் தாக்கியழித்து அவர்களிடமிருந்து ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

**யாழ் காவல் நிலையம் தகர்ப்பு:**

நன்கு பலப்படுத்தப்பட்டிருந்த யாழ் காவல் நிலையம் கேணல் கிட்டண் ணாவின் வழிநடத்தலில் 10.04.1985 அன்று தகர்க்கப்பட்டதோடு சிங்கள இராணுவ நகர்வுகளும் தடுக்கப்பட்டு முகாம்களுக்குள் இராணுவம் முடக்கப்பட்டது.

**திம்புப் பேச்சுவார்த்தை :**

சிறீலங்கா அரசாங்கத்திற்கும் தமிழர் தரப்பிற்கும் இடையே பூட்டானின் தலைநகர் திம்புவில் இந்திய அரசின் அனுசரணையுடன் 10.04.1985 அன்று பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது, சிறீலங்காவின் நயவஞ்சகத்தால் இப் பேச்சுவார்த்தை முயற்சி குழம்பியது.

**மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பம்:**

சமாதான முயற்சிகள் எப்பயனுமற்று தொடர்ந்த வேளை சந்திரிகா அர சுடன் செய்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக தேசியத் தலைவர் அவர்கள் அறிவித்த 19.04.1995 அன்று விடுதலைப் புலிகளின் கடற் கரும்புலிகளால் முதலாவது தாக்குதல் திருமலைத் துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது சிறீலங்காக் கடற்படையின் சங்காய் வகையைச் சேர்ந்த இரு பீரங்கிக் கப்பல்கள் அழிக்கப்பட்டன, இதன் பின் மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானது.

**'சூரியக்கதிர்—02' இராணுவ நடவடிக்கை:**

தமிழ் மக்களைக் கொன்றொழித்து, சொத்துக்களை நாசமாக்கி, இலட் சக்கணக்கான தமிழ் மக்களை அகதிகளாக்கிய **'சூரியக்கதிர்-02'** எனும் குறியீட்டுப்பெயர் கொண்ட இராணுவ நடவடிக்கையை 19.04.1996 அன்று சிறீலங்கா அரசபடைகள் ஆரம்பித்தன.

**அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன:**

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு அணியினரால் 28.04.1995 அன்று அவ்ரோ விமானம் பலாலித் தளத்தினுள் சுட்டு வீழ்த்தப்பட்டது. வான்படையின் உயர் அதிகாரிகள் உட்பட 40 படையினர் கொல்லப்பட்ட னர். 29.04.1995 அன்று இன்னொரு அவ்ரோ விமானம் நவக்கிரியில் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் பயணம் செய்த 50 வரையான படையினர் கொல்லப் பட்டனர்.

**அன்னை பூபதி நினைவு நாள்:**



ஒரு இனத்தின் அரசியல் சுபீட்சத்திற்காக, ஆக்கிரமிப்பு நாட்டிற் கெதிராக உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தி உயிர்நீத்த உலகின் முதற் பெண்மணி அன்னை பூபதி, 19.03.1988 முதல் 19.04.1988 வரையிலான ஒருமாத உண்ணாவிரதப் போராட்டத்தின்பின் தமிழர் விடிவிற்காக தன்னை அர்ப்பணித்தார். அவரின் நினைவுநாள் 19.04.1988 அன்று ஆகும்.

**வரலாற்றுப் புகழ்மிக்க ஆனையிறவுப் பெருந்தள அழிப்பு:**

தமிழீழ தேசத்தில் 240 வருட காலமாக அடிமைச் சின்னமாக விளங்கிய ஆனையிறவுப் பெருந்தளம் தமிழீழத் தேசியத் தலைவரின் வழிநடத் தலில் ஓயாத அலைகள் -3 படையணிகளால் 22.04.2000 அன்று அழிக் கப்பட்டது. 240சதுரக் கிலோ மீற்றரில் பரந்திருந்ததும், 15000 இராணு வத்தினரைக் கொண்டிருந்ததும், யாழ் -குடாநாட்டின் வாசலில் பெரும் தடைக்கல்லாக இருந்ததுமான இப்படைத்தளம் மீட்கப்பட்டதானது தமிழர்களின் விடுதலை வரலாற்றில் வெற்றியின் ஒரு மைல்கல்லாகும். 1000த்திற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்ட இப் பெருந்தளத் தாக்குதலில் வெற்றிக்கு வித்தாக 35 போராளிகள் வீரச்சாவடைந்து வீர காவியம் படைத்தனர்.

**பிரதான யாழ் கண்டி வீதி (ஏ 9) திறப்பு, உணர்வுபூர்வமான நிகழ்வு:**

ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக மக்கள் பயணம் செய்ய முடியாதபடி சிங்களப்படையினரால் மூடப்பட்டுக் கிடந்த ஏ 9 எனப்படும் பிரதான யாழ் - கண்டி வீதி அதிகாரபூர்வமாக 08.04.2002 அன்று திறந்து வைக்கப்பட்டது. இப்பாதை திறந்து வைக்கப்பட்ட அதேவேளை யாழ் குடாநாட்டில். அரசியல் பணிகளை மேற்கொள்வதற்கெனச் சென்ற 15 விடுதலைப் புலிகளை பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு மகிழ்ச்சி ஆர வாரங்களுடன் தூக்கி அழைத்துச் சென்றனர்.



**கிளிநொச்சியில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாளர் மாநாடு:**

சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்கள் நடத்திய செய்தியாளர் மாநாட்டிற்கு உலகத்தின் பல பகுதிகளின் பிரபல செய்தி ஊடகங்களின் செய்தி யாளர்கள் மிகுந்த ஆவலுடன் வன்னி சென்று கலந்து கொண்டனர். எழுநூறிற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கலந்துகொண்ட இம் மாநாடு மிகச்சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு நேர்த்தியான முறையில் வெற்றிகரமாக நடைபெற்றது. 10.04.2002 அன்று இம் மாநாடு நடை பெற்றது.


www.tamileelamarchive.com

### 12 பெப்ரவரி 2005

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அரியநாயகம் சந்திரநேருவுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் 'மாமனிதர்' பட்டம் வழங்கி கௌரவித்துள்ளார்.

### 12 பெப்ரவரி 2005

மன்னார் நகர விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகம் மீது 12.02.2005 அன்றிரவு இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு வீச்சுத்தாக்குதலில் சிவிலியனொருவர் கொல்லப்பட்டுள்ளார்.

### 14 பெப்ரவரி 2005

சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நம்பிக்கையை மீளக்கட்டியெ ழுப்புவதற்கு சிறீலங்கா அரசாங்க படையினருடன் இயங்கும் ஆயுதக்குழுக் களின் ஆயுதங்களை களையவேண்டும். அனர்த்த நிவாரணத்துக்காக வெளி நாடுகள் அளித்துள்ள நிதியை நீதியாகப் பகிர்வதற்கு பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும். இவை இரண்டையும் சிறீலங்கா அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்து வாசிரியருமான அன்டன் பாலசிங்கம் 14.02.2005 அன்று தன்னை சந்தித்த நோர்வே அனுசரணையாளர் குழுவிடம் எடுத்துக்கூறியுள்ளார்.

### 17 பெப்ரவரி 2005

விடுதலைப்புலிகளை கனடாவில் தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவிக்க வேண்டும் என்ற எதிர்க்கட்சியான கன்சவேட்டி கட்சி உறுப்பினரின் வேண்டு கோளை கனடிய வெளிவிவகார அமைச்சர் பியர் பெற்றிக்குறு அவர்கள் நிராகரித்துள்ளார்.

### 18 பெப்ரவரி 2005

யுத்தத்திற்கு சிறுவர்களை சேர்ப்பது பற்றி எம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டை நாம் முற்றாக மறுக்கின்றோம். எமது கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள்ளும் இப்படியான சம்பவங்கள் இல்லை. எவரும் சுதந்திரமாக வந்து இதனை அவ தானிக்க முடியும் என விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

### 22 பெப்ரவரி 2005

யுத்த நிறுத்தத்தை தொடர்ந்து அலட்சியம் செய்துவரும் சிறீலங்கா அரசின் நிலைப்பாடு குறித்து தமது அதிருப்தியையும் கண்டனத்தையும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் 22.02.2005 அன்று தம்மைச் சந்தித்த நோர்வேத் தூதுக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

### 24 பெப்ரவரி 2005

கல்வி மற்றும் சமூகப் பணிகளில் பல அமைப்புக்களுடன் இணைந்து தனது அளப்பெரும் சேவையினை ஆற்றியவரும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களில் முக்கிய பங்காற்றியவருமான மதிப்பிற்குரிய வேலுப்பிள்ளை கந்தையா ஏரம்பு அவர்கள் காலமானார். இம்மண்ணின் மனிதராக நின்று மகத்தான பணிகளைச் செய்த மதிப்பிற்குரிய வேலுப்பிள்ளை கந்தையா ஏரம்பு அவர்களுக்கு நாட்டுப்பற்றாளர் என்னும் உயர்வினை வழங்கி தமிழீழ விடுதலைப் புலிகள் கௌரவித்தனர்.

### 28 பெப்ரவரி 2005

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

### 28 பெப்ரவரி 2005

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகள் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

28.02.2005 அன்று அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று - பொத்துவில் வீதி தம் பட்டையில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காயமடைந்த ஏனைய போராளிகள் சசிமதி மற்றும் அகநிலா என தெரிவிக்கப்படுகின்றது.

### 04 மார்ச் 2005

யாழ்ப்பாணத்தில் 04.03.2005 அன்று சிறீலங்காப்படையினரின் நடத்திய காட்டு மிராண்டித்தனமான தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். பரமேஸ்வராச் சந்தியை நோக்கி பல்கலைக்கழக வீதியூடாக பயணித்த மக்கள் மீது சிறீலங்கா இராணுவப்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்த துப்பாக்கிச் சூட்டில் 58 வயது மதிக்கத்தக்க முதியவர் நாகன் கதிர்காமு சம்பவ இடத்திலேயே உயிரி ழந்தார். யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் கட்டுடையைச் சேர்ந்த குணசீலன் அன்டனி (வயது 20) மற்றும் யாழ். நகரைச் சேர்ந்த சுப்ரமணியம் சிவராசா (வயது 49) ஆகியோரே மிகவும் படுகாயமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### 04 மார்ச் 2005

யாழ். நகரில் 04.03.2005 அன்று காலை இடம்பெற்ற இராணுவ வாகன விபத்தில் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி பலியானார். இதையடுத்து அங்கு பதட்ட நிலை ஏற்பட்டது. சிறீலங்கா இராணுவத்தின் இந்த அடாவடித்தனத்தைக் கண்டித்த மாணவ மாணவியர், மக்கள் மீது சிறீலங்கா பொலிசார் கண்ணீர் புகையடித்து தடியடிப் பிரயோகம் நடத்தினர். கூடுதலாக இராணுவத்தினரும் குவிக்கப் பட்டுள்ளனர். பலியான மாணவி நல்லூரைச் சேர்ந்த நாகேந்திரன் துளசிகா வயது 12 என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் வேம்படி மகளிர் கல்லூரியில் தரம் ஏழில் கல்வி பயின்று வந்தார்.

### 05 மார்ச் 2005

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசம் கிரிமிச்சையில் 05.03.2005 அன்று நண்பகல் இடம்பெற்ற ஆயுதக் குழுவின் துப்பாக்கிச் சூட்டில் விடுதலைப் புலிகள் இயக்க போராளி ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொரு போராளி காயமடைந்துள்ளார். உயிரிழந்த விடுதலைப் புலிப் போராளி ஜெயராஜா என விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

### 05 மார்ச் 2005

பொலன்னறுவை மாவட்டம் வெலிக்கந்தை பிரதேசத்திலுள்ள கொலக்குனாவ வெளியில் 05.03.2005 அன்றிரவு இரண்டு வீடுகள் மீது இனந் தெரியாத ஆயுதக் குழுவொன்று மேற்கொண்ட தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

### 07 மார்ச் 2005

தமிழ் மக்கள், விடுதலைப் போராளிகளை படுகொலை செய்யும் நிகழ்வுகளுக்கு முடிவுகட்டும் வகையில் விரைவில் தமிழீழத் தேசியத் தலைமை தீர்க்கமான முடிவை அறிவிக்க உள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

### 11 மார்ச் 2005

வடமராட்சி துன்னாலை கலிகைச் சந்தியில் சிறீலங்காப் படைமுகாமைச் சேர்ந்த படைச் சிப்பாய் ஒருவர் 10.03.2005 அன்று நள்ளிரவு முகாமுக்கு அருகாமை யிலுள்ள வீடொன்றில் புகுந்துள்ளார். பெண்களை பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கும் நோக்கில் அவ்வீட்டிற்குள் படையினர் நுழைந்துள்ளார். இதனையடுத்து அவ்வீட்டின் குடும்பத்தலைவர் சத்தமிட்டு அயலவர்களின் உதவியுடன் படையினனை பிடிக்க முற்பட்டபோது சிப்பாய் தப்பியோடியுள்ளார். இதனையடுத்து துன்னாலை மக்கள் சிறீலங்காப் படையினருக்கெதிராக 11.03.2005 அன்று காலை 6 மணியிலிருந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### 11 மார்ச் 2005

யாழ். சாவகச்சேரிப் பகுதியில் சிறீலங்காப்படையினரின் வாகனம் மோதி பொது மகன் ஒருவர் படுகாயம் அடைந்ததைத் தொடர்ந்து மக்களுக்கும் படையினருக் கும் இடையில் கடும் முறுகல்நிலை ஏற்பட்டது. இச்சம்பவத்தால் ஆத்திர மடைந்த மக்கள் படையினருக்கு எதிராக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### 12 மார்ச் 2005

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இடைக்காலக் குடிமனை களைக் கொண்ட குடியிருப்புக்களை அமைக்கும் வேலைத்திட்டச் செயற் பாடுகளைத் துரிதமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒருங்கிணைத்து நடை முறைப்படுத்தி வருகின்றது. அதற்கமைய வடமராட்சி கிழக்கில் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் ஒழுங்கிணைந்த செயற்பாட்டுக்கூடாக இது வரையில் நான்கு குடியிருப்புக்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

### போராளி வீரச்சாவு

14 மார்ச் 2005,

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஜெயசிக்குறு எதிர்ப்புச் சமரின்போது விழுப்புண் அடைந்து, சிகிச்சை பெற்று வந்த போராளி ஒருவர் 14.03.2005 அன்று வீரச்சாவடைந்துள்ளார். சாமிப்புலம் நல்லூர் பூநகரி மன்னாரைச் சேர்ந்த மேஜர் நவக்குமார் என்றழைக்கப்படும் கதிரவேலு சந்திரமோகன் என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

### ஆழிப்பேரலை காலத்தில் அள்ளிக்கொடுத்த புலம்பெயர் தமிழ் உறவுகளுக்கு தேசியத் தலைவரின் நன்றி: நோர்வேயில் தமிழ்ச்செல்வன் தகவல்

16 மார்ச் 2005,

தமிழர் தாயகத்தை ஆழிப்பேரலை தாக்கி அழித்தபோது பாதிக்கப்பட்ட மக்களுக்காக உலகம் முழுமையிலும் நிதிகளையும் பொருட்களையும் வேகமாகத் திரட்டி தாயகத்துக்கு அனுப்பிய புலம்பெயர் தமிழ் உறவுகளுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் நன்றியைத் தெரிவித்துள்ளார். நோர்வே பேகன் நகரில் புலம்பெயர் தமிழ் மக்களைச் சந்தித்து கலந்துரையாடிய தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தேசியத் தலைவரின் நன்றித் தகவலை அறிவித்தார்.

### யேர்மனியில் விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக்குழுவினர்

16 மார்ச் 2005,

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக்குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தில் சுவீடன் தலைநகர் ஸ்ரொக்கூமிலிருந்து 16.03.2005 அன்று காலை 9.05 மணிக்கு யேர்மனியின் தலைநகர் பேர்லினுக்கு வருகை தந்திருந்தனர். யேர்மனிக்கு வருகை தந்த இவர்கள் யேர்மனிய வெளிநாட்டமைச்சுடனான சந்திப்பிலும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடனான சந்திப்பிலும் பங்கேற்றனர்.

### இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் தமிழரின் இயல்பு வாழ்க்கை முடங்கிக் கிடக்கிறது: சுவிஸ் சந்திப்பில் சு.ப.தமிழ்ச்செல்வன்

23 மார்ச் 2005,

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை, சட்டம் என்பன விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒழுங்காகப் பேணப்படுகின்றது. ஆனால் தமிழீழத் தாயகத்தில் இராணுவ ஆக்கிரமிப்புப்பகுதியில் இது பிரச்சனைக் குரியதாக இருக்கின்றது என தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். சுவிற்சர்லாந்தின் வெளிவிவகாரத் தூதுவர் தோமஸ் கிறிஸ் மிங்கர் தலைமையிலான உயர்நிலைக் குழுவுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஆழிப்பேரலையில் பின்னான சமாதான முன்னெடுப்புக்கள், புனர்நிர்மாண மீள்குடியமர்வு, அபிவிருத்திக்கான முன்மொழியப்பட்ட இணைந்த பொறிமுறையின் தற்போதைய நிலமை குறித்து சந்திப்பின் போது சு.ப.தமிழ்ச்செல்வன் விவரித்தார்.

### தமிழீழ அரசியல் விவகாரக்குழுவினருடன் ஒஸ்ரிய வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் சந்திப்பு

24 மார்ச் 2005,

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக்குழுவினருக்கும் ஒஸ்ரியாவின் வெளிவிவகாரங்களுக்கான சமஷ்டி அமைச்சின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு 24.03.2005அன்று நடைபெற்றுள்ளது. ஒஸ்ரிய வெளிவிவகார அமைச்சின் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற இச்சந்திப்பில் அந்நாட்டின் மனிதாபிமான உதவிகளுக்கான அமைப்பின் தலைவர் பிரான்ஸ் ஹோர்ல் பேர்க்கர் உட்பட முக்கிய பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஆழிப்பேரலையால் உருவான சூழ்நிலையை சமாதானத்துக்குச் சாதகமாக பயன்படுத்தாத கொழும்பு: ஒஸ்ரியோவில் தமிழ்ச்செல்வன்

25 மார்ச் 2005,

ஆழிப்பேரலை உருவாக்கிய சந்தர்ப்பத்தைச் சமாதான முன்னெடுப்புகளுக்குச் சாதகமாக சிறீலங்கா அரசு பயன்படுத்தவில்லை என்று ஒஸ்ரியோவில் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். வியன்னா அமைச்சரவை வளாகத்தில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர், ஒஸ்ரிய வெளிநாட்டலுவலகளிற்கான சமஸ்டி அமைச்சக மனிதநேய உதவிகள் திணைக்களத் தலைவர் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

### தமிழீழ தேசிய தொலைக்காட்சியின் ஒளிபரப்பு சேவை தொடங்கியது!

26 மார்ச் 2005,

தமிழீழ தேசியத் தொலைக்காட்சி 26.03.2005 அன்று தன் சேவையை தொடங்கியது. ஐரோப்பாவில் ரி.ரி.என் தொலைகாட்சியூடாக 26.03.2005 அன்று இரவு தாயக நேரம் 11.30 மணிக்கு தனது சேவையை தமிழீழத் தேசியத் தொலைக் காட்சி ஆரம்பித்தது. தமிழீழ தாயகத்தின் தேசியக்குரலை வெளிப்படுத்துகிற ஒளி ஊடகமாக தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி தன் சேவையை ஆரம்பித்தது. தமிழீழத் தேசியப் பூவான கார்த்திகைப் பூவை மையமாகக் கொண்டு தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் இலச்சினை உருவாக்கப்பட்டுள்ளது.

### வவுனியா: விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகம் மீதுகுண்டு வீச்சு - மூவர் படுகாயம்!

28 மார்ச் 2005,

வவுனியாவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவட்ட அரசியல் துறை அலுவலகம் மீது 28.03.2005 அன்று அதிகாலை 5.50 மணியளவில் கைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. தொடருந்து நிலைய வீதி வைரவ புளியங்குளத்தில் இந்த அலுவலகம் அமைந்துள்ளது. 28.03.2005 அன்று காலை நடத்தப்பட்ட இத்தாக்குதலில் அரசியல் துறை பணிமனையின் பணியாளர்களான தாமரை செல்வன், நவாஸ் என்ற இருவரும் காயமடைந்துள்ளனர்.



### சர்வதேச அமைதிக்கான பேராசிரியர்கள் குழுவினருடன் தமிழீழ அரசியல் விவகாரக் குழு சந்திப்பு

27 மார்ச் 2005,

ஐரோப்பிய நாடுகளில் பயணம் மேற்கொண்ட தமிழீழ அரசியல் விவாகரக் குழுவின் பிரதிநிதிகள் ஒஸ்ரியாவில் சர்வதேச அமைதி முயற்சிகள் தொடர்பான முதுபெரும் கல்வியாளர் பேராசிரியர் ஜோகன் ஹால்டங்க் தலைமையிலான குழுவினரை சந்தித்துப் பேசினர். தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் மார்ச் 27 ஆம் திகதியன்று ஒஸ்ரியாவின் ஸ்டேட்செலய்னிங்கில் உள்ள சர்வதேச அமைதி முயற்சிகள் தொடர்பான நிறுவனத்தில் இச்சந்திப்பை மேற்கொண்டனர்.

### சிறீலங்கா அதிரடிப்படையினரின் தாக்குதலில் அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் படுகாயம்!

28 மார்ச் 2005,

அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் உட்பட நான்கு போராளிகள் சிறீலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் 28.03.2005 அன்று தாக்கப்பட்டனர். இந்தச்சம்பவம் திருக்கோயில் பிரதேசத்தில் உள்ள மண்டானா அகதிமுகாமில் நடந்தது.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

### பின்லாந்தில் தமிழீழ அரசியல் விவகாரக் குழு

29 மார்ச் 2005,

பின்லாந்தின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் ஆசியாவிற்கான தூதுவர் மிக்கோ பைகலா தலைமையிலான குழுவை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினர் மார்ச் 29 ஆம் திகதியன்று சந்தித்துப் பேசினர். இச்சந்திப்பின் போது பேசிய தூதுவர் மிக்கோ, ஆழிப்பேர லைக்குப் பிந்தைய மீளமைப்புப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதை பின்லாந்து ஊக்குவிப்பதாகவும் பொதுக்கட்டமைப்பை இனியும் தாமதிக்காமல் உடனே செயல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### அமைதி முயற்சிகளின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்: பின்லாந்து அமைச்சரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன்.

31 மார்ச் 2005,

இலங்கைத் தீவகத்தில் நோர்வே அனுசரணையில் கடந்த மூன்றாண்டு காலம் மேற்கொள்ளப்பட்டு வரும் அமைதி முயற்சிகளின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர் என்று பின்லாந்து அமைச்சர் எர்கி துமியோஜாவிடம், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் கூறினார். பின்லாந்து வெளியுறவுத் துறை அமைச்சர் எர்கி துமியோஜாவை ஐரோப்பிய பயணம் மேற்கொண்ட தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினர் சந்தித்துப் பேசினர். தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான தமிழீழக் குழுவி னர் பின்லாந்து அமைச்சக அலுவலகத்தில் மார்ச் 30 ஆம் திகதி இச்சந்திப்பு நடைபெற்றது.

### ஈழத்தமிழரின் இன்னல் நிலையை நேரடியாக அறிந்துவர விசேட குழுவை அனுப்பக்கோரி ஐ.நா. சபையில் முழக்கம்

01 ஏப்பிரல் 2005,

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் சொல்லொணா துயரங் களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். ஆனால் அவற்றை சிறீலங்கா அரசு கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. அவர்களின் நிலையை நேரடியாக காணச்சென்ற ஐ.நா. செயலாளர் நாயகத்தையும் தமிழர் பகுதிகளுக்கு அரசு அனுமதிக்கவில்லை. ஆகவே ஐக்கிய நாடுசபை தனது விசேட குழுவை சிறீலங்காவுக்கு அனுப்பி அங்கு ஈழத்தமிழர் படும் துயரை அறிந்து அதற்கு நிவாரணமளிக்க வேண்டும். ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 61 ஆவது கூட்டத்தொடரில் 'சர்வதேச ஜனநாயக வழக்கறிஞர் சங்கம்' சார்பில் உரையாற்றிய திருமதி. டீயேற்றி மக்கோனால் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். திருமதி. டீயேற்றி மக்கோனால் தமிழர் மனிதர் உரிமை மையத்தின் சர்வதேச இயக்குனர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

### விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் - பின்லாந்து மனித உரிமை அமைப்பின் பிரதிநிதிகள் சந்திப்பு

01 ஏப்பிரல் 2005,

பின்லாந்து, ஹெல்சிங்கி நகரில் அமைந்துள்ள நாடாளுமன்ற வளாகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. பின்லாந்து வெளிநாட்டு அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த சந்திப்பில், விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சர்வதேச மனித உரிமைகள் அமைப்பிற்கான பின்லாந்து கிளையின் தலைமைப் பொறுப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உல்லா அன்றில்லா அவர்களை சந்தித் தார்.

### கிழக்குத் திமோர் விடுதலைக்கு பங்காற்றிய இத்தாலிய அமைச்சுடன் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆலோசனை

02 ஏப்பிரல் 2005,

ஐரோப்பிய நாடுகளில் பயணம் மேற்கொண்ட தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினர் இத்தாலியில் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச் சக அதிகாரிகளைச் சந்தித்து ஆலோசனை நடத்தினர். வெளியுறவு அமைச்சரகத்தின் ஆசியா ஓசியானா, பசிபிக் மற்றும் அண்டார்ட்டிக்கா பிராந்தியங்களுக்கான துறையின் இயக்குநர் க்ள்யூடியோ பசிபிக்கோவை தமிழீழக் குழுவினர் சந்தித்துப் பேசினர். ரோமின் வெளியுறவுத்துறை அமைச்சக வளாகத்தில் இச்சந்திப்பு நடந்தது.

### பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் மரணமடைந்ததாக வத்திக்கான் அறிவிப்பு



02 ஏப்பிரல் 2005,

26 ஆண்டுகளாக, பாப்பரசராக இருந்த இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அவர்கள் 02.04.05 அன்று மறைந்துவிட்டதாக வத் திக்கான் உத்தியோக பூர்வமாக அறிவித்திருந்தது. இவர் போல ந்தைப் பிறப்பிடமாகக்கொண்ட வர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழீழ காவல்துறையினர் இருவர் வீரச்சாவு

06 ஏப்பிரல் 2005,

வவுனிக்குளம் பகுதியில் தவறுதலான விபத்தினால் 18.06.1996 அன்று தமிழீழ காவல்துறை வீரர் சாவடைந்துள்ளார். தமிழீழ காவல்துறை வீரர் அன்ரனி கமல் (கீரபொன்கலன்-அன்ரனி கமல்ராஜ் (காம்றோட் இரண்டாம் வட்டாரம் ஊர்காவல்துறை தற்காலிக முகவரி அந்தோனியார் கோவிலடி நாவற்குழி யாழ்ப்பாணம்) என்பவரே சாவடைந்தவராவார். 17.06.1996 அன்று அதே பகுதியில் நடந்த தவறுதலான விபத்தினால் தமிழீழ காவல்துறை வீரரான சசிக்குமார் (நவரத்தினம் சசிக்குமார் சோலையா வளவு, தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் தற்காலிக முகவரி கண்டாவளை புளியம்பொக்கணை கிளிநொச்சி) என்பவரும் சாவடைந்தவராவார். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

### திருமலை பூநகர் விடுதலைப்புலிகளின் சோதனை அரண் மீது தாக்குதல்: ஒருவர் பலி!

08 ஏப்பிரல் 2005,

திருகோணமலை பூநகர் விடுதலைப்புலிகளின் சோதனை அரண் மீது 08.04.2005 அன்று அதிகாலை நான்கு மணிக்கு நடத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார். திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளா சி.எழிலன் இதனைத் தெரிவித் தார்.

### தில்லைக்கூத்தனுக்கு நாட்டுப்பற்றாளர் விருது வழங்கி கௌரவிப்பு



11 ஏப்பிரல் 2005,

மேல்மாகாண மக்கள் முன்னணியின் அரசியல் ஆலோசகரும் தமிழ்த் தேசிய பணிக்குழுவின் தலைவரும் பிரபல அரசியல் விமர்சகரும் ஐக்கிய நாடுகளின் சபையின் சவூதி அரேபியா, சிங்கப்பூர் தெற்காசியாவிற்கான துறைமுக தரவியல் விஞ்ஞான துறையியல் முன்னாள் ஆலோசகருமான தில்லைக்கூத்தன் (இளையதம்பி நடராஜா) 08.04.2005 அன்று காலமானார். தில்லைக்கூத்தன் அவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் நாட்டுப்பற்றாளர் விருது வழங்கி கௌரவித்துள்ளனர்.

### சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் 14 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு

11 ஏப்பிரல் 2005,

தமிழீழ விடுதலைப்புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் 14 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் 10.04.2005அன்று வெகுசிறப்பாக நடைபெற்றன. படையணித்தளபதிகளும், போராளிகளும் இணைந்து இந்நிறைவு விழா நிகழ்வினை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தனர்.

### சமாதானத்தை வலியுறுத்தி வவுனியாவில் மாபெரும் எழுச்சிப்பேரணி

11 ஏப்பிரல் 2005,

நிரந்தர சமாதானத்திற்கு தடையாகவுள்ள அனைத்து முட்டுக்கட்டை களையும் உடைத்தெறிந்து சிறீலங்கா அரசாங்கம் சமாதான முன்னெ டுப்பை துரிதப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து 11.04.2005 அன்று வவுனியாவில் நடைபெற்ற மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

www.tamileelamarchive.com



# தமிழீழ ஆவணக் காப்பகம் பதிவுகள்

## விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக்குழுவினர் தென்னாபிரிக்க துணை ஜனாதிபதியுடன் சந்திப்பு

12 ஏப்பிரல் 2005,

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக்குழுவினர் 11.04.2005 அன்று தென்னாபிரிக்க துணை ஜனாதிபதி யேக்கப் சூமாவைச் சந்தித்துப் பேசியுள்ளனர். சந்திப்பின் தொடக்கத்திலேயே ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தென்னாபிரிக்க மக்கள் சார்பில் துணை ஜனாதிபதி தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார். இதனைத் தொடர்ந்து தடைப்பட்டுப் போயுள்ள சமாதான முன்னெடுப்புக் குறித்தும் போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்தும் இன்றைய அரசியல் நிலையின் பின்னணியில் விளக்குமாறு துணை ஜனாதிபதி யேக்கப் சூமா கேட்டுக் கொண்டார். துணை ஜனாதிபதிக்கு தமிழ் மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொண்ட சு.ப. தமிழ்ச்செல்வன், போர் நிறுத்த ஒப்பந்தத்தை பேணி நடப்பதில் விடுதலைப்புலிகள் உறுதியோடு இருக்கிறார்கள் என தெரிவித்தார்.

## நாட்டுப்பற்றாளர்கள் இருவர் சாவு

12 ஏப்பிரல் 2005,

சுகவீனம் சுகவீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் சாவடைந்துள்ளார். நாட்டுப்பற்றாளர் நடராசா தில்லைக்கூத்தன் (இளையதம்பி நடராசா, கரம்பன் ஊர்காவற்துறை யாழ்ப்பாணம், தற்காலிக முகவரி கொழும்பு) என்பவரே சாவடைந்தவராவார். கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக மற்றுமொரு நாட்டுப்பற்றாளர் சாவடைந்துள்ளார். நாட்டுப்பற்றாளர் மணியம்மா சூசைப்பிள்ளை (மார்ஸ்சம்மா மணற்குடியிருப்பு முல்லைத்தீவு) என்பவரே சாவடைந்தவராவார். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## போராளி வீரச்சாவு

12 ஏப்பிரல் 2005,

மட்டக்களப்பு கிரான் என்னுமிடத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி தேசவிரோதிகளினால் சுடப்பட்டு போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். வீரவேங்கை நிவேசன் என்று அழைக்கப்படும் சின்னத்துரை தேவதாசன் (புலிபாய்ந்தகல், கிரான் மட்டக்களப்பு) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தி தென்மராட்சியிலும் கிளிநொச்சியிலும் பொதுமக்களின் ஆர்ப்பாட்டப்பேரணிகள்

12,ஏப்பிரல் 2005,

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பை விரைவாக ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்து 12.04.2005 அன்று சாவகச்சேரியிலும் கிளிநொச்சியிலும் இரண்டு ஆர்ப்பாட்டப்பேரணிகள் நடைபெற்றுள்ளன. 'இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும்', 'யுத்த நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிட்டபடி மக்கள் தமது வாழ்விடங்களில் வசிப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்'. ஆகிய கோரிக்கைள் இவ்ஆர்ப்பாட்டத்தின் போது முன்வைக்கப்பட்டன.

## தென்னாபிரிக்க பேராயர் டுட்டுவுடன் சு.ப.தமிழ்ச்செல்வன் சந்திப்பு

13 ஏப்பிரல் 2005,

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தென்னாபிரிக்காவின் போராட்ட வீரரும், நோபல் பரிசு பெற்றவருமான பேராயர் டெஸ்மன் டுட்டுவைச் சந்தித்தார். 12.04.2005அன்று பிற்பகல் சுமார் ஐந்து மணியளவில் இச்சந்திப்பு நடந்தது. பேராயர் டெஸ்மன் டுட்டு தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர்களில் ஒருவராவார். அத்துடன் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவராவார். இச்சந்திப்பின் போது தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமிழீழ விடுதலைப் போராட்டம், அதன் தற்போதைய நிலைமை, தற்போதுள்ள சமாதானச் சூழல், ஆழிப்பேரலை அழிவு, அதன் மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் போன்றவை தொடர்பாகவும் விளக்கம் அளித்தார்.

## அயர்லாந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சருடன் சு.ப.தமிழ்ச்செல்வன் சந்திப்பு

15 ஏப்பிரல் 2005,

அயர்லாந்தின் தலைநகர் டப்ளினில் தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக்குழுவினர் 14.04.2005 அன்று அயர்லாந்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தியுள்ளனர். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களிற்குத் தனது கவலையைத் தெரிவித்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், ஆழிப்பேரலையின் பின்னான நிவாரணப் பணிகளிற்கான இணைந்த கட்டமைப்பு உருவாக்கப்படுவதே சர்வதேச சமூகத்தை மீள்கட்டுமானப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு வழிவகுக்கும் என்று தெரிவித்தார். சமாதானப் பேச்சுக்கள் நீண்ட காலமாகத் தடைப்பட்டிருப்பது குறித்த தமது கவலையையும் வெளிப்படுத்திய அமைச்சர், இரண்டு தசாப்த காலப் போரைக் கருத்திற் கொண்டால் நிவாரணப் பணிகளிற்கான இணைந்த கட்டமைப்பு நன்மை பயக்கும் எனவும் தெரிவித்தார்.

## கருணா குழு - ஈ.என்.டி.எல்.ப் விஜயன் குழு மோதலில் 9 பேர் படுகொலை!

15 ஏப்பிரல் 2005,

பொலன்னறுவை மாவட்டம் சொறிவில கிராமத்திலுள்ள கருணா குழுவினரின் முகாம் மீது 14.04.2005அன்று நள்ளிரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் கொல்லப்பட்டனர். அண்மையில் இந்தியாவிலிருந்து வந்துள்ள ஈ.என்.டி.எல்.எப். - விஜயன் குழுவினருக்கும் கருணா குழுவைச் சேர்ந்த பிள்ளையான் குழுவினருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடே இச்சம்பவத்திற்குக் காரணமாக இருக்கலாம் என அப்பிரதேச மக்கள் கருதுகின்றனர்.

## திருக்கோவில் பிரதேச செயலாளர் சுட்டுக்கொலை

15 ஏப்பிரல் 2005,

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேச செயலாளர் ஏ.கே.தவராஜா (வயது 40) 15.04.2005 அன்றிரவு 8.00 மணியளவில் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அப்பிரதேசத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு தனது உத்தியோபூர்வ வாசஸ்தலத்திற்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருக்கையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பிரதேசம் என கருதப்படும் திருக்கோவிலில் இச்சம்பவம் இடம்பெற்றிருப்பது பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

## சுகவீனம் காரணமாக போராளி சாவு

16 ஏப்பிரல் 2005,

சுகவீனம் காரணமாக போராளி ஒருவர் 16.04.05 அன்று சாவடைந்துள்ளார். யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சேர்ந்த வீரவேங்கை இயற்கதிர் என்றழைக்கப்படும் விஜயகுமார் விஜிதன் (விஜி) என்ற போராளியே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

நன்றி: புதினம்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை

விடுதலை வேட்கை மிக்க
எழுச்சிப் படைப்புக்கள்,
ஒடுக்குமுறைக்கு எதிரான
ஆவேசக்குரல்,
போர்க்கால இலக்கியத்தின்
யதார்த்தப் பதிவு,
மண்ணின் மணத்தோடு
மன உணர்வுகளை
வெளிப்படுத்தும் உன்னத
இலக்கியமாக எரிமலை



ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

- Tel: 01 - 43 58 11 42
- Fax: (33) 1 43 58 11 91
- e-mail: erimalai@gmail.com
- ERIMALAI,
C/O T.C.C France,
341, Rue Des Pyrenees.
75020 Paris. FRANCE.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com